சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

நாங்கூர்மான்மியமுதலியகூறும்.

# பராசவனபுராணம்.

இது

பிரம்மஸ்ரீ

## சாம்பசிவசாஸ்திரிகளால்

வடமொழியினின்று தமிழில்

மொழிபெயர்க்கப்பெற்று,

ஏ. 6418.

ஷை யூர்

## இராசகோபாலசுவாமிகளால்

சங்கிரகமாக,

சிதம்பரம் சண்முகசுந்தர விலாச அச்சுக்கூடத்தில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை ரூ 1.

1922.

## உபோற்காதம்.

இந்திரன்முதலிய இறைவர் பதங்களும் அந்தமிலின்பத் தழிவில் வீடும் எய்து நெறியறிந்தெய்துதற்குரிய மாந்தர்க்கு பேருதவியென பெரியோராலோதப்படும் விசேட அறவாயில் மூன்று, அவை மூர்த்தி தலந் தீர்த்தமெனப்படும். அவற்றுள் மூர்த்தியாவது படைப்புநாள்முதல் துடைப்பு நாட்டுணையுநிலை யுதலுடைத்தாய் வழிபடுமுறையான் வழிபட்டோர்க்கு வேண்டிய வேண்டியாங்கியும் ஸ்ரீசிவலிங்கவிசேடமாம். எழுவாய், இறுவாய், இடைவாய், கடைவாய், அயல்வாயென்னு மைந்தொழிலானே இவ்வுலகத்தைச் சித்திரிப்பதியாது அஃதிலிங்க மெனப்படும்.

இனி அவ் வைந்தொழில் செய்யு முதல்வனுக்கு திருவுரு இன்றியமையாமையின் அது முத்திறப்படும். அநாதிமுத்தசித் துருவாய் அநற்பஞானத் தொழிலுடைய அம்முதல் வன் பந்தம் வீடு எழுவாய் இறுவாய் அசுவதந்திரம் முத லிய இழுக்குகளிலனாய் சுவதந்திரம் முதலியவிசேடகுண முடை யவனாகலின் அற்பஞானத்தொழிலுடைய அனுதிபெத்த சித் துருவாய நம்மனோரது வடிவுபோலாது ஏகதேசப்படுந்தகு தியில்லாத தனதுசத்தியானே தான் நினைந்ததொரு திருவுருக் கோடலொரு தலையாம். அஃதேல் அவ்விழுக்குகளிலனாய அம்முத ல்வன் உருவின்றி நின்றே எத்தொழிலுஞ் செய்ய வல்லுமன்றே.

அஃதாக உருக்கோடலாற்போதும் பயனென்னை யெனின்: கூறுதும், உயிர்வர்க்கமூன்றனுள், பின்னையவிரண்டும் முறையேமுன்னிலைபடர்க்கையிட மிரண்டினின்று அறிவிப்பஅறி வனவன்றி பிறவாற்றான் அறியப்பெருமையின் அவைபொருளி யல்பறிந்து வீடுபெறுமாறு நிகமாகமங்களைக்கோவைபுறச்செய் தற்பொருட்டும், அவற்றைக்குருபரம்பரையின்வைத்துணர்த்தற் பொருட்டுந் திருவுருவொருதலையான் வேண்டப்படுமாறறிக. இனி, அஃதுயிர்ப்பொருட்டெடுத்ததோர் அருளுருவாகலின் அவன் சிந்தனையினும் அசிந்தனேயாதலறிக. அஃதேல்மனமொழி மெய்கட்கெட்டாப்பொருளாயஅவன், திருவுருக்கொள்ளுமாயி னும் சுத்ததத்துவபுவனத்து வைகுமன்றி இவ்வுலகின் வைகுத

லின்மையின் அவனை ஈண்டுள்ளார்கண்டு வழிபடுமாறெங்ஙனமெ னின், கூறுதும். சதாசிவதத்துவத்து வைகு முதல்வன், புறத் தேதிருக்கோயிலுள் வைகுந்திருவுருவும், திருவேடமும், இட மாக்கொண்டுநின்றும் அகத்தேஉயிரிடமாக்கொண்டுநின்றும் ஈண்டுள்ளார் செய்யும்வழிபாட்டை ஏன்றுகொண்டருளும். ஆக லின் அம்முறையறிந்து அவ்விடங்களின் வழிபடப்படுமென்றறிக. அவன் இவ்வாறு சத்திக்கட்டோன்று முருவனைத்தும் தானுத் தோன்றி, தம்முள் வேற்றுமையின்றி நின்றருளும். ஆகலின் அம்முதல்வன் இவ்வாறு சத்திசிவமென இருவேறு திறப்படுமிய ல்பு கோடலானன்றே பலவேறுதிறப்படும் உயிரனைத்துங்குறி குணம்பற்றி ஆடூஉமகடூஉவென இருவேறுதிறமாய் அடங்கித்தம் முளியைந்து இன்புற்றுவாழும். ஆகலின் இவ்வாழ்வனைத்துஞ் சிவசத்திகள் தம்முளியையுமியைபுபற்றி பெற்றவாழ்வென்ப தறியப்படும். அச்சனைத்தும் இலிங்காங்க பகாங்கமாமாறு சிவ சத்திகள்தம்முள்கொண்டருளும்பீடலிங்கத்திருவுருவே, அவ்வா று இருவேறுதிறமுறவைத்ததனை கண்கூடாய்க்காணச்செய்தல் சான்றுதலறிக. இஃதுணராதுபிணங்கும் அறிவறைபோயினூர் எனகடவர்; அம்மடவோர்க்கு ஒருவாற்றானும் உணர்த்தும்வாயி லின்றென்றொழிக. இஃதாகலின் அத்திருவுருமூன்றும் பொருள் பற்றித்தம்முள்வேற்றுமையின்மையின் நம்மனோர் கருமவுருவொ ழித்தற்பொருட்டுஎழுந்ததிருவுருவாதலறிக. அஃதேல்அஃதஃதா தலெங்ஙனமெனின் கூறுதும். கூறுமாறு உலகத்தோடொட்டஒ ழுகுமொழுக்கமுதலியநன்மையுடையனுய்அவற்றைமறுதலைத்ததீ மையொழித்தொழுகும் ஒருவனுக்குத் தன் கருத்துக்கியைந்த தொருதெய்வத்தைமனமொழிமெய்களான் வழிபட்டுவாழுந்தொ ழிலாயவறமுமுளதாயின்,முன்னைப்பழம்பொருட்குமுன்னைப்பழம் பொருளாயபரமசிவனே, அத்தெய்வத்தினிடமாகின்று, அத் தொழிலையேன்றுகொண்டு பயனீயுமென்றறிக. அஃதேல் வழி பட்டார்க்கு வழிப்படப்படும் அவ்வத்தெய்வமே பயனீயவல்லு மெனிற் படுமெழுக்கென்னையெனின், கூறுதும். கூறுமாறு. நால்வகை கயோனியின், ஒன்றன்பாயூப்பட்டுத்தோன்று வனயாவை அவையனைத்தும் பசுவர்க்கம், அங்ஙனந்தோன்றுப் பொருள்யாது அஃதப்பசுபதியென்னுமிஃதோன்றே எனைத்தொ

ழிலான் வேற்றுமையுணரமுடியாத அவ்விரண்டற்குந்தம்முள்
வேற்றுமையுணர்தற்குரியதொருவேது, ஆகலின் இங்ஙனந்தோ
ன்றித்தோன்றுப்பதியாற் பயனெய்துமத்தெய்வமாயபசுக்கள்,
பிறர்க்குப்பயனீதலிழுக்காகாமையாங்ஙனமென்றிருழிக. அஃ
தேல், பயனீயுமப்பசுபதியாவது திருமால்முதலிய தேவர் பிற
ருள் ஒருவரெனக்கோடுமெனின், அறியாதுகூறினுய், அத்திரு
மால்முதலிய தேவரனைவரும், வினைத்தொடக்காற் பிறந்திறக்கும்
பசுக்களாதல், பெருவாவுபற்றி நிகமாகங்களாற் கேட்கப்படுத
லானும், பரமசிவனுக்கு அஃதுண்டென்பதுயாண்டானும் கேட்
கப்படாமையானுஞ் சிவபரம்பொருளொன்றே வினைவயப்படாது
அவ்வத்தேவர்கண்ணுகநின்று உயிர்கட்கு அவற்றையுணர்ந்து
கூட்டவல்லும், ஆகலின் அதுவல்லாதபசுவாயபிறதெய்வம், பசு
பதியாதல் யாண்டையதென்றுழிக. இஃதாகலின் எனைத்தே
வர், அதுசெய்யவல்லரல்லாதல்தானே போதருமென்க. அஃ
தேல், ஒருவரைவழிபடப்பிறரொருவர் பயனீதல் இவ்வுலகிற்கண்
டிலமாலெனின், அறியாது கடாயினுய், பசுபார்ப்பார்தந்தைதா
யர்முதலியோரை இம்மையின் வழிப்பட்டார்க்கு அப்பயனீயுந்
தெய்வம், அவரின் வேறென்பது எவர்க்கும் ஒப்பதொன்றன்றே,
ஆகலின் அதுகாணுமையாங்ஙனம் ஆகலின் இதுவும் அதுபோற
லமையுமென்றுழிக. அஃதேல் தம்மைவழிபட்டார்க்கு அவ்வத்
தெய்வமேதோன்றி நின்றுபயனீயுமெனவும் நிகமாகமங்களாற்
கேட்கப்படுதலின் அவையுமதற்கு வல்லுநவோவென்றையமெய்
தற்க, என்னை, அரசனாணையே அமைச்சர் முதலியோர்மாட்டும்
வைகிப்பிறர்க்களிக்குமாறுப்ப, சிவபரம் பொருள்தன்னாணையை
த்தன்னேவல்வழி நிற்கும் அவ்வத்தெய்வக்கண்வைத்துப்பயனீயு
மாகலின். அஃதன்றி தாமேவினைத்தொடக்குற்றுப்பாதந்திராய
அவர், பிறர்க்குப்பயனீயுமாறியாங்ஙனமென்றுழிக.

இதுகாறும் கூறுமாற்றான், எனைத்தேவர்பாற் செய்யும்
வழிபாட்டையும் ஏன்றுகொண்டுபயனீவோன், பசுபதியாயபரம
சிவனேயென்பது பெறப்படும், படவே அவனுயமூர்த்தியைவ
ழிபடுதலே நல்லதோர் அறமும் அவனைவழிபடாது பிறரைவழி
படுதல் வீண்தொழிலென்பது பெறப்படுதலானும், அறமாவது
நிகமாகமங்களின் அம்முதல்வனுல் விதிக்கப்படும் விதியாகலானும்

ஒன்றினு விருப்பிலனும் உயிர்கள்பா லிரக்கம்வைத்து விரும்புமூர்த்தியாய அம்முதல்வன் றிருவுருவை வழிபடும் வழிபாடொன்றே ஒருதலையாற் செயற்பாற்றென்றறிக. அஃதேல், சராசரமயமாய இவ்வுலகு தேவதேவன்றிருவுருவாம் பசுக்கள் பாசமே வீடுபற்றி இம்முறையறியா அறிவறியாமை என்னும் இருவேறுதிறப்படுமிவ்வுலகனைத்தும், வியாபகமாயலோகபிதாவின் றிருவுருவாம், இஃதையமின்றும் இவ்வுலகெல்லாம் அவன் வசமாகலான், என்னும் இன்னோ ரன்னபுராணவோத்தினும், நின்ற திருத்தாண்டகவோத்தினும், இவ்வுலகெலாமவனுருவெனக்கூறப்படுதலானும் திருவுருத்திறத்துள், பகுப்பின்றி சராசரமனைத்தையும், தனித் தனி யெடுத்தோதி வழிபாடுகூறுதலானும் ஈண்டு; இம்மூர்த்தியொன்றனையே சிறந்தெடுத்தோது லென்னை யெனின், கூறுதும் கூறுமாறு, மரத்தினடியிற்சொரியு நீரானே அதன் சாகையனைத்தும் வளர்தல் ஈண்டுக்கண்டாமன்றே, அஃதொப்ப, அம்மூர்த்தி வழிபாடொன்றானே அம்மூர்த்தியெனப்படும் முதல்வன்றிருவுருவாய, இவ்வுலகமனைத்தும் மேன்மேற் பெருகிப் பரவி வளருமென்றறிக, அன்றியும், பசுவின் உருவனைத்தும் வியாபித்தபால் அதன் முலையுழப்பொன்றானே வெளித்தோன்றுமன்றே. அஃதொப்ப, திருக்கோயிலுள்வைகுந் திருமூர்த்தியின் மாட்டேயே எங்குமுருவறியப்பெறாத பரமசிவன் வெளித்தோன்றி நின்றுகொண்டருளும், ஆகலின் அத்திருமூர்த்தியினன்றி அடிப்பட்டு நிகழும் அன்புநிகழாமையின், அம்மூர்த்திபாற் செய்யும் வழிபாடொன்றே, நம்மனோர் கருமவுருவொழித்தற் கேதுவாய் சுத்தாத்துவிதவறிவை நிலைபெறச் செய்து பந்தமொழித்து முத்திபயப்பதொருதலையாதலறிக. ஈண்டு வழிபாடென்றது உபலக்கணம் என்னை வீடுபேற்றிற் கேதுவாயசிவாலயத்திருப்பணி முதலிய எனைச்சிவபுண்ணியங்களும் அடங்கலின்.

இனித்தலமாவது தன்மாட்டுப்பிறத்தல் வசித்தல் முதலியசெய்யுமுயிர்க்குவீடுபேறுபயப்பதொருநிலவிசேடமாம்

இனித்தீர்த்தமாவது தன்கண்வந்து ஆடுதல் பருகுதல் தீண்டுதல் முதலியசெய்யுமுயிர்க்கு வீடுபயப்பதொருசலவிசேடமாம்

அஃதேலஃதஃதாக, இம்மூர்த்தி முதலிய மூன்றும் அறவாயில் பிறவற்றின் விசேடவறவாயிலாமா றென்னையெனின் கூறுதும், படைப்புக்காலத்து முதல் வன்மூர்த்தி, தலம், தீர்த்தமென்னும் மூவுருவெய்தும். எய்தி அவற்றுள் முன்னையது எழுந்தருளி ல்வைகுதற்குரிய ஆலயமாக்கல் பூசித்தல், நேசித்தல், தரிசித்தல், பரிசித்தல்; வாழ்த்தல், சூழ்தல் முதலியசெய்யப்படுதலானும். பின்னையது தன்பால் தோன்றல், மரித்தல், காண்டல், நினைத்தல், வாழ்தல் முதலியன செய்யப்படுதலானும், ஏனையதன்பால் மீன்முதலிய வாய் அவ்வாறு செய்யப்படுதலானும் அதன்பால் மாந்தர் முதலியோர் ஆடல்; தொடல், பருகுதல், தரிசித்தல் முதலியனசெய்யப்படுதலானும் அதுபாய்ந்து விளைந்த நெல்முதயவற்றை நுகர்தல் முதலியன செய்யப்படுதலானும், சிவலிங்கமூர்த்திக்குத்திருப்பணி, அருச்சனை, அபிடேகம். அலங்காரம், நைவேத்தியம், முதலியவைக்குரிய மரம், பசு, நெல் முதலியவாகத்தோன்றப்படுதலானும் திருப்பணிக்குரிய மரமுதலியவாகப் பெறப்படுதலானும் இன்னுமின்னோரன்ன பிறவாற்றானும வீடு பயத்தற்கேதுவாய சிவபுண்ணியங்களை யீயுமாறறிக. பிறவுமன்ன அஃதிஃதாகலின் மூர்த்தி தலம் தீர்த்தமாயவிசேடவறவாயின். மூன்றனையும் அறிதல் உயிர்கட்கு இன்றியமையாமை ஒரு தலையாதலறிக, ஆகலின். அம்மூன்றும் இந்நூலுள் சிறந்தெடுதோதப் படுமாறறிக.

முற்றிற்று.

# சிறப்புப்பாயிரம்.

கணபதி துணை.

பாரகமாவனமாதும்பன்னிருநற்சிவாலயங்கள்பயிலுநாங்கூர்ப்
புராணநூறமிழ்மொழியினியல்வித்துச்சங்கிரகப்புதுநூல்செய்தான்
இராசகோபாலன்மனையிதமோநவிவிண்டுமதமோநவிமேலாம்
பராபரனேசிவனெனத் தேர்பண்பனெனநண்பனாரேனெண்பன்மாதோ

மெய்கண்டதேவருரைமுக மாணாக்கன்,
சிவஞானத்திருத்தளி.
ஸ்ரீ சிதம்பரம்.

பூமாதுகொழுநனாபுண்ணியனைமுன்றளிற்போற்றுநாங்கூர்
மாமாவின்முகத்தானையீன்றநளெம்மான்கனவின்வந்துதோன்றித்
தேமாவின்பொழில்சூழத்தலநூலொன்றுளதாதல்தேற்றவோர்ந்து
காமாதிதூரத்தான்மாமலர்ப்பாதங்கனவினிலுங்கருதுந்தூயோன்

பொங்கியநல்லறிவுடையராசகோபாலமுனிபுரிந்துதேடி
மங்கலநற்புராணம் வடமொழியஃதித்தமிழ் மொழியின்மாந்தரோர்ந்து
மங்கலிலாப்பயன் மருவாரெனத்தமிழினுக்கிமகிழ்பலர்க்குமீந்து
பொங்காவமணிந்தசிவனடிசேரும்புகழங்கள்பொருந்தினனே

ஆடூர் பெரியசாமிப்பிள்ளை.
சிவஞானத்திருத்தளி.
ஸ்ரீ சிதம்பரம்.

ஊர்த்தோகையுரைக்குமுயர்தனிநாங்கூர்த்தளியினுட்சிலதளிசிதையப்
பார்த்தகப்கிரங்கிப்பள்ளிகொள்பொழுதிற்பரமனூர்கனவிடைத்தோன்றி
மாத்தவர்க்கருளுங்காதைகள்பல்லமருவுமித்தலபுராணத்தைச்
சீர்த்தமிழுலகர்தெரிதரச்செய்யிற்சிதைதளிபுதிதெழுமென்ன

தந்தையின்முறைகளமர்தருகாலை சாருமத்தலபுராணத்தை
விந்திடக்கொணர்ந்து தமிழினச்சின் விளக்கினனிவனெவனெனின்விஞ்
மந்துகாமாபன்மனைப்புறந்துறந்துவைணவந்தணந்துநற்சைவந்
துத்திடப்புகுந்தராஜகோபாலனாயர்பெருந்தவத்தினன்மன்னே

ஆடூர் கணபதிப்பிள்ளை.
சிவஞானத்திருத்தளி.
ஸ்ரீ சிதம்பரம்.

சிறப்புப்பாயிரம்.

# ஸ்ரீலஸ்ரீ
# சுவாமிநாதபண்டிதரவர்கள்
## இயற்றியது.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விண்மணக்கும் வியன்றருவு மிளிர்மணியு மிகுநிதியும் வியந்து நோக்கி
மண்மணக்கு மகிமைமிகுவளர்பொழிலும் வான்மணியும் வளமும்வாய்ந்து
கண்மலைக்குங் கவின்சிறந்து கதிர்வளர்க்குங் காவிரிநீர் கஞலிப் பாய்ந்து
தண்மணக்குஞ் சலநிதியைத் தான்மணந்து தன்மணத்தைத் தருசோணாட் [டில்.

ஓங்கூரே பொனிர்காசி யோரேழென் றுரைத்திடினு மும்பர் போற்றிப்
பாங்கூரே பலவூருப் பதிட்டைபுரி பழையசிவப் பதிவ மோங்கும்
ஆங்கூரே யனைமழுவ னாலயங்க ளாறுறு மடங்கப் பெற்ற
நாங்கூரே மவிலூரி னலஞ்சிறந்த நானிலத்தி னவிலுங் காலே.

அந்தலத்தி லரன்றளிக ளதிகவில மடைந்தமைகண் டாற்று நெஞ்ச
வித்தகன்செய் விழுத்தவத்தின் விசேடத்தான் மெய்யருளை மேவியத்தாற்
சித்தநிலை சேரன்பு சிவனடியிற் செறிதலின்றூற் சேர்ம தத்தைத்
தத்துவயர் சைவநெறி சார்ந்துநின்று திருநீறுந் தரித்த சான்றோன்.

நல்லறமே யன்றெனினு நற்றுறவு நன்றாய்ந்து நம்வெண் காடர்
இல்லறத்தோன் றனிற்கோடி யேற்றமுள னில்லில்லா னென்பதோர்ந்து
சொல்லறமே தூயதெனத் துணிந்ததனைத் துரிசறவே தூக்கி நோக்கி
இல்லறத்தி னிடர்ப்படலை யிகந்துற்ற வேற்றதுற வறத்தோ ரிந்நாள்.

மாபாலன் மனப்பாலன் மகிழ்ப்பாலன் மதிப்பாலன் மலர்ப்பாலன்பன்
கோபாலன்கோபாலன்குணப்பாலன்குறிப்பாலன்கொடைப்பாலின்பன்
பூபாலன் புகழ்ப்பாலன் பொருட்பாலன் பொறைப்பாலன் புனிதநேச
கோபாலன் குறிப்பாலா லமைப்பாவின் கோதில்பணி குறித்துச் சூழ்ந்து.

சிதம்பரநா தன்பதத்தைச் சிந்தைநிறீஇ யன்பென்றுஞ் சிதைத லின்றி
இதம்பெறவே முன்பொதுமு னெழிலாரு மண்டபமொன் றியற்றி நாளுஞ்
சதம்பெறுமா தன்காழித் தளிப்பணியுந் தனிமுல்லைத் தளியுந்தான்செய்
சிதம்பரநா தன்றருமர் திகழ்கழக மதனுஞ் சிறப்பிற் நேர்ந்தும்.

# சிறப்புப்பாயிரம்.

திருநாரா யணன்பதத்தைச் சிந்தையுறீஇ யன்புசெயுஞ் செய்கை யாலே
ஒருநாளு மொழியாதே யுற்றவர்க ளுண்ணவன்ன முதவி மிக்க
பெருநாமம் பெற்றுநனி பிறதருமங் கட்குமிகு பெட்பி னீயுந்
திருநாரா யணபிள்ளை செய்தருமச் சிறப்பனைத்துஞ் சிந்தை செய்தும்.

வேறு

கார்த்திகை யிருட்பிற் றோன்றிக் கலைவலோர் கருத்தூட் டங்கி
ஆர்த்திகை யிகவர் தென்று மனைவர்க்கு மிதமே செய்து
சீர்த்திகை யுறவே யிந்து சிவனடிப் பத்தி செய்யும்
நேர்த்திகை மிகுந்த சோம சுந்தர னிலைமை யோர்ந்தும்.

வேறு.

நெப்பத்தான் கமலத்தா னேருந்தா னடேசைய னிலைமை யெல்லாஞ்
செப்பத்தான் பணிக்குத்தான் றெளியத்தான் சித்தத்தாற் றெரியாதென்று
மெய்ப்பத்தானியருந்தான் வியப்பத்தான் விளம்பத்தான் வினவித்தானே
ஒப்பத்தா னேரிற்று னுணர்ந்துதான் கண்டுரத்தா னுண்மையோர்ந்தும்,

வேறு.

சித்திகள் சிறக்கச் செய்யுந் திருச்செம்பொன் பள்ளி சேர்ந்து
யுத்தியி னூரக னோட்டி யூங்குறு சிவால யத்திற்
சித்திரா விழாவைச் சீராய்ச் செய்திடுந் தெளிவு வாய்ந்த
வைத்திய நாத தீத மறையவன் வண்மை தேர்ந்தும்.

வேறு.

இன்னவரே யித்தரும மியற்றிமுடித் திடுவரென வெண்ணித் தேர்ந்தே
மன்னவர்பான் மதித்துற்று மனக்கருத்து மற்றனைத்து மகிழ்ச்சி கூர்ந்து
பன்னவவர் பலமுறையும் பரியதொகை பகுத்துமெனப் பகர்ந்து பின்னாச்
சொன்னதலமான்மியத்தைச் சுருக்கியச்சிற்றருகவெனச் சூழ்ந்துசெ..ற்றார்

மன்னகர வைசியரும் மற்றுமுள புண்ணியரும் வழங்கிச் செம்பொன்
தென்னவெனச் சிவதருமஞ் செய்துசிவ னருள்பெற்றுச் சிறந்து வாழ
அன்னதல மான்மியத்தை யவ்வாறே யச்சியற்றி யன்பி னீந்தான்
சொன்னமிகுந் துளராச கோபால சுவாமியெனுந் தூயன் றானே.

முற்றிற்று.

## சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்.

தேங்கூருந்திருச்சிற்றம்பலஞ்சிராப்பள்ளி
பாங்கூரெங்கள் பிரா னுறையுங்கடம்பந்துறை
பூங்கூரும்பரமன்பரஞ்சோதிபயிலுமூர்
நாங்கூர்நாட்டுநாங்கூர்நறையூர் நாட்டுநறையூரே.

தாங்கூர்பிணிநின்னடியார்மேலவகல்வருளாயே
வேங்கூருறைவாய்விளமர்நகராய்விடையார்கொடியானே
நாங்கூருறைவாய்தேங்கூர்நகராய்நல்லூர்நம்பானே
பாங்கூர்பலிதேர்பரனேபரமாபழனப்பதியானே.

## தோத்திரம்.

சுமுகனே யேக தந்தனே கபிலன்
சொலுகெச கனன்கெசா னன்னே
அமுதமன் னிலம்போ தரனொடு விகட
னருமிடை யூறுதீர்த் தருள்வோன்
சமியின் கணேசன் றூமிர கேது
தருகணத் ததிபன் மேலு
மெயினுறை பால விந்தனிப் பன்னி
ரிரும்பெயர்ப் பொருளையேத் திடுவாம்.

அழகிய வீசன் பொன்னக ரீச
னருங்கயி லாயநல் வீசன்
பழகிய வனேசன் பத்தவற் சலேசன்
பகர்மதங் கேசனன் னயனம்
விழைவினீ யீசன் கவிவிரும் பீசன்
வெள்ளயி ராவத வீசன்
குழகி ஞகேச னமிர்த புரேசன்
குறியோ க்கீசனீ ராமே.

இந்நில வுலகிற் சிறந்திடு காங்கூ
ரென்னுமித் தலத்தினின் வைகிப்
பன்னிரு பரிதி யென்னவே யுயிர்கள்
பயனிரண் டெய்திட வருள்க
நல்லயச் சைவ மேசைவ நூல்க
ளோட்டாறும் விருத்தி செய்திடுக
பன்னிரண் டாய சிவாலய முன்போற்
பணிமுடித் தருளுக மாதோ.

### வேறு

தில்லைதிருக் காஞ்சிநகர் மதுரை சேது
செப்பரிய காசிதிருக் கடவூ ராரூர்
சொல்லரிய திருவண்ணா மலையா னைக்கா
சுடர்கண்ணன் காளத்தி முதலாங் தூய
நல்லசிவ தலங்கடம்மிற் செய்யும் வேள்வி
நல்விரதஞ் சிவபூசை தான நாங்கூர்
எல்லையினிற் செய்யிலெண் மடங்கு மேலா
மிறையாணை யிதுவுண்மை யியம்பி னேமான்

சிவமயம்.

# பராசவனபுராணம்.

## மதங்கமுனிவர் அருள் பெற்றவரலாறு.

---

முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் திருவருளினால் மாயையினின்றுந்தோன்றிய உலகம் யுகமுடிவு பெறுங்காலத்து ஜலப்பிரளயத்தால் முழுகிநிற்க பிரமாதிதேவர் மூவரும் மீண்டும் உலகசிருஷ்டி செய்யவேண்டி சிவபெருமானைக்குறித்து அருந்தவம் புரியுங்காலத்து பிரம்மாவானவர் பரம்பொருளைக் கஜாகார ரூபமாகத்தியானிக்க அப்பொழுது அப்பிரமாவினுடைய மனத்தில் நின்று ஒரு முனிபாலர் தோன்றினர். அம்முனிபாலருக்கு மதங்கரெனப்பெயரிட்டு நீ பூவுலகத்திற் சென்று சிவபெருமானைக்குறித்து அருந்தவம் புரிவாய் என்று கட்டளையிட, அம்முனிபாலர் தந்தையின் கட்டளையைச் சிரமேற்கொண்டு பூவுலக முழுதுந் தேடியும் ஜலப்பிரளயத்தால் இடமில்லாமல்ஆகாயத்திலேயே சஞ்சரிக்கும்பொழுது நாரதமுனிவரைச்சந்தித்து அவரிடம் தமது எண்ணத்தைத் தெரிவிக்க அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்து சொல்வாராயினர். "இரண்டாயிரம் சதுர்யுகங்கொண்டது பிரமாவுக்கு ஒரு தினம். இப்படி நூறு வருஷம் ஜீவித்திருக்கின்ற பிரமதேவர் ஐக்கியமடைந்ததும், சுத்தசத்துவபூமியும், அநேக முனிவர்களுக்கு வாசஸ்தானமாய் உள்ளதும், மகரப்பிரளயகாலத்தும் அழிவில்லாததும், எண்ணிறந்த பராச விருக்ஷங்கள் நிறைந்திருப்பதுமான ஒரு க்ஷேத்திரம் இப்பூவுலகத்தில் இருக்கின்றது. அது சுவேத வனம் என்று கூறப்படும். நீ ஆகாய மார்க்கமாகச் சென்றால் அப்பராச மரத்தைக்காண்பாய். கண்டு அவ்வழியாக ஒரு யோஜனை தூரம் உள்ளே சென்றால் நீர் வியாபித்தலின்றி சுத்தவெளியாய்த் தோன்றும் அவ்விடத்தையடைவாய். அடைந்து தங்கி பரசிவபெருமானைக்குறித்து தவம் புரிந்தால் வேண்டும் வரங்களைப்பெறுவாய்" என்றருள;

அம்மொழிப்படியே மதங்கமுனிவர் பாரசமரத்தைக்கண்டு உள்ளே சென்று அளவில்லாத காலம் அருந்தவம்புரிந்து துரியாதீத நிலையை அடைந்து, நிரோத சித்த பூமியில் நிற்கும்பொழுது ஏகாக்ரசித்த பூமியின்மேல் நிலையிலுள்ள அவ்வியாகிருதரூபிணியான துரிய மாயையானவள் ஐந்தாம்நிலையிலுள்ள மதங்கமுனிவரை மோகமுடையவராகச் செய்யக்கருதி, உலகத்தாரனைவரையும் வசப்படுத்தக்கூடிய பேரழகும் பதினாறு வயதுடைய யௌவன சொரூபமும் உடையவளாய் சகலாபரண வஸ்திரங்களுமுடையவளாய் வீணையைக்கையிற்கொண்டு இனிய இசைகளைப்பாடி அவர்முன் நிற்க, அம்மோகினிக்கு சகாயமாய் வசந்தனோடுகூடி வந்த மன்மதனும் ஐந்துவகைப் புஷ்பபாணங்களைப்பிரயோகஞ் செய்யக்கண்ட முனிவர் சமாதி நிலைகலைந்து வசந்தனைப்பார்த்து நீ மோகினி மன்மதனாகிய இருவருடைய சகாயத்தால் கொஞ்சமும் அச்சமின்றி என்னுடைய தவத்திற்கு இடையூறு செய்தமையால் உன்னுடைய அதிகார பதவியை இழந்து பூவுலகத்தில் பிராமணவிதவையின் புத்திரனாகத்தோன்றி விஷ்ணு பாஷாண்ட மார்க்கத்தைதழுவி சீவேஸ்வரபேதத்தைப்போதிக்கும் துவைத மதத்தைப்பூமியில்ஸ்தாபிக்கடவாய். உன்மதத்தைக்கைக்கொண்ட மூடர்களும் நரகத்தையடையக்கடவர். உன் மத சித்தாந்தமும் குதர்க்கத்தையே தழுவினதாகுக. என்றுசபித்து பின் மன்மதனை நோக்கி நீ மோகினி ரூபத்துடன் வந்த பெண்ணுக்குச் சகாயமாய் துன்மார்க்கத்தில் பிரவேசித்தமையால் உன்னுடையசரீரமானது உருத்திர மூர்த்தியின் கோபாக்கினியால் அழிந்து அசுரஜென்மம் பெற்று தேவத்துரோகியாகி பெண்ணாலேயே நாசமடையக்கடவாய் என்று சபித்துபின் அவனுடைய வேண்டுகோளால் கோபம் மாறி கருணைகொண்டு நீ பைசாசம்போல சரீரமற்று சிலநாள் கிருஷ்ணனிடத்திலிருந்து மறுபடியும் சரீரத்தையடைவாய் என்று சாபநிவர்த்தியும் சொல்லி மோகினியை நோக்கி சாபங்கொடுக்க நினைத்த மாத்திரத்தே அம்மோகினி சங்கு சக்கரதாரியாய்த் தரிசனங்கொடுக்கக் கண்டுதரிசித்து நமஸ்கரித்து நீர் இப்படி மோகினி வடிவங்கொள்ளக் காரணம் என்னவென்று கேட்க விஷ்ணுமூர்த்தி சொல்லத்தொடங்குவாராயினர்.

“மாயாசம்பந்தமற்ற நிர்க்குணப்பிரமம் தன்னுடைய மகிமையில் உள்ளது.

முக்குண சொரூபமாய் சமரசத்தை அடைந்திருக்கும் மூலப்பிரகிருதி யென்ற சோபாதி மாயையானவள் பின்னுபின்ன ரூபிணியாய் விளங்குபவள் மாயையில் தோன்றிய பிரமத்தின் பிரதிபிம்பமே நாராயணன் என்ற நான் ஸ்திரீ புருஷ ரூபமாய் நிற்கும் என்னுடைய ஸ்திரீ ரூபமே வேதத்தில் சத்தியென்று புகழப்படுகிறது.

இவ்வுலகத்திற்குக் காரணபூதனாகிய நான் நான்காம் நிலையிலிருப்பவன். ஐந்தாவது நிலையிலுள்ள பிரமத்தை ஆசிரயித்து சமாதியினின்ற நீ யோக நிலையைத் தெளிவாக உணராததினாலும் பிரம ஞானத்தை உபதேசிக்கப் பரசிவமும் யோகஞானத்தை உபதேசிக்க நானும் கர்த்தாக்களாய் நிற்றலானும் நான் உன்னைச் சோதித்து, உனக்கு யோக ஞானத்தை உபதேசிக்க வந்தேன். என்று சொல்லி உனக்கு வேண்டும்வரங்களைக்கேள்! என

எம்பெருமானாகிய நீர் இம்மோகினி வடிவத்துடன் தரிசனங்கொடுத்துக்கொண்டு எப்பொழுதும் இவ்விடத்திலேயே வசிக்கவேண்டும். எனவும் கேசவாதி பன்னிரண்டு மூர்த்திகளுக்கும் ஆதாரமாகிய நீர் அப்பன்னிரண்டு மூர்த்திகளாயும் இவ்விடத்தில் எழுந்தருளியிருந்து உலகத்தவர்க்கு அருள் செய்யவேண்டுமெனவும் யோகஞானத்தைத் தெளிவாகஉபதேசிக்கவேண்டும் எனவுங்கேட்க விஷ்ணு மூர்த்தியானவர் முதல் இரண்டு வரங்களையும் கொடுத்து மூன்றாவதற்கு நான் இம்மோகினி வடிவத்துடன் உபதேசித்தல் கூடாதாகலின் நீ யோக ஞானத்தையடையுமாறு எப்பொழுதும் என்னை ஆராதனை செய்து கொண்டிருப்பாயானால் நான் எனது பக்தர்களுக்கு யோக ஞானத்தை உபதேசிக்க பதரிகாசிரமத்தில் தர்மப்பிரஜாபதிக்குப் புத்திரனாக அவதரிக்கும்போது உனக்கும் உபதேசிப்போம்எனக்கூறி அம்மோகினி வடிவத்தோடு எதிரிலேயே எழுந்தருளியிருந்தார்.

மதங்கமுனிவரும் அவ்விஷ்ணுமூர்த்தியின் கட்டளைப்படியே இடைவிடாது அவரைத்தியானித்துக்கொண்டிருக்க தாம் அருளியவாறு நரநாராயணராகத்தோன்றிய அப்பெருமான் அவர் முன் தோன்றி தாம் முன் ஆதிசேஷனுக்கு உபதேசித்தபடியே யோக ஞானத்தை உபதேசிக்கத்தொடங்கினார்.

ஜீவாத்மாவானது தனது அந்தக்காணங்களைபுறத்தேசெல்லவிடாது தடுத்து மனத்தை உள்ளே நிறுத்திப் பாம்பொருள் ஒன்றையே நினைப்பது யோகம் எனத்தொடங்கி அவ்யோக இலக்கணங்களை எல்லாம் விஸ்தாரமாக எடுத்து உபதேசித்தருளினர். இவ்வுபதேசங்களைக்கேட்ட மதங்கமுனிவர் சர்வோத்கிருஷ்ட நிலையிலுள்ள பஞ்சவித சித்தவிருத்திமயமான புத்தியையும் பிரமபாவ சித்திப்பிரதையான சித்தியையும், சுவானந்தப்பிரமத்தில் லயப்படுத்தி இரண்டு மாயையையும் அடைந்துள்ள சுவானந்தநாயகரான பிர்மத்தை பூரணபவபிரத்தியரூபமான அசம்ப்ரஞாதசமாதியால் அடைந்து, பிரமானந்த சமுத்திரத்தில்மூழ்கிஇருக்கும்பொழுது அந்தப்பிரமானந்த இரசம் இருதயத்தில் பெருகி காதின் வழியாய் வெளிப்பட்டு பூமியில் விழுந்து ஓர் சாஸ் ஆயிற்று. அதுவே மதங்க தீர்த்தம், யோகதீர்த்தம், சுவானந்த தீர்த்தம் என்று கூறப்படுகிறது.

இவ்வாறு மதங்க முனிவர் சுவானந்த சமாதியில் இருக்கும்பொழுது அவருடைய இருதயத்தில், பரமசோதி சொரூபமாய் சகுணப்பிரமதேகத்துடனும், நிர்க்குணப்பிரம சிரசுடனும் சித்திபுத்திகளுடன் கூடினவராய்த் தோன்றிய விநாயகரைத்தரிசித்து பரமானந்தங்கொண்டு கணநாதரே! நாராயண குருமூர்த்தியின் திருவருளால் அசம்பிரஞ்ஞாத சமாதிகைகூடி உம்மைக் கண்டேன். ஐந்துவகைப்பட்ட பிரமங்களுக்குள் முதன்மை பெற்றவராகிய நீர் இவ்விடத்திலே எழுந்தருளியிருந்து எனக்கும் என்னைப்போன்ற அன்பர்களுக்கும் நேரிடும் விக்கினங்களை நீக்கி அநுக்கிரகஞ்செய்துகொண்டிருக்கவேண்டும் என, அவ்வாறே விநாயகப்பெருமான் எழுந்தருளி மதங்கமுனிவரைப்பார்த்து, உனக்குப் பூரணமான யோகசாந்தி உண்டாகும் நீசம் யோகாயோகபேதமான பூமிரூபமாகிய யோகப்பிரமரூபமாகவே ஆகி விநாயகராக ஆவாய் என்று அருள் புரிந்தார். விநாயகரென்பதற்கு பூரணயோக சித்திபெற்ற அதிவர்ண ஆச்சிரமி என்று தாற்பரியம். இவ்விநாயகருக்கு மதங்க கணநாதர் என்ற திருநாமம் வழங்கிவருகின்றது.

விநாயகப்பெருமானுடைய திருவருள் பெற்ற மதங்க முனிவர் அஷ்டாங்கங்களைச் சாதித்து சம்பிரஞாத சமாதி சித்தி

யைப்பெற்று ஒன்றுமுதல் ஐந்தாவது நிலையிலுள்ள பரம்பொருளை அசம்பிரஞாத சமாதியால் அளவில்லாத காலந்தவஞ்செய்ய சிவபெருமான் பிரசன்னராகி ஏ! மதங்கமுனியே! உன் தவநிலைக்கு மிகவும் களிப்புற்றோம். மனித சிருஷ்டிக்கு முற்காலமுதல் நெடுநாளாகத் தவம் புரிகின்றமைபால் உனக்கு வேண்டும் வரங்களைக்கேள் தடையில்லாமற் கொடுப்பேன் என்று சொன்னார். மதங்க முனிவரும் பிரமானந்தங்கொண்டு கைகூப்பி சதருத்திரமென்ற வேதமந்திரங்களால் ஆகுதிசெய்து எம்பெருமானே! ஜலப்பிரளயத்தில் இவ்விடத்தில் பராசமரத்தை நான் கண்டதனால் பராசவனம் என்றும், நான் தவஞ்செய்தமைபால் மதங்காசிரமமென்றும், சத்துவகுணம் பிரகாசிப்பதால் சுவேதவனமென்றும், நான்கு யுகங்களிலும் வழங்கிவரவேண்டும். இங்கு பிறந்தாலும் இறந்தாலும், வசித்தாலும், பூஜித்தாலும் அவர்களுக்கு (தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம்) புருஷார்த்தங்களைக்கொடுக்க வேண்டும். மதங்கேசர் என்ற இலிங்கரூபியாய் எப்பொழுதும் இங்கேயே வசிக்கவேண்டும். உலகத்திலுள்ள எல்லா சிவக்ஷேத்திரங்களினும் இதுவே சிரேஷ்டமானதாகவேண்டும். விஷ்ணு முதலிய எல்லாத்தேவர்களும், ஏரண்டர்முதலிய எல்லாச் சித்தர்களும் வசித்து வரவேண்டும். ஆதிசக்தியானவள் எனக்குப்பெண்ணாய்ப்பிறந்து அவளைத் தாங்கள் திவ்யரூபத்துடன்வந்து விதிப்படி விவாகஞ்செய்துகொள்ளவேண்டுமென்று கேட்க, பரமன் அவ்வரங்களை அளித்து லிங்கரூபியாய் அவர் பூசையை ஏற்றுக்கொண்டு, மதங்கேசர் என்ற நாமத்துடன் இன்றும் எழுந்தருளியிருக்கிறார்.

---

## தீர்த்த விசேடம்.

முன்னொருகாலத்தில் சங்காசுரனுடைய உத்தரவின்படி கமலாசுரன் பிரமதேவரிடத்துள்ள வேதங்களை அபகரித்து சமுத்திரத்தில் மறைத்தபடியால் கௌதமர் முதலிய முனிவர்கள் வைதிக கர்மம் அற்று சுவேதாரண்யஞ்சென்று சுவர்ணபுரத்துக்கடுத்த தென்புறமாயுள்ள சித்தபிலத்தில் எழுந்தருளியிருக்கும்

புஷ்டிவிநாயகரிடத்தில், வேத முதலிய வித்தைகளை அப்பியசித்தார்கள். அப்பொழுது அம்முனிவர்களுடைய பிரார்த்தனைக்கிணங்கி புஷ்டி விநாயகர் தமது கையிலுள்ள தந்தத்தால் சுவேதாரண்ய க்ஷேத்திரத்தின் மேலை எல்லையிலிருந்து பெருந்தோட்டம் வரையில் மிக்க அழகான ஒரு சரஸ் உண்டாக்கினர். அதில் அவருடைய காதுமணி விழுந்தபடியால் அதற்கு மணிகர்ணிகை எனப்பெயர் ஏற்பட்டது இந்த மணிகர்ணிகை சரஸில் மேற்கே மணிகர்ணிகை, அதற்குக்கீழ்பால் கபிலதீர்த்தம், அதற்குக்கிழக்கு புஷ்டிதீர்த்தம், அதற்குக்கிழக்கு லக்ஷ்மி தீர்த்தம், அதற்குக்கிழக்கு நாராயண ஆலயம் வரையில் நாராயண தீர்த்தம், அதுமுதல் வியாக்கிரபாத ஆசிரமம் வரையில் மதங்கதீர்த்தம், அதற்கு கிழக்கு யோகநாதர் ஆலயம் வரையில் யோகதீர்த்தம், சுவேதாரண்ய மூலஸ்தலத்தில் முத்தி தீர்த்தம் ஆக இவ்விதம் எட்டு தீர்த்தங்களுடன் கூடியது மணிகர்ணிகை.

துவாபரயுகமுடிவில் வேதவியாசமுனிவர் யோகநாதரைக் குறித்து தாம் யோகஞான மெய்துதற்பொருட்டு கடுமையாகத் தவம் செய்துகொண்டிருக்க ஜனகாதியர்களால் பிரார்த்திக்க யோகநாதர் வியாஸருடைய தபசின் சாதகமாக காவிரியை மணிகர்ணிகை மார்க்கமாகவும், மதங்கமுனிவர் யோகத்திலிருக்கும் பொழுது அவருடைய செவியின் வழியாகத் தோன்றிய யோகதீர்த்தமாகிய சுவானந்த தீர்த்தமார்க்கமாகவும் வரும்படியாகக் கூப்பிட்டார். அப்பொழுது காவிரி அவ்வழியாக சுவேதாரண்யஞ் சென்றாள். அதற்குப்பிறகு மணிகர்ணிகை தீர்த்தமானது நதியென்றுபெயரடைந்தது மணிகர்ணிகையில் மதங்கேசருடையசந்நிதியில் உள்ள மதங்கதீர்த்தத்திற்கு சிவகங்கை என்று பெயர் இதில் ஸ்நானம் செய்வதால் சகலபாவங்களும், சகலரோகங்களும்நீங்கும் அநேகயாகங்களைச்செய்த பலனும் சொர்ணதான முதலிய பலதானங்களைச்செய்த பலனும் புருஷார்த்தங்களும் சித்திக்கும் ஒருக்கால் தேவேந்திரன் சமுத்திரஸ்நானஞ்செய்து விமானத்தின்மேற் செல்லுகையில் ஒரு குஷ்டியின்பார்வைபட்டு பூமியில் விழுந்தது. தேவேந்திரன் துக்கமடைந்து வருந்துகையில் ஒரு சண்டாள ஸ்திரீ வெயிலின் கொடுமையால் வருந்தி மதங்க தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்ய உடனே சிவகணங்

கள் வந்து அவளை திவ்ய தேகமுடையவளாகச்செய்து விமானத்திலேற்றிக்கொண்டு கைலாசஞ்சென்றார்கள். அவளுடைய பார்வை தேவேந்திரனுடைய விமானத்தில் விழ அது முன் நிலைமையடைந்தது. இந்திரனும் அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சுவர்க்கஞ்சென்றான். இதுபோல அஷ்ட தீர்த்தங்களின் மகிமையும் விரிவாக ஸ்தல புராணத்திற் கூறப்படுகிறது.

---

## உருத்திரர் பூசித்தவரலாறு.

பிரமதேவரானவர் தமது தினகற்பதுவக்கத்தில் உலக விருத்தியின் பொருட்டு ஜனகர்முதலிய முனிவர்களை சிருஷ்டிக்க அவர்கள் பிரவர்த்தியைவிட்டு நிவர்த்திமார்க்கத்திற்சென்றமையால் பிரம்மதேவர்க்குகோபமுண்டாக அப்பொழுது அவருடைய புருவமத்தியிலிருந்து உருத்திரர்தோன்றி, தான்பிரமாவினிடந்தோன்றும்படி நேர்ந்ததைப்பற்றி யோசித்து அசைவற்று நின்று பின்பிரமதேவருக்குப் புத்திரராக அவதரிப்பதாய் அவர் தவஞ்செய்தபொழுது அவருக்கு முன்கற்பத்தில் வரமளித்ததை நினைத்துப் பிதாவென்னுமுறையால் அப்பிரமதேவரைவணங்கி, எனக்கிடும் கட்டளையாதெனக்கேட்க பிரமதேவர் அந்தத்தாணுருத்திரைப்பார்த்து நீஉலகவிருத்தியின்பொருட்டு எனதுதந்தையாகிய நாராயணமூர்த்தியை ஆராதனைசெய்து, அவருடையதிருவருளால் உலகசிருஷ்டியையும், திசாதிபத்தியத்தையும். யாகங்களில் அவிர்ப்பாகங்களையும் பெற்றுக்கொள்க எனக்கேட்டு, அத்தாணுருத்திரர் மதங்காசிரமத்தையடைந்து பராசமரத்தின்கீழ் தவஞ்செய்துகொண்டிருக்கும் மதங்கமுனிவரைக்கண்டு அவரிடத்தில் அஷ்டாக்ஷரமகாமந்திரோபதேசம்பெற்று அந்தக்ஷேத்திரத்தின் மேல்புறத்திலுள்ள மேலைச்சாலையை அடைந்து கேசவமூர்த்தியை உபாசனைபண்ணிக்கொண்டு தவஞ்செய்யுங்காலத்து, அவரது சரீரத்தினின்றும் தமக்குச்சமானகுண ரூபர்களான பதினொருஉருத்திரர்தோன்றக்கண்டு, நீங்கள் என்னுடைய சரீரத்திலிருந்து தோன்றியவர்களாதலின் என்னைப்போல தேவ் தேசவமூர்த்தியை உபாசனைசெய்யுங்கள் எனக்கட்டளையிட்

அவர்களும் அக்கட்டளையின்படி தனித்தனியே விஷ்ணுமூர்த்தியைப்பூசைசெய்துவந்தார்கள். இவ்வாறு பன்னிரண்டு உருத்திரர்களும் நாராயணனைப்பூசித்தவரலாற்றை விரிவாக எடுத்து அகத்தியமுனிவர்கூறக்கேட்ட வசிஷ்டர்முதலியமுனிவர்கள் பன்னிரண்டு உருத்திரர்களாலும் பூசிக்கப்பெற்ற விஷ்ணுமூர்த்திகள் பன்னிருவரும் சிவபெருமானைப்பூசித்த வரலாற்றினையும் அருளிச்செய்யவேண்டுமெனக்கேட்க அகஸ்தியமுனிவர் சொல்லத்தொடங்குகின்றார்.

---

## பதின்மூன்று சிவபீடங்கள்.

சுவேதாரண்யமென்ற இந்த மதங்காசிரமத்திலுள்ள பதின்மூன்று சிவபீடங்களும் முறையே பதின்மூன்று விஷ்ணுமூர்த்திகளால் ஸ்தாபிக்கப்பட்டு பூஜைசெய்யப்பெற்றது. அவற்றுள் பன்னிரண்டுமூர்த்தங்களுக்குங்காரணமான பரவாசுதேவரே சுவேதாரண்யேசராகிய மூலலிங்க ஈசானிய பிரமபீடத்தைப் பூசித்துவந்தார், மதங்கமுனிவரால் பூசிக்கப்பட்டமதங்கேசர் மூலஸ்தானத்தில் தற்புருஷ பிரமபீடத்தை நாராயணமூர்த்தியும், ஆரண்யேஸ்வரத்தில் அகோரபீடத்தை தாமோதரரென்றபார்த்தசாரதி கிருஷ்ணமூர்த்தியும் சுவர்ணபுராநாதர்விளங்கும் சத்தியோஜாதபீடத்தை வாமனரென்ற செம்பொன்னரங்கரும், யோகநாதர்விளங்கும் வாமதேவபீடத்தை அண்ணனாகிய கேசவமூர்த்தியும், சுரஹரரான ஈசான்யபரமேஸ்வரர்விளங்கும் சோமபீடத்தை இருஷிகேசரென்ற அமிர்தகடகூத்தரும், நாகநாதர் விளங்கும் ஸர்வபீடத்தை சயனகாரகரானபத்மநாபரும், நம்புவார்க்கன்பர்விளங்கும் மகாதேவபீடத்தை புருஷோத்தமரென்ற திருவிக்கிரமரும், கைலாசநாதர்விளங்கும் பீமபீடத்தை வைகுந்தநாதராகியவிஷ்ணுவும், சுந்தரேசர்விளங்கும் பவபீடமாகிய பீமபீடத்தை திருமேனி அழகரென்ற கோவிந்தமூர்த்தியும், பெருந்தோட்டத்தில் ஐராவதேசர்விளங்கும் உக்கிரபீடமாகிய பிராணபீடத்தை கிழைச்சாலையில்வசிக்கும்மாதவரும், சமுத்திரத்தில் கலிக்காமேசர்விளங்கும் தேஜோமயமான உருத்திரபீடத்தை

மதுசூதனராகிய நாசிம்மமூர்த்தியும், நயனுர்ப்பணேசர் விளங்கும் பாசுபதபீடத்தை நயனிபுரத்தில் லெக்ஷ்மிநாராயணரும் ஸ்தாபித்து இலிங்கப்பிரதிஷ்டைசெய்து பூசித்துவந்தார்கள். இவ்விதமாக சுவேதாரண்யநாதர் தவிர மற்ற பன்னிரண்டு பீடங்களும் பன்னிரண்டு விஷ்ணுமூர்த்திகளால் ஸ்தாபிக்கப்பட்டன. இப்பீடங்கள் இப்பொழுதும் விளங்கிவருகின்றன.

பீடமென்பது தேஜோமயமாய்விளங்குவது. அதுபூமியில் க்ஷேத்திரத்தில் ஸ்தாபிக்கப்பெற்றது. பீடத்திற்கு லிங்கமாவது மூர்த்தியாவது அடையாளம். அக்கற்பமுடிவுவரையில் பீடமானது நாசமற்று சோதிரூபமாய்விளங்கும். இலிங்கமூர்த்தி சிலகாலங்களில் நாசத்தையும் அடையும். பீடத்தைத்தெரிந்துகொண்டமுனிவர்கள் இலிங்கமூர்த்தி நாசமடைந்தாலும் அந்த ஸ்தானங்களில் சிவபீடமானல் சிவலிங்கங்களையும். விஷ்ணுபீடமானல் விஷ்ணுமூர்த்தியையும் ஸ்தாபிப்பார்கள்.

தத்துவங்கள் முப்பத்தாருகவும், இருபத்துநான்காகவும் இரண்டுவிதமாகக் கூறப்பட்டிருக்கின்றன. விஷ்ணுமூர்த்திகளால் பூஜிக்கப்பெற்ற மதங்கேசர்முதலியபன்னிரண்டு சிவலிங்கங்களும். கபிலேசர், பிரமேசர், காளஞ்சேசர், வியாக்கிரபாதேசர், சுந்தரேசர், போதாயனேசர். கௌதமேசர், பல்லவனேசர், சாயாவனேசர், அகஸ்தியேசர், வேதபுரீஸ்வரர், சங்கமேசர். இப்பன்னிரண்டு இலிங்கங்களும்சேர்ந்து இருபத்துநான்கு லிங்கங்களாகவும் சுவேதாரண்யேஸ்வரர் இருபத்தைந்தாவது தத்துவமான புருஷரூபமானது. மதங்ககாண்டம்என்னும் இப்புராணத்தில் மதங்கேசலிங்கமே மூலலிங்கமாகக்கூறப்பட்டிருக்கின்றது. இந்த ஸ்தலத்திற்கு மதங்கேசரே க்ஷேத்திரஞ்ஞராக விளங்குகிறார். அமுதேசர்முதலிய பதினெருலிங்கங்களும் ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும், மனம் ஒன்றும் ஆகியபதினெரு இந்திரியங்களுக்கும் அதிபதிகளாகக்கூறப்படுகின்றார்கள்.

---

## அமிர்தேசர் மகிமை.

முன்னொருகாலத்தில் சமுத்திரத்திலுண்டான அமிர்தகடத்தை விநாயகர் அபகரித்தபொழுது அவரை விஷ்ணுமுத

லியதேவர்கள் பூஜிக்க அவர் அமிர்தகடத்தை அவர்களுக்குக் கொடுக்க விஷ்ணுமூர்த்திபானவர் தேவர்களுக்குப்பரிமாறி அமிர்தகடத்தைப்பூமியில்வைத்து மறைந்துபோக அக்கடம் சிவலிங்கரூபமாயிற்று. அதுவே அமிர்தேசரெனவழங்குகிறது.

வசுதேவபுத்திரரான கிருஷ்ணபகவான் பாணாசுரனை வதைசெய்யச் சோணிதபுரஞ்சென்று அவனுடையகோட்டை இரக்ஷகர்களான உருத்திரன், காளி, நந்திமுதலியவர்களுடஞ் யுத்தஞ்செய்கையில் உருத்திரனால் விடப்பட்ட ஸ்வராஸ்திரத்தால் சைனியங்கள் பிடிக்கப்படுவதைப்பார்த்து யோகசத்தியால் தான் அஃதப்பொறுத்துக்கொண்டு நாரதருடைய வாக்கியத்தால் மதங்காசிரமஞ்சென்று அமிர்தகடோற்பவரான அமிர்தேசரைப்பத்தியுடன் பூசிக்க சுரம் சாந்தியடைந்தது. பிறகு ஒருமாதம்பூஜைசெய்து பஞ்சாக்ஷரசெபமுஞ்செய்துவர அமிர்தகடேசர் சந்திராக்ஷியென்ற சத்தியுடன் ஆஷாட கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசிதினம்தோன்றி காட்சிகொடுக்க கிருஷ்ணமூர்த்தி ஸ்வரஹரகமான பஞ்சகமென்ற வேதமந்திரத்தால் தோத்திரஞ் செய்தார். அப்பொழுது அமிர்தேசர் கிருஷ்ணனைப்பார்த்து முந்திதேவர்களுக்கு அமிர்தம்பரிமாறுவதற்காகநீ நம்மைபூசித்து மோகினி ரூபமடைந்தாய். உன்னாலேயே அமிர்தேசர்என்ற பெயர் நமக்கு ஆக்கப்பட்டது. இப்பொழுதுஉனக்குஇஷ்டமான வரங்களைக்கேள் என, கிருஷ்ணனும் இப்பொழுது உம்மை நான் அர்ச்சிக்க எனது சுரம் நிவர்த்தியாயினமையால் சுரஹரேசுரர் என்ற பெயருடன் நீர்விளங்கவேண்டும். என்சைனியங்களுடைய சுர உபாதியையும் விலக்கிபாணாசுரனுடைய யுத்தத்தில் ஜெயம் பெற அநுக்கிரகிக்கவேண்டும்என, அவ்விதமே வரமளித்து அமிர்தகடேசர் இலிங்கமத்தியில் மறைந்தருளினர். கிருஷ்ணனும் சேனைகளும் சுகமடைந்து பாணாசுரனைவென்று துவாரகையடைந்தார். சுரநோயுடையவர்கள் இக்கடவுளை பத்தியுடன் வழிபட்டால் சுரத்தினீங்கி முத்தியும் அடைவார்கள்.

## சுவேதவனநாதர் மகிமை.

சந்திரவம்சத்துதித்த சுவேதன் என்னும் அரசன் தன் மகனிடம் இராஜியத்தையொப்புவித்து மனைவியுடன் காடுசென்று வானப்பிரஃதனாப் தவஞ்செய்து வருகையில் அவன்மனைவி வியாதிப்பட்டு கஷ்டப்பட்டு இறந்துபோனாள் அவள்மரணாவஸ்தையைப்பார்த்திருந்த அரசன் மரணமில்லாமையை அடைய வேண்டுமென்றுகருதி பாரசவனக்ஷேத்திரமடைந்து தெய்வகதியாய் மதங்கமுனிவரைச்சந்தித்து நமஸ்கரித்துத்தன்கருத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பிரார்த்திக்க, மதங்கர் சுவேதனைப்பார்த்து அரசனே! நமது பர்ணகசாலைக்குக் கிழ் புறமாக சுத்தசத்துவ பூமிமயமான சுவேதாரண்யத்தில் பரமேஸ்வரர் இலிங்கரூபமாக விளங்குகின்றார் நீயும் சுவேதனென்றபெயருடைமையால் அவ்விடம் சென்று பரமேசுரரைப்பூசித்து அவருடைய பிரசாதத்தால் மிருத்தியுவை ஜெயிப்பாய் என்று அநுக்கிரஹம்செய்துஅனுப்ப சுவேதனும் அவ்விடம்சென்று சுவேதநாதரைப்பூசித்து பஞ்சாக்ஷரத்தைச்செபித்துவந்தான். இப்படி வெகுகாலந்தவஞ்செய்துகொண்டிருக்க அவனைக்கொண்டுபோக வந்த மிருத்தியுவை பகவான்வதைத்து அரசனுக்குப் பிரசன்னமாய் அவனைப்பார்த்து பக்த சிரேஷ்டனான சுவேதனே! நீ இவ்விடத்தில் வெகுகாலந்தவஞ்செய்து வந்தமையால் இவ்விடம் சுவேதவனமென்று பெயருண்டாக. நீயும் நமது சாரூப்பியம் பெற்று நமது பாரிசத்தில் பிர்ம்மகற்பபரியந்தம் வசித்துக் கொண்டிரு. உனக்கு இவ்விடத்தில் மகாகைலாசலோகவாச பாக்கியம் உண்டாகும். கிழக்கு சமுத்திரமுதல் ஒன்றரை யோசனைதூரம் மேற்கு வரையில் சுவேதாரண்யமென்று சொல்லப்படும். மூலஸ்தானத்திற்கு காளஞ்சரமென்று பெயர். என்னுடைய பூஜையினிமித்தம் பன்னிரண்டு சிவலிங்கமூர்த்திகளைப்பிரதிஷ்டை செய்து பன்னிரண்டு விஷ்ணுமூர்த்திகளும் பூஜைசெய்த இந்த க்ஷேத்திரம் பாரசவனம் என்றும் அது மதங்கமுனிவரால் காணப்பட்டபடியால் மதங்காசிரமமென்றும், உன்னால் பூஜிக்கப் பெற்றமையால் சுவேதவனமென்றும் கூறப்படும். பூவுலகத்திலுள்ள சகல சிவக்ஷேத்திரங்களிலும் இதுவே சிரேஷ்டமானது.

இது காசி, பிரயாகை, கயா, கைலாசம் முதலிய க்ஷேத்திரங்களிலும் விசேஷமான நிருத்தனஸ்தலம். இங்கே பிறந்தவர்களும் தரிசித்தவர்களும், இறந்தவர்களும் முத்தியடைவார்கள். பக்தர்களுடைய சர்வாபீஷ்டங்களையும் கொடுத்துக்கொண்டு நான் இவ்விடத்தில் என்றும் சாந்நித்தியமாக விளங்குகின்றேன் என்று அநுக்கிரஹம் செய்தார்.

---

## ஆரண்யேசர் மகிமை.

ஆரண்யர் என்ற முனிவர் சுவேதாரண்ய க்ஷேத்திரத்தில் தமது ஆசிரமத்தில் ஆரண்யேசர் என்ற பெயருடன் இலிங்கப் பிரதிஷ்டை செய்து, பத்தியுடன் பூஜை செய்து வந்தார். இந்த ஸ்தானத்திற்கு ஆரண்யகம்என்றும்இவரால் கண்டுபிடிக்கப்பட்ட வேதத்திற்கும் ஆரண்யகமென்றும்பெயர். அஸ்வமேதயாகத்தின் பொருட்டு மதங்காசிரமத்துக்குவந்த இராகவன் இவ் ஆரண்யேசரைப்பூசித்து மறுபடியும் சீதையை அடைந்தான். சீதையுடன் இராமன் இப்பொழுதும் அவ்விடத்திலிருக்கின்றான் பூர்வதுவாரதேவதாசம்பந்தத்தால் அவர்வைபவங்கூறப்பட்டது. மாத்தியாயனரென்ற முனிவருடைய புத்திரராகிய வியாக்கிரபாதர் அபஸ்மாரரோகத்தாற் பீடிக்கப்பட்டு பிதாவின் உத்தரவின்படி ஆரண்யேசுரருக்குசமீபத்தில் ஆ சி ர ம ம் ஏற்படுத்திக்கொண்டு சுவேதநாதரைத்தியானித்து ப ஞ் சா க்ஷ ர த் தை செபித்து சிவயோகத்திலிருந்தார் மூலாதாரத்தில் விநாயகரையும் சுவாதிஷ்டானத்தில் பிரமாவையும், மணிபூரகத்தில் விஷ்ணுவையும், அநாகதத்தில் உருத்திரனையும், விசுத்தியில் மகேசுரனையும், ஆக்ஞையில் சதாசிவனையும், பிரம்மாந்திரத்தில் பரமசிவனாகிய சுவேதநாதரையும், தியானித்துத்தவஞ்செய்து வந்தார். இவ்விதம் ஐந்துவருஷந்தவஞ்செய்துவருகையில் சுவேதநாதர் பார்வதிதேவியோடு ரிஷபவாகனரூடராய் பலதேவமுனிகணங்களுடன் வியாக்கிரபாதருக்கு முன் தோன்றினர். இக்காட்சியை வியாக்கிரபாதர்கண்டு ஆநந்தித்துத்துதிக்க பரமசிவனார் வியாக்கிரபாத முனிவ இஷ்டமானவரங்களைக்கேள் அளிக்கிறோம் என வியாக்கிரபாதர் நமஸ்கரித்து உமதுதிருவடிகளில் திடமானபத்தியும் உமது பூஜையைநிரந்தரம் செய்வதற்கு எனது சரீரத்தைப்பற்

றிய அபஸ்மாரரோகத்தை நாசஞ்செய்து வில்வம் சுடுக்கப்புலிக்கால் புலிக்கைகளையும் அருளவேண்டும் என்றும், உம்முடைய ஆநந்தநடனத்தையும் தரிசிக்கும்படி செய்யவேண்டும் என்றும், இத்தலத்தில் இப்பொழுதுகாட்சிகொடுத்தபடி எப்பொழுதும் வசிக்கவேண்டும் என்றும், கேட்க சிவபெருமானார் அவ்வரங்களை எல்லாம் கொடுத்து அவருடைய ரோகத்தைக்கிரகித்து அகோரமூர்த்திகையில் கொடுத்து சிவலிங்கமூர்த்தியாய் எழுந்தருளியிருந்தார்- பின்வியாக்கிரபாதர் ஆனந்தநடனந்தரிசித்து ஜீவன் முத்தரானார். இதனைப்படிப்பவருங் கேட்பவரும் முத்தியடைவார்கள்.

---

## நேத்திரார்ப்பணேசுரர்மகிமை

தக்ஷயாகத்தில் வீரபத்திரர்க்கும் மகாவிஷ்ணுவுக்கும் யுத்தமுண்டாகி வீரபத்திரர்கதையால் விஷ்ணுமார்பிலடிக்க மார்பிலிருந்தலக்ஷ்மிமிகுந்த வேதனையடைந்து க்ஷீரசமுத்திரத்தில் விழுந்துவிட்டாள். பிறகுவிஷ்ணுவும் வீரபத்திரரும் சிவபெருமானால் சமாதானம் பெற்றார்கள். மறுபடியும் விஷ்ணு இலக்ஷ்மியை அடைய மதங்காசிரமஞ்சென்று நாகநாதருக்குக் கீழ்புறமாய் தமக்கு ஆசிரமங்கற்பித்து ஒரு சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்துகொண்டு பூசையின்பொருட்டு ஒரு தாமரைஓடையும் சிருஷ்டித்து தினந்தோறும் ஆயிரந்தாமரைப்பூக்களால் சகஸ்திரநாம அர்ச்சனைபுரிந்து வந்தார். இவ்விதம் செய்துவருகையில் ஒருநாள் சிவபெருமான் சோதனையின் பொருட்டு ஒருபுஷ்பத்தைமறைத்தருள ஒரு நாமத்திற்குப்புஷ்பமில்லாமையால் விஷ்ணுதமது கண்மலரைப்பறித்து பத்தியுடன் அர்ச்சனைசெய்தார். அதனால் பரமனார்சந்தோஷமடைந்து தரிசனமளிக்கவிஷ்ணுநமஸ்கரித்து, நீர் இந்தஸ்தலத்தில் நயனார்ப்பணேசுவரர் என்ற நாமத்துடன் விளங்கவேண்டும், இந்தஸ்தலம் நளினபுரம் என்ற பெயர் வழங்கவேண்டும்.திருப்பாற்கடலில்விழுந்த இலக்ஷ்மியை எனக்குஅளிக்கவேண்டும்என்றுபிரார்த்திக்க, பரமசிவனார் மற்றைய்வரங்களை அருளிப்பாற்கடல் கடையுங்காலத்து திருமகள் உண்டாவாள் அப்பொழுது நீ மறுபடியும் அடைவாய் என்று வரங்கொ

டுத்து லிங்கத்தில் மறைந்தருளினுர். தேவாசுரர்கள் பாற்கடல் கடைந்தபோது தோன்றிய லெக்ஷுமியைநோக்கி நீ விஷ்ணுவை மணம்புரிந்து கொள் எனத்தேவர்கள் சொல்ல, தன்னுடையஸ்தி ரீயை வகிக்கச்சத்தியற்ற இவரைநான் வரிக்கமாட்டேன். சிவனை சந்தோஷிப்பித்து அவரையேபதியாக அடைவேன் என்று சொல்லி சுவேதாரண்யத்திலுள்ள தாமரை ஓடையைக்கண்டு அதன் மத்தியில் சொர்ணபுஷ்பத்தில் வீற்றிருந்து பன்னிரண்டு வருஷந் தவஞ்செய்து வந்தாள். நயனுர்ப்பணேசர் பிரசன்னமாகி அவளை நோக்கி உன்கருத்து எனக்குத்தெரியும், அது வேதசாஸ்திரவி ருத்தம், நீ விஷ்ணுவின்சத்தியானபடியால் நீ அவரையேபதியாக அடையவேண்டும் என்று சொல்லித்தேவர்களை நினைக்க விஷ்ணு முதலியசகலதேவரும் திரண்டு வந்தார்கள். அப்பொழுது சமுத் திரராஜன் இலக்ஷுமியை விஷ்ணுவுக்கு மணம்புரிந்துகொடுக்க மணந்து விஷ்ணுவும் இலக்ஷுமிநாராயணராக ஆனுர்.

---

## நாகநாதர்மகிமை

சர்ப்பராஜாவாகிய வாசுகிபாதாள லோகத்தில் போக புரத்தில் திவ்யபோகபோக்கியங்களை அநுபவித்துக் கொண்டு நாகங்களோடு வசித்து வருகையில் பார்வதி புத்திரரான மயூரே சகணேசர் நாககன்னிகைகளால் கொண்டுபோகப்பட்டு வாசுகி யின் சபை சென்றபொழுது, வாசுகி அவருக்குமரியாதை செய் யாமல் கர்வத்துடனிருக்க, மயூரேசர் அவனைப்பிடித்துப்படத்தை ஆட்டி அவனுடையவிஷத்தையும் இரத்தினத்தையும் அபகரித்து பாதாளத்திலுள்ளபோக்கியபதார்த்தங்களை நாசஞ்செய்து நாக கன்னிகைகள் துக்கிக்க தமதிடஞ்சென்றுர். வாசுகிவிஷமற்று நீர்ப்பாம்புபோல் ஆனதையும் இரத்தினமற்றுப்பாதாளலோகம் இருள்மயமானதையும், போக்கியபதார்த்தம் நாசமானதையும் வாசுகி கண்டுவிசனமடைந்து சுவேதாரண்யஞ்சென்று மதங்கா சிரமத்தில் மேல்புறமாய் ஆடகேசர் உத்தரவின்படி மதங்கேசரு டைய நிருதிதிக்கில் தன்பெயரால் நாகநாதர் என்ற லிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து பஞ்சாக்ஷரத்தைசெபித்து எண்ணில்லாத

காலந் தவஞ்செய்துவந்தார். பரமன்கிருபைகூர்ந்து லிங்கத்திலிருந்துவெளிப்பட்டு நாகராசனைப்பார்த்து ஆடகேசரான நம்மாற் கொடுக்கப்பட்ட போகங்களை விக்கினராஜருக்கு அபசாரஞ் செய்து நாசம்விளைத்துக்கொண்டாய், விஷமற்று இரத்தினஹீனனாகஆனாய், இனியாவது ஒழுங்காயிருஎன்றுசொல்லி விநாயகரைப்பார்க்க அவர் முன்போல அனைத்தையும் அளித்தார். வாசுகிமனமகிழ்ச்சியடைந்து நாகநாதரே! தேவரீர் இப்புஷ்டிவிநாயகருடன் எப்பொழுதும் இவ்விடத்தில் எழுந்தருளியிருக்க வேண்டும். இவ்விடத்துக்கு நாகலிங்கமெனப்பெயர்வழங்கவேண்டும என்று பிரார்த்திக்க, பரமனார் அவ்வாறே அருள்செய்து மறைந்தருளினார். சேஷசயனராகிய பள்ளிகொண்டபெருமான் மதங்கேசருக்கு சமீபத்தில் ஆச்சிரமம் ஏற்படுத்திக்கொண்டு நாகநாதரைப்பூஜித்து பன்னிரண்டுவருஷம் தவம்புரிந்துவர பரமன் தரிசனங்கொடுத்து வேண்டும் வரங்களைக்கேள்என விஷ்ணுவானவர் உமதுபுத்திரராகிய குமாரருக்குச்சமமான புத்திரனை நான்அடையவேண்டும் என அவ்விதம்வரங்கொடுத்து நாகநாதர் மறைந்தருளினார் அவ்விஷ்ணுவானவர் மன்மதனைப்புத்திரனாக அடைந்தார்.இன்றும் பள்ளிகொண்டபெருமாள் நாகநாதரைப் பூசித்து வருகின்றார்.

## சுவர்ணபுரேசர் மகிமை.

வாசுகியின்பிரார்த்தனையால் பாதாளத்திலிருந்த ஆடகேசர் பூவுலகத்தில் பக்தர்களுக்கு அருள்செய்யும்பொருட்டு சிவலிங்கரூபமாக எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரமே சுவர்ணபுரமென்றும், அதில் எழுந்தருளியிருக்கும் கடவுளுக்குப்புரீசர் என்றும்பெயர். ஆடகம் பொன் என்றுபொருள்படும். சுவர்ணபுரீசர் நிதாகரென்ற சித்தராலும் காத்தியாயனரென்ற முனிவராலும் பூஜிக்கப்பட்டவர். சுவர்ணாம்பிகை காத்தியாயனருக்குப் பெண்ணாய்ப்பிறந்து அவளைப்பரமனார் விவாகம்செய்துகொண்டார். மனிதர்களுடைய இருதயத்திலிருக்கிற அங்குஷ்டமாத்திரமானபுருஷன் பிம்பபிம்பி பாவத்தால் இருவிதமாகும் இதில் மாயோபஹிதர் சிவனென்றும் வசிஷ்டர் விஷ்ணுவென்றும்

கூறப்படுவர். இருதயம் சுவர்ணபுரமென்றும், இருதயவாசியான சிவன் சுவர்ணபுரீசர்என்றும், விஷ்ணு சுவர்ணகிரகவாசிஎன்றும் அங்குஷ்டமாத்திரமாக இருப்பதால் வாமனரென்றும் அவரே பலியை ஜெயிக்க மதங்காச்சிரமமடைந்து சுவர்ணபுரீசரை வழி பட்டு மகாபலியை ஜயித்தாரென்றும், இப்பொழுதும் அவ்விடத் தில் சுவர்ணகிரகத்தில் இருப்பதால் செம்பொன் அரங்கரென் றும் கூறப்படுகின்றார்கள்.

## கைலாசநாதர் மகிமை.

வைகுண்டவாசியாகிய பகவான் வைகுண்டத்தில் இங் காகணியமனஞ்செய்துகொண்டிருக்கையில் தேவலர் என்ற முனிவர் அவ்விடஞ்சென்றார். விஷ்ணு அவரைமரியாதைசெய் யாமலிருக்க அவர்கோபங்கொண்டு வைகுண்டபுவனமானது போகமோக்ஷ சொரூபமற்று, குர்ச்சிதபூமிபோலாகக்கடவ தென்று சபித்தார். அதைக்கேட்டவிஷ்ணு நமஸ்கரித்து சாப விமோசனத்தைப்பிரார்த்திக்க, கைலாசபதியாகிய பரமேஸ்வர ரைப்பூசித்து அவர்கிருபையால் முன்போல் வைகுண்டத்தை யடைவாய் என்று அநுக்கிரகித்து தேவலர் சென்றார். பிறகு விஷ்ணு மதங்காசிரமஞ்சென்று கைலாசநாதர்என்னும் லிங்கத் தைப்பிரதிஷ்டைசெய்து பூஜித்து பஞ்சாக்ஷரத்தைஜெபஞ் செய்துகொண்டு ஆயிரவருஷந்தவஞ்செய்தார். கைலாசநாதர் மகிழ்ந்து தரிசனமளிக்க விஷ்ணுவானவர் தேவலமுனிவரால் வைகுண்டத்திற்கு ஏற்பட்ட சாபத்தைநீக்கி புத்திமுத்திஸ்தல மாகச் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க அவ்விதமே வர மளித்துத்தமது பாதத்தில் பத்தியுங்கொடுத்துமறைந்தருளினர். நம்புவார்க்கன்பருக்கு வடக்கில் கைலாசநாதருக்கு ஆலய நிர் மாணஞ்செய்து அவர்சந்நிதியில் வைகுண்டநாதர் இருந்து கொண்டு பூசைசெய்துகொண்டுவருகின்றார். முன்போல் வை குண்டத்தைப்பெற்று பக்தர்களுக்குப்புத்திமுத்தியும் அளித்து வருகின்றார்.

## நம்புவார்க்கன்பர்மகிமை.

பூர்வத்தில் அசுரேந்திரன் தேவேந்திரன்முதலியோரை யுத்தத்தில் வெல்ல அவர்கள் விஷ்ணுமூர்த்தியையடுத்து முறையிட அவர் தானவர்களை வதைத்து அசுரேந்திரனைப்பிடிக்க அவன் தோல்வியடைந்து பிறகு முனியினாச்சிரமம்ஓடி புலோமாவைச்சரணமடைந்தான். புலோமா அவனுக்கு அபயங்கொடுத்து அவனைத்தன்கர்ப்பத்தில் வைத்துக்கொண்டாள். அவனைப்பின்தொடர்ந்துசென்ற விஷ்ணு அவனைக்கொடுக்கும்படி புலோமாவைக்கேட்க அவள்மறுத்தபடியால் விஷ்ணு தேவேந்திரனுடைய தூண்டுதலால் அவளைக்கொன்று அசுரனையும்கொன்றுசென்றார். பிறகு முனிவர் ஆசிரமம்வந்து பாரியும் தானவனும்இறந்து கிடப்பதைக்கண்டு பேரறிவால் நடந்தவிருத்தாந்தமுணர்ந்து ஸ்திரீஹத்தியால் பீடிக்கப்பட்ட விஷ்ணுவைத்தமது தபோபலத்தால் வரவழைத்து இந்திரன்முதலிய தேவர்களுடன் அவரைப் பார்த்து, உமக்கு மாமியாரென்றவிசுவாசத்தைமறந்து தாய்க்கு சமானமான என்பத்தினியைநீர்வதைசெய்தபடியால் ஸ்திரீஹத்தி, மாதிருஹத்திகளால் பீடிக்கப்பட்டு பூமியில்பல ஜென்மமெடுத்து ஸ்திரீயோகமடைந்து வைகுண்டபுவனத்தில் வசிக்க அருகமில்லாதவனாகி பதப்பிரமசத்தையும்அடைவாய். இத்தேவர்களும் மருத்துவனாற்பீடிக்கப்பட்டு தங்கள்பதவிகளை இழந்து மனிதர்போல் பூமியில் வசிக்கக்கடவர்கள்என்று சபித்தார். பிறகு மிருகசஞ்சீவினிவித்தையால் தமதுபத்தினியை பிழைக்கச்செய்தார். விஷ்ணு வைகுண்டத்தினீங்கிபுருஷோத்தமரென்ற பெயருடன் மதங்காசிரமம்வந்து தமக்கு வாசஸ்தலம் ஏற்படுத்திக்கொண்டு கிழக்குமுகமாய்இருந்து தமக்குஎதிரில் இலிங்கப்பிரதிஷ்டைசெய்து பூசித்துத்தவஞ்செய்துகொண்டிருந்தார். இவ்வாறு ஆயிரவருஷஞ்சென்றபிறகு பரமேஸ்வரர் தரிசனமளிக்க, விஷ்ணுநமஸ்கரித்து பிறகு சாபத்தைநிவர்த்திசெய்யவேண்டுமென்று வேண்ட சாபநிவர்த்தியும்செய்து வைகுண்டத்தையும். பாலனசாமர்த்தியத்தையும் அளித்து உமக்கு லோகாநுக்கிரஹ நிமித்தம் பத்து அவதாரம்உண்டாகும். இராமாவதாரத்தில் ஸ்திரீயோகதுக்கம்உண்டாகும். நீபுருஷோத்தமனென்றபெயருடன் இந்தஸ்த

லத்திலவசித்துக்கொண்டிரு. உன்னால் பூசிக்கப்பட்டநாள் விசுவாகப்பிரியா. உனக்கு நம்முடைய திருவடிகளில் விசேஷபக்தியும் உண்டாகுமென்று வரமளித்துமறைந்தார். விஷ்ணு வைகுண்டம் சென்று உலகபாலனஞ்செய்துவருகின்றார்.

---

## சுந்தரேசர் மகிமை.

துவாபரயுகாந்தத்தில் அசுரர்கள் கர்மபூமியில் க்ஷத்திரிய வம்சத்திற்பிறந்து வேதவிரோத மார்க்கத்தைக்கைக்கொண்டு உலகபீடைசெய்துவந்தார்கள். தேவர்களும் பிரமதேவரின் சாஸனத்தினால் க்ஷத்திரியகுலத்திற்பிறந்து தர்மத்தை இரக்ஷித்து வந்தார்கள். அஸ்துக்களைநாசஞ்செய்து சந்துக்களை பாலனஞ் செய்வதற்காக பிரம்மாவினால் பிரார்த்திக்கப்பட்டு, மகாவிஷ்ணு வானவர் பூமியில் யதுவமிசத்தில் வசுதேவருக்குப்புத்திரராய் அவதரித்து நந்தகோபாலனால் வளர்க்கப்பட்டு, கம்ஸனைவதைத்து மதுராபுரியை அடைந்தார். சராசந்தனால் அடிக்கடி பீடிக்கப்பட்டு வீமனால் அவனுக்கு மரணமென்றறிந்து, சமுத்திரமத்தியில் விசுவகர்மாவினால் துவாரகையென்று ஒருநகரஞ்செய்வித்து அதில் சகலயாதவர்களுடனும் வசித்துவந்தார். பிறகு உருக்குமணி, சத்தியபாமை, சாம்பவதிமுதலிய ஸ்திரீகளை விவாகஞ்செய்து கொண்டார். உருக்குமணி மன்மதனைப்புத்திரனாகஅடைந்தாள். மன்மதன் சம்பராசுரனைவதைத்து இரதியைப்பெற்று மிகுந்த கீர்த்தியையடைந்தான். பிறகு சாம்பவதிகிருஷ்ணனைநமஸ்கரித்து மன்மதனுக்குச்சமமான புத்திரனை அளிக்கவேண்டுமென்று வேண்ட உருக்குமணிபிரசாதத்தால் மன்மதனைப்புத்திரனாகஅடைந்தாள். உனக்காக நான்மதங்காசிரமம்சென்று மன்மதனுக்குச்சமமான புத்திரனை அளிக்கிறேனென்றுசொல்லி மதங்காசிரமத்தையடைந்து உபமந்யுமுனிவரைவணங்கி அவரிடஞ்சிவதீக்ஷைபெற்று நம்புவார்க்கன்பருக்குக்கீழ்புறமாய் ஆசிரமமேற்படுத்திக்கொண்டு தவஞ்செய்துவந்தார். பரமன் சுந்தரமூர்த்தியாய்த்தரிசனம் அளிக்க கிருஷ்ணன்உருக்குமணிக்கு மன்மதனை அளித்ததுபோல சாம்பவதிக்கும் ஒருபுத்திரனை அளிக்கவேண்டுமென்று பிரார்த்

த்தார். பரமேஸ்வரன் அப்படியேவரமளித்து இலிங்கரூபமானார். திருமேனியழகராகிய கிருஷ்ணன் தம்முடையசந்நிதியில் சுந்தராம்பாளுடன்கூடிய சுந்தரேசருக்கு ஆலயநிர்மாணஞ்செய்து பூசித்து அவ்விடம் இருந்துகொண்டவராய்த்துவாரகைசென்றார்.

சாம்பவதி கர்ப்பமடைந்து மன்மதனுக்குச்சமமான புத்திரனை அடைந்தாள்.

---

## யோகநாதேஸ்வரர் மகிமை.

சிவபெருமான் பிரமா விஷ்ணு உருத்திரர்களைசிருஷ்டிக்க அவர்கள் சிருஷ்டி, திதி, சங்காரங்களை அடைந்து வாழுங்காலத்து ஒருசமயம் விஷ்ணுதிருப்பாற்கடலில் தமது நாபியில் ஒரு தாமரைப்பூவைசிருஷ்டிசெய்து நித்திரையிலிருந்தார். பிரமா அவ்விடம் சென்று நித்திரையிலிருந்த விஷ்ணுவைஎழுப்ப அவரும் பிரமனுக்கு மரியாதைசெய்தார். பிரமாவிஷ்ணுவைப்பார்த்து என்னை மோகஞ்செய்வதற்கோ இத்தாமரையைச் சிருஷ்டித்தீர்' சர்வாதிகாரியாய நானல்லவோ சிருஷ்டிகர்த்தா நான் சிருஷ்டிசெய்தபிறகு நீர்பாலனம்செய்கின்றீர். நான்சிருஷ்டிக்காவிட்டால் நீர்எதைப்பாலனம்செய்வீர். ஆகையால் உலகம் என்வசம் நானே சர்வேசுரன் என்றுசொன்னார். அதற்குவிஷ்ணு சிரித்துக்கொண்டு நான் உன்னைப்பாலனம் செய்கிறேன் அவனால் நீ சிருஷ்டிசெய்கிறாய் உன்னைப்பாலனம்செய்யஎன்னையன்றிவேறுயார். எனக்குச்சமமானவர் யாருமில்லைஎன்றுசொன்னார். அதற்குப்பிரமன் நீர்என்னைக்காப்பாற்றுகிறவரானால் எனது வயிற்றிற்புகுந்து என்மகிமையைப்பாரும் என்றுசொல்லவிஷ்ணுவும் யோகமாயையால்அவர்வயிற்றிற்பிரவேசித்து அங்குபிரம்மாண்டரசனையையும்பார்த்து வெளிவந்து உம்முடைய வயிற்றிலுள்ள இரசனையைமுற்றிலும்பார்க்கமுடியவில்லை. உன்வயிற்றில் சொற்பகாலம் நான்இருந்தபடியால் நீயேபெரியவன். ஆனால் நீயும் என்வயிற்றில் என்னுடைய பிரபாவத்தைப்பார் என்றுசொல்லவிஷ்ணுவின்வயிற்றிற்புகுந்து பிரமாண்டரசனையையும், மற்றொருபிரமாவையும் பார்த்து மோகித்து வெளிவரக்கருதினார். விஷ்ணுயோகமாயையால் துவாரங்களை மறைக்க பிரமாவு

தன்யோகவைபவத்தால் விஷ்ணுவின் நாபியிலிருக்கும்தாமரை நாளத்தின்வழியாய் துவாரம்உண்டுபண்ணிக்கொண்டு வெளியில்வந்தார். இருவரும் உருத்திரனை ஸ்மரிக்க அவரும் அவ்விடம்வந்தார் உம்முடைய ஐஸ்வரியமகிமையை எங்களுக்குக்காட்டவேண்டுமென்று இருவரும்வேண்ட உருத்திரனும் எங்கும் சோதிசொரூபமான மகாலிங்கமாகஆனார். அதைப்பார்த்து பிரமாவிஷ்ணுக்கள் ஆச்சரியமடைந்து பிரமாவிஷ்ணுவைப்பார்த்து நீர் இந்தலிங்கத்தின் அடியைக்கண்டுபிடியும், நான்மேலேசென்று சிரசைக் கண்டுபிடிக்கிறேன்என்றுசொல்ல விஷ்ணுஎனக்குவரங்கொடுத்தால் அப்படிச்செய்கிறேன்என்றுசொன்னார். பிரம்மாவும் அப்படியேவரங்கொடுத்தார். விஷ்ணு பிரமாவைநோக்கி நீர் எனக்கு பிள்ளையாகவரவேண்டுமென்று வேண்ட பிரமாவும் அவாந்தர சிருஷ்டிகாலத்தில் உம்முடைய நாபிக்கமலத்தின்வழியாக புத்திரனாய்த்தோன்றுகிறேன் என்று வரமளித்தார். பின்புஇருவரும் அவருடைய அடிமுடிகளைக்காணும்படி கீழும் மேலும்சென்று காணமுடியாமல் திரும்பி உருத்திரமூர்த்தியைவணங்கி உம்முடையமகிமையைக்காண எங்களால் முடியாதென்று சொல்லஉருத்திரமூர்த்திமகிழ்ச்சியடைந்து உங்களுக்குவேண்டும் வரங்களைக் கேளுங்கள் என அவ்விருவரும் எங்கள் இருவருக்கும் நீர் புத்திராக அவதரிக்கவேண்டுமென்று வேண்டினார்கள். உருத்திரமூர்த்தியும் அவர்களைப்பார்த்து. அவாந்தரகற்பத்தில் உங்களுடைய நெற்றியிலிருந்து புத்திராகத் தோன்றுவோம் என்று வரமளித்து அப்படியே விஷ்ணுவினிடம் ஈசனென்றபெயருடனும், பிரமாவிடம் நீலலோசிதனென்றபெயருடனும் அவதரித்தார். உலகத்தை நேமித்திகற்பத்தில் பிரமபுத்திரரான உருத்திரர் சம்காரஞ்செய்கின்றார் மகாகற்பத்தில் விஷ்ணு பிரமாதிகளுடன் மகாருத்திரரால் சங்கரிக்கப்படுகிறது. இந்தசுவேதவனத்தில் மகாருத்திரர் மகாகற்பத்தில் பிரமாதிகளை சம்ஹரித்து நிர்த்தனம் பண்ணி பிறகு ஆத்மயோகசமாதியிலிருந்து விடுகின்றார். அவ்விதம் சுவேதநாதர் சமாதியிலிருக்குமிடமே யோகநாதமென்று கூறப்படும். யோக நித்திரைசெய்தவிஷ்ணு சிருஷ்டியின்ஆதியில் மதங்காசிரமத்தையடைந்து யோகநாதரைப்பிரதிஷ்டைசெய்து, அவருடைய பிரசாதத்தால் பிரமருத்திரர்களை சிருஷ்டித்தார் க. என்றபிரமாவையும் ஈசனென்ற உருத்திரனையும் சிருஷ்டிசெய்த

படியால், கேசவர்என்று கூறப்படுவார். சுவேதாரண்யஸ்தலத்தின் மேலைமார்க்கத்தில் இருந்துகொண்டு யோகநாதரைப்பூசித்து வந்தார். சிருஷ்டியின் ஆரம்பத்தில்பிரமபுத்திரரான ஜனகாதிகள் நிவர்த்திமார்க்கத்தை அநுசரித்து, யோகநாதம் வந்து யோகநாதரைப்பூசித்து, ஞானயோகத்தைப்பெற்று, யோகசாந்தியையடைந்தார்கள். திரேதாயுகத்தில் ஆங்கீரசரான யோகமுற்கலர் யோகநாதரைப்பூசித்து, அவரிடமிருந்து யோகசித்தராகஆனூர். முற்காலதேசம் என்ற யோகசாஸ்திரத்தையும், யோகமௌற்கலமென்ற புராணத்தையும் செய்தார். துவாபரயுகமுடிவில் விஷ்ணுவியாசராகஅவதரித்து யோகநாதரைப்பூசித்து அவருடையதிருவருளால் வேதபுராணங்களைப்பிரித்து வேதாந்தம் பாரதங்களைச்செய்தார். சுவேதாரண்யத்திலுள்ள கேசவரானவர் விஷ்ணுவினுடையபன்னிரண்டு மூர்த்திகளுள் சேஷ்டரானபடியால் அவருக்குஅண்ணன்என்றுபெயர். அவ்அண்ணன்பெருமாள் கிழக்கு முகமாகஇருந்து தனக்கு அபிமுகமாகஇருக்கும் யோகநாதரைப்பூசித்துவருகின்றார். இப்பொழுதும் இரண்டு மூர்த்திகளும் அவ்விதமே இருக்கின்றன.

---

## ஐராவததேவ்ஸ்வரர் மகிமை.

கற்ப ஆரம்பத்தில் பரமேசுரனிடமிருந்து உண்டான திரிமூர்த்திகளும் சிருஷ்டி முதலிய முத்தொழில்களையும் அவரிடமிருந்து பெற்றார்கள். அவர்களுள் விஷ்ணு தம்முடைய பாலனசத்தியைத் தமது யோகத்தின்பொருட்டு தனிரூபமுடையவளாகச்செய்யக்கருதி, மதங்காசிரமத்தில் கீழ்சாலையடைந்து தமக்கு ஆசிரமம்வகுத்துக்கொண்டு, சுவேதகா தருக்கு ஈசான்யபாகத்தில் இலிங்கப்பிரதிஷ்டை செய்துபூசித்துவந்தார். சிவப்பிரசாதத்தால் விசுவபாலன ரூபிணியான இலக்ஷ்மி அவர் தேகத்திலிருந்து ஸ்திரீ ரூபிணியாகத் தோன்றினள். அவளைத்தான் விதிப்படி கிரகித்து 'மா, என்ற இலக்ஷ்மிக்கு நாயகராதலின் மாதவர்என்று பெயரடைந்து மாதவேஸ்வரரைப் பூசித்து ஆனந்தமடைந்தார்.

துர்வாசமுனிவருடைய சாபத்தால் ஐராவதமானது பூலோக யானையாக ஜனித்து பூர்வ ஞானமற்று மாதவேஸ்வர ஸ்தலத்தில் அநேக யானைகளுடன் வசித்துவந்தது. அப்பொழுது சிவப்பிரியராகிய சிவபக்தரை தந்தத்தால் குத்தித்தள்ள உருத்திரகணங்களால் அடிக்கப்பட்டு, பூர்வஞானமடைந்து மாதவேசுரருக்கு ஐராவதேசுரர் என்று பெயரிட்டு ஆயிரம் வருஷம் பூசை செய்ய பரமன் வெளிப்பட்டு இஷ்டமான வரங்களைக்கொடுத்து சாபநிவர்த்தியும் செய்ய அது சுவர்க்கம் சென்றது.

சுவேதாரண்யத்திற்கு வடக்கிலுள்ள காட்டில் வீமனென்ற வேடன் ஜனங்களை இம்சித்துத் தனங்களைத்திருடி தன்னுடைய மனைவிமக்களுடன் சுகமாக வாழ்ந்து வருகையில் விருத்தாப்பியனுகிஜரா வியாதியால் பீடிக்கப்பட்டு கஷ்டப்பட மனைவி மக்கள் வேண்டிய திரவியங்களை வாரிக்கொண்டு அவனைத்தனியே விட்டுப்போய்விட்டார்கள். பிறகு ஒரு பிராமணனைப்பார்த்து பிராமணர்களை அழைத்துவாரும் திரவியம் மிகுதியாகத்தருகிறேன் என்று சொல்ல அவன் உன்னிடம் பிராமணர்கள் தானம் வாங்கமாட்டார்கள் என்று சொல்லிப்போய்விட்டான். பிறகு வேடன் மாதவேசுரர் ஆலயத்தைநிர்மாணஞ்செய்து, பூசையின் பொருட்டு உலகத்திலுள்ள எல்லாத் தோட்டங்களுக்கும் பெரிதாய் ஒரு தோட்டம் மிகுந்ததிரவியத்தைச் செலவு செய்து ஏற்படுத்தினன். அதுமுதற்கொண்டு அந்தக்ஷேத்திரம் பெருந்தோட்டமென்று வழங்குகிறது,ஐராவதேசர் அவனுடைய திருப்பணி தர்மத்திற்குமகிழ்ந்து அவனைவிமானமேற்றி கைலாசத்திற்கு அனுப்பினர்.

---

## கலிக்காமேசுரர் மகிமை.

தினக்ஷ்ப்பாதியில் யோகநித்திரைசெய்யும் மகாவிஷ்ணுவின் காதழுக்கிலிருந்து மதுகைடவர் என்ற தானவர்கள் தோன்றி தேவரை வதைத்து பிரமாவையும் பக்ஷிக்க எண்ணுகையில்

அவர் மகாவிட்ணுவையும் நித்திராதேவியையும் தோத்திரஞ் செய்ய விட்ணுமூர்த்தி எழுந்து அவர்களிடம் யுத்தஞ்செய்து தோற்று மதங்காசிரமம் அடைந்து யோகநாதருக்கு ஈசான்ய திக்கில் கடற்கரையில் சிவலிங்கப்பிரதிட்டை செய்து பூசித்து வரம் பெற்று அவ்வரங்களின் பெருமையால் அத்தானவர்களை வதை செய்து ஜெயம் பெற்று மதுசூதனர் என்ற பெயரையடைந்தார். அவரால் பூசிக்கப்பட்ட மூர்த்திக்கு மதுசூதனேசுவரர் என்று பெயர்.

கலியுகம் இரண்டாயிரத்தைந்நூறு வருஷம் சென்ற பிறகு விட்ணு கவுதமர் என்றபெயருடன் கிகடதேசத்தரசனுக்கு புத்திரராகத்தோன்றி பௌத்தமார்க்கத்தை ஸ்தாபித்தார். பிறகு சந்திரகுப்தனுடைய பேரனான அசோகன் மாகததேச ஜனங்களுடன் அம்மார்க்கத்தை அனுசரித்து, இலங்கை, சீனம் முதலிய தேசங்களிலும் பரவச்செய்து அம்மதத்தை அனுசரிப்பவர்களுக்கு தனம் பூமி முதலிய தானமுஞ்செய்து வந்தான். இதனால் வைதிக மார்க்கம் நாளுக்கு நாள் குறைவடைந்து அழிந்தது. கர்மத்தைப்போதிக்கும் எண்ணூற்று நாற்பது உபநிஷத்துக்களை அசோகன் நெருப்பில் கொளுத்தினான். இவ்விதம் வெகுகாலம் சென்ற பிறகு மாளவத்தில் விக்கிரமாதித்த வம்சத்தில் தோன்றிய கலிக்காமன் என்ற அரசன் முன்போல வைதிக மார்க்கத்தை ஸ்தாபித்து பௌத்த மதத்தை நாசஞ்செய்யக்கருதி வைதிக மார்க்கத்தில் விருப்பமுடையஜனங்களைத்தேடிக்கொண்டு வந்து, சுவேதாரண்யமடைந்து மதுசூதனேசுரரைக்கண்டு பூஜித்து பன்னிரண்டு வருஷம் தவஞ்செய்தான். பரமன் அவனுடைய தவத்திற்கு மகிழ்ந்து காட்சி கொடுக்க கலிக்காமன் வணங்கி பகவானே! உலகத்தில் பௌத்த மார்க்கத்தை நாசஞ்செய்து வைதிககர்மத்தையும், தர்மத்தையும் பரவச்செய்ய வேண்டும் தேவரீர் கலிக்காமர் என்ற பெயருடன் இவ்விடம் எழுந்தருளியிருந்து அன்பர்களுக்கு அருள் செய்யவேண்டும் எனப்பிரார்த்திக்க. பகவான் அவனை நோக்கி யுகபேதத்தால் தருமம் விருத்தியும் க்ஷயமும் அடையும் கிருதயுகத்தில் பூமி முழுமையும் வேத

மார்க்கமாயும், திரேதாயுகத்திலும், துவாபரயுகத்திலும் குறைவாகவும், கலியுகத்தில் நூறிலொருபங்கு வேத மார்க்கமாயுமிருக்கும். ஆகையால் இப்பொழுது வேதமார்க்கத்தைத்தழுவிய துவிஜர்களை வரவழைத்து தனம் பூமி முதலியவற்றைக்கொடுத்து பலவிடங்களில் வேதபாடசாலை ஏற்படுத்தி வித்துவான்களைக்கொண்டு விருத்தியடையச்செய்க. பௌத்தமார்க்கத்திலிருந்து வைதிகசமயத்திற்கு வரவிரும்பும் பிராமணாதிகளை சம்ஸ்கார பூர்வமாய் தந்திரமார்க்கிகளாகச் செய்க, இப்பாரத பூமியில் முப்பத்து மூன்று கோடிஜனங்கள் இருக்கின்றார்கள். மூன்று கோடி பிராமணர்கள். அவருள் ஒரு கோடி வேதமார்க்கிகள். மற்றவர்கள் பௌத்தமத ஆசிரயிகளாயிருந்து இப்பொழுது தன்மார்க்கத்தை ஆசிரயிப்பார்கள். அவர்களைத் தந்திரபராளாகச் செய்க. க்ஷத்திரிய வைசியர்கள் விசேஷமாய்ப் பௌத்தர்களாய்விட்டார்கள் அவர்களை சம்ஸ்கார பூர்வமாக தந்திரபராளாயும், தம்தம் வருணபராளாயும் செய்க. எல்லாரையும வைதிகத்துக்கு அருகர்களாகச்செய்கஎன்று எல்லாரையும் ஜெயிக்கும்படியான ஒருசத்தியும் கொடுத்து மறைந்தருளினார். கலிக்காமன் தன்னாடுசென்று பௌத்தமார்க்கத்தில் அதிக உறுதியுள்ளவர்களை மத்திரதேசத்தில் குடியேற்றி மற்றவர்களை ஆரிய மார்க்கிகளாகச்செய்து பாதுகாத்து அரசாண்டுவந்தான். அதுமுதல் உலகத்தில் வைதிக மார்க்கந்தலைஎடுத்தோங்கியது.

---

## அகத்திய முனிவர் காவிரிசங்கமத்திற்கு எழுந்தருளல்

ஒரு மகோதய புண்ணிய காலத்தில் அகஸ்தியமுனிவர் இராமசேதுவிலிருந்து காவிரி சங்கம சாகரத்தில் ஸ்நானஞ்செய்வதற்காக சிஷ்யர்களுடன் சுவேதாரண்ய க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார். சுவேதாரண்ய க்ஷேத்திரவாசிகளான வசிஷ்டாதி முனிவர்கள் அவரை நமஸ்கரித்து அஞ்சலியஸ்தராய் விநயத்துடன் கேட்கின்றார்கள். நீர் இராமசேதுவைவிட்டு இவ்விடம் எழுந்தருளக் காரணம் என்னவென்று கேட்க. அகஸ்தியர் வசிஷ்டாதி முனிவர்களே சுவேதாரண்யம் என்ற மகா க்ஷேத்திரத்தில்

மதங்காசிரமமானது விஷ்ணுவின் பன்னிரண்டு மூர்த்திகளாலும் சிவனுடைய பன்னிரண்டுமகாலிங்கங்களாலும் சர்வோத்கிருஷ்டமாய் விளங்குகின்றது. மதங்காசிரமத்திற்கு சமமாக பூவுலகில் வேறுக்ஷேத்திரமில்லை. பிரமலோகத்திற்குமேற்பட்ட வைகுண்டத்தில் விஷ்ணு இலட்சுமியுடன் கேசவாதிகளான பன்னிரண்டு மூர்த்திகளுடன் வசிக்கின்றார். வைகுண்டத்திற்கு மேலாகவுள்ள சிவலோகத்தில் தன்னுடைய நானு மூர்த்திகளுடன் சிவபெருமான் பார்வதிபதியாக வசிக்கின்றார் ஆகையால் வைகுண்டம் கைலாசம் ஒரேயிடமாய் இருப்பதாலும் பதின்மூன்று விஷ்ணு மூர்த்திகளையும் பதின்மூன்று பரமசிவமூர்த்திகளையும் ஏககாலத்தில் பூர்வாங்கயாத்திரானு குணக்கிரமமாய்ச் செய்தால் அர்த்தகாமமோக்ஷமாகிய முக்காமங்களையும் கொடுப்பார். நீங்களும் அவ்விதமே செய்யுங்களென்று க்ஷேத்திரமகிமையை விரிவாக எடுத்துக்கூறினார்.

---

## மதங்காசிரம துவாரயாத்திரை மகிமை.

அவந்திநகரத்தில் சுசீலர் என்ற பிராமணன்வேதவித்தாய் சகலயாகங்களும் செய்து தன்மகாபதிவிரதையான குணவதியுடனும், சர்வலக்ஷணம்பொருந்திய மகாகாளன் என்ற புத்திரனுடனும் சிவக்ஷேத்திரதரிசனம் செய்யக்கருதி தன்னுடைய சகல சொத்துகளையும் எடுத்துக்கொண்டு அநேகஸ்தலயாத்திரை செய்து பாரசவனம் வந்து பாலமாயிர்நாதராகிய விநாயகரையும், சுவர்ணபுரீசரையும் மதங்கேசரையும், சுவேதாரண்ணியமான காளஞ்சரத்தில் சுவேதவனநாதரையும் விதிப்படி தரிசனஞ்செய்து, அன்றுஇரவு ஓர் அந்தணன்வீட்டில் தங்கி நித்திரைசெய்யுங்காலத்து, சிலதிருடர்கள் அவ்வீட்டுச்சொத்துகளையும், சுசீலர் புத்திரனுகிய மூன்றுவயதுள்ள சுவர்ணுபரணந்தரித்த மகாகாளனையுந்தூக்கிக்கொண்டு காட்டுமார்க்கமாய் ஓடிவிட்டார்கள் காலையில் வீட்டுக்காரரும் சுசீலரும் விசனமடைந்தனர். அவருள்சுசீலர் நெய்தவாசலிருக்கும் போதாயனமுனியையடைந்து, நமஸ்கரித்து, தனக்கு ஏற்பட்ட துக்கத்தைச்சொன்னார்.

போதாயனர் அவரைச்சமாதானஞ் செய்ய சுசீலர் அவரிடஞ் சந்தேகநிவர்த்திசெய்துகொண்டு பாபக்ஷயத்தின்பொருட்டு பிரவர்த்தித்த எனக்கு வம்சக்ஷயம் நேர்ந்துவிட்டதென்று சொல்லிக் காவிரிசங்கமத்தில் ஸ்நானஞ்செய்து மனைவியுடன் மத்தியார்ச்சுனத்தையடைந்தார். பிராமணன்சொத்தை அபகரித்த திருடர்கள். மதங்கேசுரர் ஆலயத்தின்வழியாய்ச் செல்லுகையில் மதங்கேசர் பக்தபாலனத்தின் பொருட்டு கொத்தவால் வேஷந்தரித்து, திருடர்களைத்தடுத்து தமது கிங்கார்களால் அவரைப்பயமுறுத்தினார். திருடர்கள் திரவியங்களையும் பிராமணச்சிறுவனையும் தேவாலயத்தில்விட்டு ஓடிவிட்டார்கள். காலையில் மதங்கேசர் பூசைக்குவந்த ஏழைப்பிராமணன், சிறுவனையுந்திரவியங்களையும் பார்த்து ஆச்சரியமடைய, அப்பொழுதுமதங்கேசர் அசரீரியாய் இங்குள்ளதனம் பாலனுடையது, இப்பாலகனையும் தனத்தையும் எடுத்துக்கொண்டு சவாக்ஷணைசெய்துவந்தால் அவனுக்குபதினாறுவயதாகும்பொழுது உனக்கும் உன்மனையாளுக்கும் பேறுண்டு என்று அருளிச்செய்ய, அந்தப்பிரகாரம் வளர்த்துவந்தான். அப்பாலகனும் சுக்கிலபக்ஷத்துச்சந்திரன்போல வளர்ந்துவந்தான். மதங்கேசர்ஆக்ஞையால் மதங்கர் அப்பாலகனுக்கு வேதமுதலிய சகலவித்தைகளையும், கற்பித்து அவனைப்பார்த்து மாளவதேசவாசியான உன்பிதா மதங்கேசரைச்சேவித்து வெண்காடுசென்றபொழுது திருடர் உன்னை அபகரித்தமையால் துக்கித்து வேறுக்ஷேத்திரங்களுக்குப் போய்விட்டார். ஒருதரம் உன்பிதா மதங்கேசரைத்தரிசித்தபடியால் அவர் உன்னைத்திருடரிடமிருந்து காப்பாற்றி வளர்க்கும்படி இப்பிராமணரிடம் ஒப்புவித்தார். நானும் அவருத்தரவின்படி சகல கல்விகளையும் கற்பித்தேன். நீயும் விதிப்படி இம்மதங்கேசரைச்சேவித்தால் இகபாசிலாக்கியங்களை அடைவாய் என்று சொன்னார். அச்சிறுவன் முனிவரைவணங்கி இந்தஸ்தலத்தில் மதங்கேசரைசேவிக்கும் விதியை உபதேசிக்கவேண்டும் என்று கேட்க. மதங்கர் சொல்லுகின்றார், நாலாயிரத்திலொருவர், சுவேதநாதர், ஆரண்யேசர் மூவரும் மதங்கேசருக்குப்பூர்வாங்கதேவர்கள், வியாக்கிரபாதேசர், நயனார்ப்பணேசர், நாகநாதர் மூவரும்

தக்ஷிணாங்கதேவர்கள், பாலமாயிரநாதர், சுவர்ணபுரீசர், நாராயணர் மூவரும் பச்சிமாங்கதேவர்கள், அமிர்தவிநாயகர், அமிர்தேசர், நம்புவார்க்கன்பர் மூவரும் உத்தராங்கதேவர்கள், மாதங்கி மதங்கவிநாயகர், விருஷபதேவர், மோகினி நால்வரும் கிரகதேவர், மாகமாதம் சுக்கிலபக்ஷம் ஏகாதசிதினம் விதிப்படி மதங்கதீர்த்தத்தில்ஸ்நானம்செய்து நித்தியவிதிமுடித்து, மதங்ககணநாதனை சுருக்கமாய்ப்பஜித்து, மதங்கேசரை கிரமப்படி பூசனைசெய்து, மதங்கி, மோகினி, விருஷபதேவர் இவர்களையும் பூசித்து பஞ்சாக்ஷரத்தை. செபித்து மறுபடியும்மதங்கேசரைப் பூசித்து, பிறகு நாலாயிரத்தில் ஒருவர் ஆலயம்சென்று தெசாஸ்வமேத தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து இராமனால் பூசிக்கப்பட்ட அவ்விநாயகரைப்பூசித்து சுவேதவனஞ்சென்று அங்குதெரிசனஞ் செய்து சங்கமுகஸ்நானம் செய்து, சுவேதநாதர், அகோரர், நடராஜா, பிரமவித்தைகளைப் பூசித்து ஆரண்யேசம் சென்று தரிசித்து மதங்காசிரமம் சென்றுமதங்கதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மதங்கேசரைப்பூசித்து பூர்வாங்கசேவையை ஏகாதசியன்றுமுடிக்கவேண்டியது.

துவாதசிதினம் காலையில் மதங்கதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, கணேசர், மதங்கேசர், அம்பிகை விருஷபதேவர், மோகினிஇவர்களை பூசித்து வழிபட்டு வியாக்கிரபாதாசிரமஞ்சென்று மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்து வியாக்கிரபாதேஸ்வரரை தரிசித்து, நளினிபுரஞ்சென்று தாமரையோடையில் ஸ்நானஞ் செய்து நயனார்ப்பணேசுரரையும்லெக்ஷமிநாராயணரையும் நாகநாதஞ்சென்று மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்து நாகநாதரையும் புஷ்டிவிநாயகரையும் பரிவாரங்களுடன் தெரிசித்து மதங்கேசஞ்சென்று தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து மதங்கேசரைப்பூசித்து தக்ஷிணாங்கயாத்திரையை முடிக்கவேண்டியது. திரயோதசிதினம் மதங்கதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து முன்போலவேபூசித்து பாலமாயிரஞ்சென்று கணேசபிண்டத்தில் ஸ்நானஞ்செய்து சித்திபுத்தியுடன் சர்வாபீஷ்டபரதானபாலமாயிரகணேசரைப்பூசித்து, சுவர்ணபுரீசரைவழிபட்டு மதங்காசிரமஞ்சென்று லெக்ஷமிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து நாராய

ணமூர்த்தியை வழிபட்டு மதங்கதீர்த்தத்தில்ஸ்னானஞ் செய்து மதங்கேசரைவழிபட்டு பச்சிமாங்க யாத்திரையை முடிக்கக்வேண்டியது சிவசதுர்த்தசிதினம் காலையில் மதங்கதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து கணேசர், மதங்கேசர் அம்பிமை, விருஷபமோகினி இவர்களைப்பூசித்து, அமிர்தவிநாயகர் அமிர்தேசர் குடமாடுகூத்தர், நம்புவார்க்கன்பர் பரிவாரங்களுடன் இவர்களைபூசித்து மதங்கேசஞ்சென்று தீர்த்தஸ்நானஞ்செய்து மதங்கேசரை சேவித்து உத்தராங்கயாத்திரையை முடிக்கவேண்டியது. சாயுங்காலத்தில் ஸ்நானஞ்செய்து இராத்திரி நான்குஜாமமும் மதங்கேசரைப்பூசித்து, விடியற்காலையில் காவிரிசங்கமஞ்சென்று சமுத்திரஸ்நானஞ்செய்து வேதபுரீசர் பரமேசவிநாயகர், கௌதமேசர், பல்லவனேசர், சாயாவனேசர் இவர்களைந்தெரிசித்து, இராத்திரி சுவேதவனஞ்சென்று சுவேதநாதர், அகோரர், நடராஜர், இவர்களைப்பரிவாரங்களுடன் தெரிசித்து பார்த்தசாரதி ஆரண்ணேசர் இவர்களையுந்தெரிசித்து மறுநாள் மதங்கேசஞ்சென்று மதங்கேசரைப்பூசித்து பிராமணசந்தர்ப்பணஞ்செய்ய வேண்டியது. இதுவே மதங்கேசருடைய சேவாவிதி இவ்விதம் நான்கு தினங்களில் முடிக்கவேண்டியது சத்தியிருநதால் சிவசதுர்த்தசி தினமே நான்கு அங்கயாத்திரையும் முடிக்கலாம் இதுபோல கடகமீ மகரமீ களில் கிருஷ்ணபக்ஷத்தில், முன்கூறியபடி நான்கு அங்கயாத்திரைகளை முடித்து அமாவாசை தினம் சமுத்திரஸ்நானம் செய்து யாத்திரைமுடிக்கவேண்டியது இகத்தில் சகலபோகபோக்கியங்களுடன் வாழ்ந்து, மறுமையில் மோக்ஷத்தையும் அடைவார்கள். அர்த்தோதயமகா உதயபுண்ணியகாலத்தில் இந்தவிதிப்படிசெய்வார்கள், இதில் ஆயிரமடங்கு விஷேடபலனை அடைந்து மகாகாளன் என்ற அப்பிராமணச்சிறுவன் மதங்கரைவணங்கி கர்மபூமியில் பாரதகண்டத்தில் தண்டகாரண்யத்தில் பரமேசுவாருக்குப்பிரதானக்ஷேத்திரமுண்டானதற்குக்காரணத்தைச்செல்லவேண்டுமென்று கேட்கமதங்கர் சொல்லுகின்றார் ஒவ்வொருமனிதர்களுடைய சுபாசுபகர்மாநுபவமே அவர்களுக்குத்தண்டமென்று சொல்லபடுகிறது. தண்டமென்றால் சிக்ஷைதண்டத்தை நாசஞ்செய்வது. அரண்யும் அரண்யமென்றால் சூனியம் பிரமரூபபிரதமேபூரணதண்ட

வாசகம் கர்மாநுபவரூபமானதண்டத்தை நாசஞ் செய்து பிரம ப்ராப்தியைக்கொடுப்பதால் இப்பிரதேசத்திற்குத்தண்டகாரண் யமென்றுபெயர். தண்டகாரண்யவாசியானபரமன் பிரம்மரூப மாய் விளங்குபவர் தண்டிகளாகிய யோகிகளுக்கு இதத்தைச் செய்கின்றவர் ஆகையால் யோகேஸ்வரரானமதங்கேசர் இங்கு வசிக்கின்றார் என்று சொன்னார்.

மகாகாளன் பகவான் துவாரயாத்திரபலனைச் சொல்ல வேண்டுமென்று கேட்க மறுபடியும் மதங்கர் சொல்லுகின்றார்: காட்டில் பதியின்றி தனியாய்ச் சென்ற ஒரு பிராமண ஸ்திரீ துர்ச் சனரால்பிடிக்கப்பட்டு பதிவிரதிவ்யத்தை இரக்ஷிக்கும் பொருட்டு இதற்கு ஐந்தாவது நாள் உங்களுக்கு ஸ்திரியாகிறேன், என் சத்தியவாக்கைப்பாருங்கள் என்று சொல்லி நீங்கள் இப்பொழுது போய்விடுங்களென்று சொல்லியனுப்பிவிட்டு சந்தோஷமாய்த் தன் வீடு சென்றாள்.

நம்முடைய பதியாகத்திற்குச்சென்றிருப்பதால் நம்மைக் காப்பவர் வேறு ஒருவரும் இல்லை என்று மதங்கேசரையே சரண மடைகிறதாகத் தீர்மானித்து, யாத்திரை செய்தால் சுவதர்மம் காப்பாற்றப்படுமென்று மதங்கேசஞ்சென்று மதங்கதீர்த்தத்தில் ஸ்தானஞ் செய்து முன் சொல்லப்பட்டப்படி பூர்வாங்கமான பூர்வ துவாரயாத்திரையை முடித்தாள். பிறகு தன் சத்தியத்தை பாலனஞ் செய்ய வீடு சென்றாள். ஐந்தா நாள் துர்ச்சனர்களாகிய திருடர்கள் முன் அவள் சொன்னபடி வந்தார்கள். தன் தர்மமான பதிவிரத்தியத்தை இரக்ஷிப்பதற்காக மதங்கேசரை தியானித்தாள் உடனே அவ்விடத்தில் அக்கினி உண்டாகி அத்திருடர்களைத் தகித்துவிட்டது. இதைப் பார்த்த பிராம்ண ஸ்திரீ ஆச்சரியம் அடைந்து பதிக்குத் தெரிவித்து பதியுடன் யாத்திரை செய்து பதியும் தானும் விசேஷ தர்மசித்திகளையும் போக போக்கியங் களையும்பெற்று, அந்தியத்தில் கைலாசத்தைச்சேர்ந்து சாயுச்சிய பதவியைப் பெற்றார்கள். இவ்விதம் அநேகஜனங்கள் பூர்வ துவாரயாத்திரை செய்து தர்மசித்தியையும் புத்தி முத்திகளை

யும் அடைந்தார்கள். தெக்ஷண துவாரயாத்திரையைச் சொல்லுகின்றேன் கேள் என்று மறுபடியும் சொல்லுகின்றான்.

சாஸ்திரவிற்பன்னனும் பலவானும் இருக்கும் மாளவதேசத்தரசன் நீதிவழுவாது பிரஜைகளைப்பரிபாலனஞ்செய்து வருகையில் ஒருகால் சமீபதேச அரசர்களால் யுத்தத்தில் பீடிக்கப்பட்டு சோகத்துடன் அரசன் சவுனகமுனியையடைந்து வந்தனை வழிபாடுகள் செய்து தன்குறைகளைச் செல்ல அவர் அரசனைநோக்கி நீமதங்காசிரமஞ்சென்று விதிப்படிதெக்ஷிண துவாரதேவர்களைத்தரிசனஞ்செய்து யாத்திரையை நிறைவேற்றினால் உன்காரியம் சித்தியாகும் என்று கூறினார். அரசனும் அவ்விதமேதக்ஷிணதுவாரயாத்திரையை முடித்துத்தன்னாடுசென்றுமதங்கேசனைத்தியானித்து எதிரியைவென்று தன் இராச்சியத்தையடைந்தான். அர்த்தமென்றால்சாமர்த்தியம் சம்பத்து இரண்டுக்கும் பெயர் தக்ஷிண துவாரயாத்திரையால் இகத்தில் போகபோக்கியங்களும் அந்தியத்தில் சாயுச்சியபதவியுங்கிடைக்கும் என்று சொல்லிப்பின்பச்சிமயாத்திரைப்பலனைச்சொல்லுகின்றார்.

பாரகந்தரத்திலுள்ளசாம்பனென்ற ஓர் வைசியன் தரித்திரத்தினாலும், வியாதியினாலும் பீடிக்கப்பட்டு உலகபோகமின்றி வியாதியுடனிருக்கையில் ஒருபிராமணனால் ஸ்காந்தத்திலுள்ள மதங்கவனமான்மியத்தைக் கேட்டு வியப்படைந்து, பலாசவனஞ்சென்று விதிப்படி பாலமாயிரநாதர் முதலியபச்சிம துவார தேவர்களைப்பூசித்து மதங்கேசனை அர்ச்சித்து யாத்திரையை முடித்தான். உடனே ரோகம் நீங்கித்தன்னாடுசென்று தன்வைசியத்தொழிலால்விசேஷதனத்தையும் பெற்று தன்வீட்டில் பச்சிமாங்கதேவர்களானகணபதி முதலியவர்களைப்பூஜித்து முடிவில் சாயுச்சியபதவியையடைந்தான். பின் உத்தராங்க யாத்திரை பலனைச்சொல்லுகின்றார்

கர்னாடகதேசத்தில் வீமனென்ற ஓர் சூத்திரன் ஒருக்கால்முக்கல புராணத்தைக்கேட்டு வைராக்கியமடைந்து மாயாமய

மான சகலத்தையும் விட்டு, முத்தியடையும்மார்க்கத்தை விரும்பி, கானகஞ்சென்று திரிகையில் விஸ்வாமித்திரமுனியைக்கண்டு நமஸ்கரித்துத் தன்மனோபாவத்தைத் தெரிவித்து மோக்ஷமடையும் உபாயத்தைக்கேட்டான். அதற்குவிஸ்வாமித்திரர் அநேக சாகரமார்க்கங்களால் மிகுந்த சரீரப்பிரயாசத்தால் அடையக்கூடியதாயினும் நீவெண்காடு சென்று மதங்கேசரைப்பூசித்து உத்தராங்கயாத்திரையை விதிப்படி முடித்தால் சுலபமாக மோக்ஷத்தையடைவாயென்று சொன்னார் உடனே அவன் விஸ்வாமித்திரரைவணங்கிவிடைபெற்று மதங்காசிரமத்தையடைந்து அமிர்தே[illegible]ர்முதலிய உத்தராங்கதேவர்களை விதிப்படிவணங்கியாத்திரையைமுடித்து, தன்வீடுசென்று பிராமணர் ஆகுதிகளுக்கு வேண்டியபணிவிடைகளைசெய்து சற்கருமங்களை தங்கள் வர்ணாசிரமத்திற்கேற்றவாறு செய்து, தேகாந்தத்தில் சூரியலோகஞ்சென்று அங்கு இருந்து பிறகுகைலாசஞ்சென்று சாயுச்சியபதவியையடைந்தான் என்று சொல்லிப்பிறகு பூரணயாத்திரைபலனைச்சொல்லுகின்றார்.

மாளவதேசத்தில் பஞ்சமஜாதியில் ஜனித்தபிசவன் என்ற துஷ்டன் திரவியபேராசையால் காட்டிலிருந்துகொண்டு வழிப்போக்கர்களைக் கொன்று திரவியங்களை அபகரித்து வந்தான். இப்படியிருக்கும்போது மாளவத்திலிருந்து தண்டகவனதேசத்தில் வியாபாரஞ்செய்யவந்த ஒருவைசியன்மிகுந்த திரவியத்துடன் அனேகஜனங்களுடன் வரும்பொழுது அத்துஷ்டன் பார்த்து தனித்தசமயத்தில் திரவியங்களை அபகரிக்கக்கருதி அவனைப் பின்தொடர்ந்து சென்றான். அவ்வைசியன் மதங்கேசரின் பூர்வாங்கதுவாரயாத்திரையை விதிப்படி செய்தான். அவ்விதமே திரவியத்தை அபகரிக்கக்கருதியபஞ்சமனும் நான்கு துவாரயாத்திரையிலும் அவனுடன் சென்றான். அப்பொழுது அவனுக்கு துர்ப்புத்திவிலகி நான் என்னபிசகானகாரியங்களைச் செய்துவந்தேன். இப்போழுதுஞ்செய்ய எத்தனித்தேன் நான் இறந்தால் இக்கொடியபாவங்களுக்கு என்னகதிகிடைக்குமென்று மனசில் ஆலோசனை செய்து, நற்புத்தியடைந்து வைசியனைவணங்கி

விடைபெற்று தன்வீடு சென்றான். அவன்பூர்வதுவாரஞ்சென்றதால் சுவதர்மசாரமுள்ளவனும், தக்ஷண துவாரயாத்திரையால் சாமர்த்திய முள்ளவனும், பச்சிமதுவாரயாத்திரையால் நிரோகதனபோகமுள்ளவனும், உத்தரதுவாரயாத்திரையால் சுக்கிலகதிதுவாரமோக்ஷத்தையும், அடைந்தான். இவ்விதமாக அநேகஸ்திரிபுருஷர்களும் சர்வவருணஜனங்களும் துவாரயாத்திரை செய்து, துவாராநுகுணமானபலனையும், பூரணபலனையும் அடைந்திருக்கின்றார்கள், ஆகையால் நீயும் செய்து உன் அபிஷ்டத்தை அடைவாய் என்று மதங்கர் மகாகாளனுக்குக்கூறினார். மகாகாளன் மதங்கமுனிவரைவணங்கிவிடைபெற்றுத் தன்னைவளர்த்த பிராமணனிடஞ்சென்று விடைபெற்று மதங்கேசாலயஞ் சென்று மதங்கர் சொன்னவிதிப்படி நான்கு துவாரயாத்திரைகளையும் சமுத்திரஸ்நானம் முதலிய உத்தராங்கங்களையும ஐந்து நாள் கிரமமாய்செய்து முடித்தான். இதனால் மதங்கேசர் சந்தோஷமடைந்து தரிசனங்கொடுக்க அவனும் தரிசித்து அவரை நோக்கி, எம்பெருமானே! உம்முடையபாதபத்தியும், அநாயாசமரணமும், முத்தியும் அடியேனுக்கு அருளி, ஏகாதசிமுதல் ஐந்துதினம் உமதுயாத்திரையை விதிப்படி முடித்தவர்க்கு தர்மார்த்தகாமமோக்ஷம்,, பிரமபூயம் ஆகிய இவைகளை அளிக்க வேண்டும் என்று பிரார்த்திக்க பகவானும் அப்படியேவாங் கொடுத்து நீ உன் பெற்றோர்களுடன்பூமியில் சகலபோகபோக்கியங்களையும் அநுபவித்து முடிவில் மோக்ஷத்தையும் அடைவாய் என்று மறைந்தருளினார். அச்சிறுவனும் தன்னை வளர்த்த பிராமணர் வீட்டில் சிவபத்திசெய்து கொண்டுவசித்துவந்தான்.

ஒருசமயம் தேவர்களும் முனிவர்களும் சேர்ந்து மதங்காசிரமத்தில் துவாரயாத்திரைசெய்யச்சொன்னார்கள். அப்பொழுது அவர்களுக்குள் வாதமுண்டாயிற்று. சகுணர்களாயும் நிர்க்குணர்களாயும் கூறப்படும் சிவம், சத்தி, விஷ்ணு, சூரியன், கணேசர், ஆகியஐந்து தேவர்களும் சமமாயிருக்க சிவன்மாத்திரம் எப்படிசர்வபூச்சியராய் ஆவார் மற்ற நால்வரும் எப்படியோ அப்படியே சிவனும். அவரர்கள்பத்தியாநுசாரமாய்பூசிக்க வேண்டியது என்று சொல்லிக்கொண்டார்கள். மதங்கேசர் சேவார்த்தமாய்ச்சென்றிருந்த மகாகாளர் இதைக்கேட்டு மகாதேவன்

என்ற பெயர் சிவன் ஒருவருக்கே உரியதாக வேதாதிகளிற் கூறப்பட்டிருக்கின்றது. விஷ்ணு முதலிய தேவர்கள் மகாதேவாசிரயர்கள் அல்ல. சர்வதேவஜனகராயும், சர்வாபீஷ்ட சித்தி பிரதாரயும் இருப்பவர் அவரே என்று சொன்னார். அவ்வார்த்தையைக்கேட்டு பிரம்மாகோபங்கொண்டு சிவபத்தியால் இவ்வாறுகூறினாய் பிரம விஷ்ணு, உருத்திராதிய நாங்கள் மூவரும் சமமானவர்கள், நாங்கள் ஒருவரை ஒருவர் வந்தனைவழிபாடு செய்வோம். வேதத்தில் அவருக்கு என்ன அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மகாதேவர் என்ற பெயருடையவராயினும் தேவரில் ஒருவரேயென்றுசர்வசந்நிதியில் இப்பொழுது அவருடைய சாமர்த்தியதைப்பார்ப்போமென்று, சொல்லி விஷ்ணுவுடன் சத்தியசங்கற்பசத்தியால் அபாரமான நிவேதனத்தைக்கற்பனைபண்ணி வைத்துக்கொண்டு, கபடதர்மமுள்ளவர்களாய் மதங்கேசரைப் பூசித்தார்கள். மதங்கேசராகியபரமசிவன் அபாரமானநிவேதனத்தைப்பார்த்து, ஆச்சரியமடைந்து, பிரமவிஷ்ணுக்களுடைய மனோபாவத்தையறிந்து சத்தியசங்கற்பசத்தியை அவர்களிடமிருந்து அபகரித்து கற்பனைபண்ணியிருந்தநிவேதனத்தை சாப்பிட்டுவிட்டு மிகுந்தபசியாயிருக்கிறபடியால் இன்னும் நிவேதனம் வேண்டுமென்று கேட்டார். மறுபடியும் அவர்கள் அபாரமாய் கற்பனைசெய்ய நினைத்து சத்தியசங்கற்பசத்தியில்லாமையால் நிவேதனம் உண்டாகவில்லை, அவர்கள் துக்கமடைந்து நாம்சத்திசங்கற்பமற்று ஜீவகோடிகளைப்போல் ஆகிவிட்டோம். மதங்கேசராகியபரமசிவன் நம்மை சிக்ஷிப்பார் கபடதர்மத்தை அநுஷ்டித்த நீநாம்யாரைச்சரணமடைவோம் என்றும், மகாகாளர் சொல்லியும் கேளாமல் மகத்தான அபராதத்தைச்சம்பாதித்துக்கொண்டமையால் அவரைச்சரணமடைவதே சிரேஷ்டமென்றும் சொல்லிக்கொண்டிருக்கையில் மதங்கேசர் ஆற்புதரூபத்தைத் தரித்து கோபத்துடன் பிரமவிஷ்ணுக்களைப்பக்ஷிக்கத்தொடங்கியபொழுது அவர்கள் பயமடைந்து ஓடிமகாகாளராகிய சிவபத்தரை அடைந்தபொழுது அவர் அவ் இருவரையும் ஆசுவாசப்படுத்தி ஓர் அறுக்கைக்கையில் எடுத்துக்கொண்டு உக்கிரரூபதாரியான மதங்கேசரிடம் வந்து நமஸ்கரித்து உம்முடைய மாயையால் மோகத்தையடைந்த பிரமவிஷ்ணுக்கள் உம்மிடமிருந்து

உதித்தவர்கள். உமது பாலர், அவர்களுக்குத்தண்டனைசெய்ய வேண்டாம், குற்றத்தை மன்னிக்கவேண்டும் நீரே உலகத்தில் யாவரையும் போஷிக்கின்றீர் உம்முடைய போஷணத்தையும் நீரேசெய்து கொள்ளுகின்றீர். என்று சொல்லி தூர்வாங்குரத் தைக்கையில் கொடுத்தார் அதில் அறுவகைருசியுடன் கூடிய திவ்ய அன்னம்பக்தர்மனசால் கற்பிக்கப்பட்டிருந்ததால் அதைச் சாப்பிட்டு பரமனுர்திருப்தியடைந்து உத்தமமானபத்தி விருத்தி யடையும்படி அநுக்கிரஹம் புரிந்தார். பரமன்பிரசன்னராகிஇருப் பதை அறிந்தபிரமவிஷ்ணுக்கள் வந்து நமஸ்கரித்து உம்முடைய மாயையால் மோகம் கொண்டு செய்த அபராதத்தை மன்னித்து அருள்புரியவேண்டும் உம்முடைய சுயரூபத்தை அறிந்துகொண் டோமென்று, அதர்வசிரஸ் என்ற உபநிஷத்தால் துதிசெய்தார் கள் மகாகாளர்முனிவர் விஷ்ணு, பிர்மாமுதலியயாவரும் விதிப் படி பூசித்தார் பிரமவிஷ்ணுக்கள் முன்போலசத்தியசங்கற்பசத் தியை அடைந்தார்கள். பிரமவிஷ்ணுக்கள் மகாகாளருக்கு அஷ்ட சித்தியை யளித்து தங்களிடத்தையடைந்தார்கள், மகாகாளரும் மதங்கேசரைநமஸ்கரித்து புரட்டாசிமீ சுக்கிலபக்ஷஅஷ்டமியில் என்னால் கொடுக்கப்பட்டதூர்வையால் நீர் திருப்தியடைந்தபடி யால் அத்தினத்திற்கு தூர்வாஷ்டமி, மகாகாளாஷ்டமி என்ற பெயரும் உண்டாக வேண்டுமென்று பிரார்த்திக்க. அவ்விதமே வரமளித்து அவனை ஆலிங்கனம் செய்து மதங்கேசர் மறைந் தருளினர்.

இவ்விதம் துவாரயாத்திரபலத்தால் அப்பிரமணச்சிறு வர் பிரமாமுதலியோரைக்காட்டிலும் சிரேஷ்டபாவத்தையும் உத் தமமான்சைவஞானத்தையும் பெற்று பிரமாவிஷ்ணுக்களுக்கு இரக்ஷகராக ஆனர் இதைப்படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக் க்கு மதங்கேசர்சர்வாபீஷ்டங்களையும் கொடுக்கின்றார்.

## மகாகாளருக்கும் அரசனுக்கும்
## வேதாகமபுராண சம்பாஷணை

காஞ்சிபுரத்தில் வரதனென்றசோழராஜன் காமாக்ஷியம் மனை பூஜித்து செபித்துவர, அவ் அம்மைமகிழ்ச்சியடைந்து, அவனுக்குச்சொப்பனத்திற் றோன்றி, அன்பனே! நீ விரும்பியதை

குருவின் கிருபையால் அடையதக்கது. சர்வவித்தைகளின்சாரமும் இரகசியமுமான கேள்விகளையும் அவைகளின் பதில்களையும் உனக்கு எழுதிக்கொடுக்கின்றேன். சபையில் நீ கேட்கும்பொழுது நான் எழுதிக்கொடுத்தபடி பதில் உரைப்பவரையே குருவாகக்கொண்டு, அவருடையகிருபையால் சார்வபௌமனுய் ஆவாய் என்று மறைந்தாள். அரசன் விழித்து வியப்படைந்து காமாக்ஷியம்மை எழுதியபுஸ்தகத்தைப்பார்த்து ஆநந்தித்துதன் அரண்மனையில் ஒரு வித்தியாசபை ஏற்படுத்தி, வேதாகமபுராண சாஸ்திரங்களில் தேர்ந்தபண்டிதரைவரவழைத்து சன்மானஞ் செய்துவந்தான் இதைக்கேள்விப்பட்ட மகாகாளரும், இன்னும் பலபண்டிதரும் அவ்வித்தியாசபைசெல்ல அரசன்யாவரையும் வணங்கிஆசனம்அளித்து, ஏ வித்துவான்களே! சிலர் ஒருவித்தை, சிலர் இரண்டுவித்தை, சிலர் வேதம், சிலர் ஆகமம், சிலர் சாஸ்திரங்களிலும் பண்டிதராகவும், சிலர் சகலசாஸ்திரங்களிலும் பண்டிதராக இருப்பீர்கள். என்னுடைய நன்மையின்பொருட்டு நான் உங்களை சிலகேள்விகள் கேட்கிறேன், அக்கேள்விகள் எல்லாவற்றிற்கும் பதில் அளிப்பவர்கள் இந்நாட்டில் எனக்குக்குருவாக ஆவார்கள். நான் அவர்களுடைய சுவாதீனமாவேன் மற்றவர்கள் பதில் சொல்லுவதற்கேற்றபடி சன்மான முதலியசெய்யப்படும். என்று சொல்ல அதனைக்கேட்ட மகாகாளர் அரசனைப்பார்த்து சகலவித்தைகளிலும் என்னைக்கேள்விகள் கேட்கலாம், மதங்கேசர் திருவருளால் எல்லாக்கேள்விகளுக்கும் விடையளிக்கத்தயாராக இருக்கின்றேன் என்று சொல்ல அரசன் கேட்கத்தொடங்குகின்றான்

1. சகலவித்தைகளிலும் விசேஷமான வித்தையாது?

வேதமெனப்பிரசித்திபெற்றபிரம்மவித்தையானசுருதி.

2. அதற்குக்கர்த்தாயாவர்?

சிவன், சத்தி, விஷ்ணு, சூரியன், கணேசர், என்றநாம ரூபங்களைத் தரித்த ஓங்காரத்தொனிரூபிணியான குணேசர் என்ற பரமபுருஷனாகிய துரியாதித மூர்த்தியே. சர்வ காரணேசர். வேதம் அவருடைய முகத்திலிருந்து தானாகவே தோன்றினபடியால் அபுருஷேயம் எனப்படும். அபுருஷேயம் ஒருவராலும்செய்யப்படாதது

3. அவ்வேதம் ரசனுபேதத்தால் எத்தனைவிதம்?
அது மூன்றுவகைப்படும், இருக்கு என்றால் வைதிகசெய்யுள், யசுர் என்றால் வைதிகவாக்கியம், சாமம் என்றால் வைதிகசாஹித்தியம்.

4. வேதம் நான்கு என்று சொல்லப்படுகின்றதே?
நான்கு அங்கமுள்ளதுயாகம். அதற்காக பிரமா வேதத்தை நான்காகச்செய்தார். யாகத்தில் முதலாவது ஓமகர்மா, ஓமகர்மாவைச் சொல்லும் வேதபாகங்களைச்சேர்த்து பத்தியபாகம் விசேஷமாய் உள்ளதால், அதற்கு இருக்குவேதம் என்று பெயரிட்டார்.

ஆத்துவாயம் என்பது இரண்டாவதுகர்மம். இக்கர்மாவை விசேஷமாய் பத்தியபாகங்கூறுவதால் மூன்றுவித முள்ளபாகங்களிருந்தாலும், இதற்குயசுர்வேதமென்று பெயரிடப்பட்டது மூன்றுவது உத்காதிருகர்மா இதுவும் மூன்று விதமாக இருந்தாலும், இதில் கானரஸவிசேஷமாக இருப்பதால் இதற்குசாமவேதமென்று பெயரிடப்பட்டது.

நான்காவது பிரம்மகர்மா, மூன்றுவித ரசனுபாகங்கள் போகமற்றவைகளைச்சேர்த்து அதர்வணவேதமென்று பெயரிட்டார் இவ்விதம் மூன்றுவிதரசனையுடன் கூடியவேதம் யாககர்மாவின் பொருட்டு பிரமாவால் நான்காகச்செய்யப்பட்டது. உலகத்திலும் ரசனுவிசேஷம் மூன்றுவிதமேதவிர நான்குவிதம் இல்லை.

5. வேதங்களில் பிராமணமுதலிய வேதங்கள் பலவாக இருக்கின்றன. எல்லாப்பாகங்களும் கூறியபிரமத்தினிடம் உண்டாயினவா?

கர்மகாண்டத்தில் மந்திரங்களேபிரமத்தினிடம் உண்டாயின மந்திரார்த்தத்தின்பொருட்டு பிராமணங்கள் அநேக பேதமாகக்கூறப்பட்டன. அநேகபங்கியுடன் கூடியதால் ஆரண்யக முதலியபலபேதங்களையுடைய பிராமணங்களும் வேதமென்று கூறப்படுகின்றன. ஆகையால் பிரமமுகோதயமான மந்திரம் பிரமாவிடம் உண்டான பிராமணமும்வேதமென்றேகூறப்படுகின்றன

6. வேதங்களில் சாகைபேதமென்பதென்ன?
சிருஷ்டியாதியில் பரமேஸ்வரனால் மந்திரரூபமான வேதம் உபதேசிக்கப்பட்டது. பிரமாணங்களைச் செய்து அதனுடன் சேர்த்து

நான்காகப்பிரித்தார் பிரம்மாவினுல் வெளியிடப்பெற்ற வேதபாகமே பிரஜாபத்யசுருதி என்று கூறப்படும் பிரஜாபத்தியசுருதியே சுவர்கத்திலுள்ளது. தபோலோகவாசிகளானமகாரிஷிகள் பூமியில் ஆவிர்ப்பவித்து சமாதியால் வேதமந்திரங்களைக் கண்டறிந்தார்கள் அவர்களே மந்திரதிருஷ்டாக்களானரிஷிகள், ஒருரிஷி அநேக மந்திரங்களுக்கு திருஷ்டாக்களாக இருக்கலாம் ஒருமந்திரம் அநேக ரிஷிகளால் கண்டறியப்பட்டதாயும் இருக்கும். மந்திர திருஷ்டாக்களல்லாத மற்றவர்கள் முனிகளென்றேகூறப்படுவார் மந்திரபிசாம்ண திருஷ்டாக்கள் மேருமுதலிய பலவிடங்களில் வசித்து வந்தபடியால் காலக்கிரமமாய் அவைகளில் பாடபேதங்களுண்டாயின பாடபேதாசிரயமாகசாகாபேதங்களும் எற்பட்டன ஆனுல் பிரஜாபத்திய சுருதியே வேதமூலமானது என்பதில் சந்தேகமில்லை.

7. உபநிஷத்துக்களென்ருல் என்ன?

பாவித்தை என்றும், அபாவித்தை என்றும் இரண்டுவிதம், பாவித்தை பிரமசொரூபத்தைப்போதிப்பது அபாவித்தை, நான்கு வேதம், ஆறுவேதாங்கம் நான்குஉபவேதம்நான்கு உபாங்கம் ஆக பதினெட்டுவித்தைகளும் ஆம் சப்தார்த்த இலக்ஷணையாலும்,உபநிஷத்தும்வேதமென்றுகூறப்பட்டாலும் பின்னமான வித்தையே உபநிஷத்துக்களுக்குமந்திரதிருஷ்டாக்கள் மகரிஷிகளே.

8. வேதசாகையிலுண்டான வென்று உபநிஷத்துக்கள் கூறப்படுகின்றன. அப்படியிருக்க எவ்வாறு பின்னவித்தையாகும்

ஞானகாண்டமயமான வேதங்கள்பாவித்தைகள் அவை வேதங்களே, கர்மப்பிரதிபாதிதமான உபநிஷத்துக்கள் வேதங்களைக்காட்டிலும் பின்னமாய்க்கூறப்படுகின்றன முனிவர்கள் தருமசாஸ்திரம் செய்வதற்குமுன் தபோமகிமையால் வேதார்த்தங்களையறிந்து உலகோபகாரமாய் உபநிஷத்துக்களைச்செய்தார்கள் உபநிஷத்துக்களுடையவக்த்தாக்கள் முனிவர்களே, உலகப்பிரசித்தமான உபநிஷத்துக்கள் ஆயிரத்து நூற்று எண்பது பின்ன பின்னமாண உபநிஷத்துக்களுடைய திருஷ்டாக்கள். வெவ்வேறு முனிவர்கள் வேதங்களிற்காண்ட திருஷ்டாக்களைப்போல உபநிஷத்துக்களிலும் கூறப்படும், உபநிஷத்துக்களில் காண்டவக்தாக்கள

அருணன், தாமன், ஸ்கந்தர், காயத்திரி, முத்கலர், வரேணியன் கணகர், வியாசராகியமகான்கள், சகலோபநிஷத்துக்களுடைய திருஷ்டாவும் கணகரே. வியாசர் முன்னூறு உபநிஷத்துக்களுடையதிருஷ்டாகள்க்யானோபநிஷத்தில்கணகரால் ஆயிரத்துநூற்றெண்பது உபநிஷத்துக்களுடையபெயரும், யோகோபநிஷத்தில் அவைகளுள் முன்னூற்று நாற்பது உபநிஷத்துக்கள் வியாசராலும், பரசோபநிஷத்தில் கணேசரால் விரேணியனுக்கு முன்னூற்றுநாற்பதுக்குள் நூற்றிருபது உபநிஷத்துக்களின் பெயரும் க்யானசாரோபநிஷத்தில் நூற்றிருபத்தெட்டுக்குள் முற்கலத்தில் நூற்றெட்டும், முத்திகோபநிஷத்தில் முன்னூற்றுநாற்பதுக்குள் நூற்றெட்டு இராமனால் மாருதிக்கும், ஸ்கந்தோபநிஷத்தில் நூற்றெட்டு வேறுவிதமாய் ஸ்கந்தரால் ஜனகாதியர்க்கும், ஆரணத்தில் நூற்றெட்டு சூரியனாலும் காயத்திரியில் சத்தியால் வசிஷ்டாதியர்க்கும் கூறப்பட்டிருக்கின்றன. பரசோபநிஷத்தில் கூறப்பட்டவைகளைகாணமதஸ்தர்களும் முக்திகோபநிஷத்தில் கூறப்பட்டவைகளை வைஷ்ணவர்களும், ஆரணத்திற் கூறியவற்றைசௌரர்களும், ஸ்காந்ததிற்கூறியவைகளைசைவர்களும் காயத்திரியிற் கூறியவைகளை சாக்த்தர்களும், யோகத்திற்கூறியவைகளை அத்துவிதிகளும் விசேஷமாய்மதிக்கின்றார்கள். ஐந்துவிதசாகோபநிஷத்துக்களிலும் கூறப்பட்ட மாண்டோக்ய முதலியவற்றைஞானகாண்டத்தில் அங்கிகரிக்கின்றார்கள், கணேசஞானிகள் கணேசபஞ்சகம் பிராம்ணஸ்பத்தியபஞ்சகம், ஈசாதிதசகம், என்ற ஒருபது உபநிஷத்துக்களையும், சைவாதிகளான மற்ற மதஸ்தர்கள் தங்கள் தேவபஞ்சோபநிஷத்துக்களுடன் ஈசாதி தசோபநிஷத்துக்களையும், மதிக்கின்றார்கள் அத்துவைதிகள் ஈசாதி பத்துக்களையும் பஞ்சதேவர்களின் அதர்வசிகைஉபநிஷத்துக்களையும் க்யானகாண்டத்தில் அங்கிகரிக்கின்றார்கள் பரவித்தைகளில் க்யானகாண்ட உபநிஷத்துக்கள் வேதாந்த அர்த்தமாயும் மற்றவை பின்னமாயும் கூறப்படுகின்றண. அந்நியோபநிஷத்துக்கள் வேதங்களில் பிராம்ணம்போல் இவ்வுபநிஷத்தின் அர்த்தங்களை விளக்கிக்கூறுகின்றன. க்யானகாண்டோபநிஷத்துக்கள் பதினெட்டுவித்தைகளைக்காட்டிலும் சிரேஷ்டமானவைகள், எந்தஉபநிஷத்துக்களுக்குப்புராணோஉபப்பிரமணம் இருக்கின்றதோ அவைகளை

முக்கியமும் சத்தியமுமாம்.

9. பதினெட்டுவித்தைகளைக்காட்டிலும் உபநிஷத்துக்கள் பின்னமா? வித்தியாவரிசையில் சேர்த்துக்கூறப்படாததால் எப்படிப்பிரமாணமமாகும்?

பதினெட்டு வித்தைகளினும் உபநிஷத்துக்கள் சிரேஷ்டமானவைகள். உபநிஷத்துதனியாய்க்கூறப்பட்டிருக்கிற இடத்தில் பின்னமாயும், கூறப்படாத இடத்தில் வேதாந்தஅர்தமாயும் கூறப்படுகின்றன.

10. சாங்கியயோகங்கள்பதினெட்டில் கூறப்படாததால் அவை எப்படிப்பிரமாணமாகும். யோகாகமங்கள் பதினெட்டு வித்தைகள் வைதீகபிரஸ்தானங்களைச் சேர்ந்தவைகள். இருக்கு முதலிய நான்கு வேதமும், சிக்ஷ,வியாகர்ணம், சந்தஸ், நிருத்தம், சோதிடம், கற்பம் ஆகிய ஆறு அங்கங்களும், மீமாஞ்சை நியாய, வைசேடியங்கள் புராண இதிகாசங்களும் சாஸ்திரங்களாகிய உபாங்கங்கள். ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்தசாஸ்திரங்கள் இந்நான்கும் உபவேதங்கள் வேதம் போல் யோகசாஸ்திரம் பின்னமானது. கற்பாதியில்விஷ்ணுவுக்கு பரமனுலும், கபிலரூபியான விஷ்ணுவால் சாங்கியசாஸ்திரமும், பதஞ்சலியான விஷ்ணுவால், யோகசாஸ்திரமும் செய்யப்பட்டன ஆகமம் பரமனுல் உருத்திரசிவங்களுக்கு உபதேசிக்கப்பட்டன மும்மூர்த்திகளால் தனித்தனி ஆகமங்களும் செய்யப்பட்டன.

11. சிரௌதசுமார்த்தகர்மசித்தியின் பொருட்டு பிராம்ணத்தை ஆசிரயித்து முனிவர்களால் செய்யப்பட்ட உபாசனு கற்பசாஸ்திரம் வேதாதாரமில்லாததால் எப்படிப்பிரமாணமாகும் கர்மகாண்டத்திற்கு எப்படி பிராம்ணம் ஆதாரமோ அதுபோல உபாசனுகாண்டத்துக்கு உபநிஷத்துக்கள் ஆதாரம் உபநிஷத்தை ஆசிரயித்து முனிவர்களால் உபாசனுகற்பசாஸ்திரம் செய்யப்பட்டது, ஆகையால் உபாசனுகற்பசாஸ்திரமும் பிரமாணமானதே இவைகளும் வேதாங்கமானகற்பசாஸ்திரத்தைச்சேர்ந்தவைகளே

12. கணேசதரிசனமுதலியவை மீமாம்சையைச்சேர்ந்தவைகளா?

பிரமசொருபத்தை நிர்ணயிக்கும் வேதாந்த தெரிசனத்திற்கு

உபநிஷத்துக்கள் எப்படி மூலமோ அப்படியே கணேசாதிதெரி சனங்களுக்கும் உபநிஷத்து மூலம், உத்திரமீமாம்சையைச்சேர்ந் தவைகள் இவைகள்.

13. பதினெட்டு வித்தைகளிலும் புராணமேகூறப்பட் டது இதிகாசம் கூறப்படாததால் அதுபிரமாணமல்ல இதிகாச புராணமென்பது ஒன்றே, சிருஷ்டி முதலிய ஐந்திலக்கணமுடை யது புராணம் என்றும், அவ்வித இலக்ஷணமின்றியிருப்பது இதி காசம் என்றும் உரைக்கப்படும், புராணத்தைச்சேர்க்கவே இதி காசமும் அதனுள் அடங்கும்.

14. நூறுகோடிகிரந்தமுள்ள புராணம் ஒன்ருயிருக்க அநேகபுராணங்கள் கூறப்படுவதெப்படி?
எப்படிவேதமந்திரங்களுக்கு திருஷ்டாக்கள் ரிஷிகளோ அப்ப டியே புராண திருஷ்டாக்களும் முனிவர்களே அநேகர்களால் திருஷ்டமான மந்திரசமுகத்திற்கு வேதமென்று வழங்குவது போல அநேகரால் திருஷ்டமான சமவாயத்திற்கு புராணம் என்றுபெயர் வேதங்களைப்போலவே புராணங்களிலும் பிரிவினை உண்டு மகாபுராணமென்றும் லகுபுராணமென்றும் புராணசம் ஹிதை இருவிதம். ஒவ்வொருசம்ஹிதைக்கும் பதினெட்டு சாகைகள். அந்தகணக்கில் வழுவிப்போனபாகங்களையும் சேர்த்து சூதசிஷ்யரான சாம்சபாயனர், இவ்விதமாக இரண்டு சம்ஹிதை களையும் தனித்தனிபதினெட்டு சாகைகளாக ஏற்படுத்தினர். ஆகையாற்றன் ஒவ்வொருபுராணங்களும் இவ்விரண்டு புராணங் களாகவிளங்குகின்றன.

15. அப்படியானல் இதிகாசபுராணங்களுடைய பெயர் களைச் சொல்லும்?
பாரதம், இராமாயணம், பிரம்மஞானசகோதயம் வித்தியாரகசி யம், சிவரகசியம்,என்ற இவ்ஐந்தும் இதிகாசங்கள் இராமாயணம் வால்மீகிமுதலிய அநேகராற் செய்யப்பட்டது. பாரதம் கணக ராலும், மகாபாரதம் வியாசராலும், வியாசர்சிஷ்யராகியஜயமுனி பாரதம் ஜயமுனியாலும் செய்யப்பட்டன, சைகிஷவ்யராலும்கய க்கீரிவராலும் சிவரகசியமும், ஜனகாதியோகிகளால், வித்தியா ரகசியமும் கணகசித்தால் மூன்றுலக்ஷம் கிரந்தங்களுடன் பிர, மஞானசகோதயமும் செய்யப்பட்டன கலியுக நன்மையின் பொ

ருட்டு அவராலேயே துவாபரயுகமுடிவில் அதன் சாரமான விசா
பகரகயெப்பதினெண்ணுயிசம்கிசந்தமாகச்செய்யப்பட்டது. இவ்
விதம் செய்யப்பட்டவைகளே முப்பத்து மூன்று இதிகாசங்கள்

16, பூமியில் புராண விபாகஞ்செய்ததுயார்?

அநேகரால் செய்யப்பட்ட புராணம் எப்படி ஏககர்த்தத்துவமா
யிற்று.

எல்லாவித்தைகளுக்கும் புராணம் பிரமாண மானது பாவித்தைக
வின் அர்த்ததத்வமுள்ளதும் சகுணப்பிரம பிரதிபாதகமானது
மாகிய புராணத்தை ஆதியில் பிரமா நூறுகோடி கிரந்தங்களாகச்
செய்தார், பிரமாவிடமிருந்து சிஷ்யப்பிரசிஷ்யக்கிரமமாய் அறி
ந்துகொண்ட முனிகள் தாங்கள் அறிந்தபாகத்தைச்சுருக்கி பத்
தியரூபமாகச்செய்தார்கள். துவாபரயுகாந்தத்தில் வேதவியாசர்
வேதஞானசித்தியின்பொருட்டு புராண விபாகத்தைச் செங்யக்க
ருதிஅநேகமுனிகளால் செய்யப்பட்டிருப்பதைபிரமாவின் பிரசா
தத்தால் அறிந்துகொண்டு ஆயிரத்திலொன்றுகச்சுருக்கி புராண
சம்ஹிதையை இரண்டாகச்செய்து சூதமுனிவருக்கு உபதேசி
க்க சூதர் அவைகளுக்குப்பதினெட்டு சாகைகளை ஏற்படுத்தினர்
அவைகளே உலகத்திற்பதினெட்டு புராணங்களென்றும் சூதர்சி
ஷ்யர்களில் ஒருவராகிய சாம்சபாயனர் இப்பதினென்புராணங்க
ளுக்கும்விகற்பமாய்தாம்பதினெட்டுப்புராணங்களைஏற்படுத்தினர்
சூதமுனிவர் தம்மாலேற்பட்டபுராணங்களையும் சாம்சபாயனரால்
ஏற்பட்டபுராணங்களையும் சவுனகாதியர்க்கு உபதேசித்தார் சூதா
சவுனகசம்வாத ரூபமாகபுராணரசனைகளை சூதசிஷ்யர்களும் செய்
தார்கள் பிரமம், பாத்மம், வைஷ்ணவம். சைவம்பாகவதம் பௌ
ஷ்யம்,நாரதீயம்மார்க்கண்டேயம் ஆக்கினேயம்பிரமகைவர்த்தம்
லிங்கம், வராகம், ஸ்காந்தம், மாஸ்யம, கௌரமம், காருடம், வாம
னம், பிரமாண்டம், இப்பதினெட்டு புராணங்களும் பூர்வாங்கசம்
ஹிதையின் சாரரூபங்கள், கணேசம், மகாசைவம், புவனேசம்,
ஆதித்யம், நாரதீயம் மானவம் சாம்பவம், வாசிஷ்டம், நாரசிம்மம்,
மாரீசம், காபிலம், ஜனத்குமாரம், தௌர்வாசம். வாருணம், பராச
ருவல்லியம், ஆங்கிரம், நந்தீசம், மௌத்கலம், என்ற இப்பதி
னெண்புராணங்கள் உத்திரசம்ஹிதபுராணசாரரூபங்கள். இம்
மூப்பத்தாறு புராணங்களே சூதரால் தமது சிஷ்யர்களுக்கு உப

தேசிக்கப்பட்டன. இரண்டு சம்ஹிதைகளிலும் சூதரால் விடப்ப ட்டபாகங்களை அந்தந்தசாகாசம்பந்தமாய் சேர்த்து அந்தந்தபெய ராலேயே அவ்வளவுபுராணங்களையும் சாம்சபாயனர் செய்தார், பிரமம், பாகவதம்விஷ்ணுதர்மம்,காளிகம், பெயவஷ்யார்த்தம்சௌ னகீதயம், தௌர்க்கம், ஆக்னேயம் வாசிஷ்டம், இலிங்கம் சைணு கம், பிரம்மகைவர்த்தம். ஸ்காந்தம், வைவஸ்வதம் காருடம் வாம தேவியம் பாசுபதம் பைரவம் வாயுவினுற்கூறப்பட்ட பிரமாண் டம், சிவதர்மமென்றபுராணங்கள், பிரமமுதலியவைகளுக்கு விக ற்பபுராணங்கள்! அங்குசம் ஔசனசம் மாகேசம, குமாரம், அம் பிகேயம். ஏகுமாரிசம், லகுசாம்பம், மார்த்தாண்டம் பிரகதர்மம பராசரம், பார்க்கவம், லகுநாரதியம். சௌமியம், சௌரம், லகு நாரசிம்மம், பாசுபதம், ஆத்மபாகவதம், கலகி என்ற இப்புராணங் கள் கணேசமுதலிய வைகளுக்கு விகற்பபுராணங்கள்,

பிரம முதலிய பதினெட்டு புராணங்களுக்கும் ஆதித்யம், மகாசை வம் ஞானபாகவதம,ஆங்கீசம்,சாம்சபாயனபிரமம், பிரமாண்டம் பௌஷ்யம். ஆக்கினேயம், பிரம்மகைவர்த்தம் விஷ்ணுதர்மம் சிவ தர்மம், பாகவதம், லிங்கம் காருடம், ஸ்காந்தம் ஆத்மபாகவதம் ஆகிய இம்முப்பத்தாறுபுராணங்களும் சுவமுகமாய் மகாபுராணங் களென்றேகூறப்படுகின்றன, மகத்துவ, லெகுத்துவகற்ப பேதத் தைஅநுசரித்து மாரியும் ஏற்படும்.

17, அறுபத்துநான்குகலைஞானங்கள் பதினெட்டு வித் தைகளில் சேராததால்பிரமாணமல்ல என்ன பதினெட்டு வித்தை யோகாங்கங் களிலிருந்தே கலைகள் உண்டானபடியாய் அர்த்த முதலியபலன்களைக்கொடுக்கின்ற இவைகளும் பிரமாணந்தான், இவ்விதம் தமது கேள்விகள்யாவற்றிக்கும் காமாக்ஷியம்மன எழு திக்கொடுத்த பதிலேயே மகாகாளர் சொன்னபடியால் அரசன் சந் தோஷித்து நமஸ்காரித்து, என்னை சிஷ்யனுப் அங்கிகரித்து எனக்கு குருவாகிய அநுக்கிரஹிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க அவரும் அங்கிகரித்தார். உடனே அரசன் அவரை ராஜயோக்கியமான ஆடை ஆபரணங்களால் அலங்கரிப்பித்து சகலவாத்தியங்களும் கோஷி க்க தனது பரிஜனங்களுடன் நகர்வலம் வருவித்து, அரண்மனை யில் வசிக்கச்செய்து அரண்மனை ராஜவித்வான்குமாரிலைய விதிப்

K. CHIDAMBARANATHA MUDALIAR
18 SEP 1922

படிபாணிக்கிரஹணம் செய்து கொடுக்க கிரஹஸ்ததருமத்தை அநுஷ்டித்து மதங்கேசர்பத்தியைச்செய்துவந்தார். ஒருசமயம் அரசன் திக்குவிஜயத்தில் சகல அரசரையும் ஜெயிக்கவேண்டுமென்றுபிரார்த்திக்க,மகாகாளரும் மதங்கேசரைநினைத்து பஞ்சாக்ஷர ஜெபஞ்செய்து ஜெயமுண்டாகும்படிவிபூதியை அநுக்கிரகித்தார், அரசனும் திக்குவிஜயத்தில்ஜெயம்பெற்று கப்பம்வாங்கி திரும்பி வந்து குருவைவணங்கி, அவருடையபாதத்தில் சமர்ப்பிக்க குரு அவைகளை அரசனுக்கே அளித்தார்சகல அரசர்களும்வந்து குருவாலேயே சார்வபௌமபட்டாபிஷேகஞ் செய்துவைத்தார்கள். மகாகாளருடைய ஜனகதகப்பனுகிய சுசிலர்யாத்திராகிரமமாய்காஞ்சிபுரஞ்சென்று, கேள்விப்பட்டு, தன்னுடையபுத்திரர்ஸ்திதியை அவரிடந்தெரிந்து கொள்ளலாமென்று கருதி அரன்மனையடைய மகாகாளர் அவர்களை விதிப்படி வணங்கி பூஜித்து நான், தங்களுடைய குமாரன், சுவேதாரண்யத்தில் திருடரால் அபகரிக்கப்பட்டு, பிராமணன்வளர்க்கவளர்ந்து மதங்கேசரால்காப்பாற்றப்பட்டு அவரைஆராதித்து இப்படிப்பட்டவைபவத்தை அடைந்தேன், என்று சொன்னர், இதைக்கேட்டு பெற்றோர்கள் பேரானந்தமடைந்தார்கள், இவ்விதம் வெகுகாலஞ்சென்றபிறகு மகாகாளர் பெற்றோர்களுடனும், அரசசேனைகளுடனும் மதங்காசிரமஞ்சென்று, விதிப்படி துவாரயாத்திரை செய்தார் மதங்கேசரின் நித்திய பூஜைக்காகவேண்டியதனம் பூமிமுதலியவற்றைவிட்டு, ஆதிசைவரையும் நியமித்து மாகமீ சுக்கில சஷ்டிமுதல் பௌர்ணிமைதிதி வரையிலும் பிரம்மோற்சவமும், கிருஷ்ணபக்ஷத்தில் ஐந்துதினம் யாத்திரோற்சவமும் ஏற்படுத்தி பிராமணபோசனமுஞ் செய்வித்தான், மதங்கேசர் பிரசன்னராகி மகாகாளர், அவருடைய குடும்பத்தார், அரசன், உடன்வந்தவர்கள்யாவரையும் விமானத்திலேற்றி வேதவாத்தியகோஷங்களுடன். கைலாசத்தையடையும்படி அநுக்கிரகம் செய்தார். அவர்கள் ஒருகற்பகாலம் அவ்விடம் வசித்து பிறகு சிவபெருமானிடம் இரண்டறக்கலந்தார்கள்.

## விஷ்ணுபூசித்த வரலாறு

முக்குணரூபரான பிரமா, விஷ்ணு, உருத்திராகிய யாவரும் அழிந்தமகாசங்காரகாலத்தில் பராசக்தி மாத்திரந்தரிசிக்க

சிவபெருமான் செய்தருளுகின்ற நடனத்தைத்தரிசிக்க வேண்மென்று ஜனகர் முதலியமுனிவர்கள் தவஞ்செய்துகொண்டிருப்பதை உணர்ந்த விஷ்ணுமூர்த்தியானவர் தானும் அந்நடனத்தைக்காணவிரும்பி, தன்னுடையபன்னிரண்டுபெயர்களுடனும் பன்னிரண்டு மூர்த்திகளாய், மதங்காசிரமமடைந்து பன்னிரண்டு சிவலிங்கப்பெருமானை வழிபட்டுத்தவஞ்செய்து கொண்டிருக்க இம்மூர்த்திகளுக்கு மூலகாரணராயபாவாசுதேவர்சுவேதாரண்யத்தில் வசித்து அவ்விடத்திலுள்ள சிவலிங்கப்பெருமானை, பூசைபண்ணிக்கொண்டு, நியமந்தவறாதுபஞ்சாக்ஷரசெபமுந், தவமும் புரிந்து வந்தார் இவ்விதமாக வெகுகாலஞ்சென்றபிறகு பரமேச்வரன் அவேதவனநாதருக்கு மேல் பால்நந்தியாதிகணங்களுடன் விஷ்ணுவாதிய தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் தரிசனமளித்து, பிரமானந்தத்தை அளிக்கும்ஒன்பது விதமானநடனத்தையும் காட்டியருள, விஷ்ணுமுதலிய தேவர்களும், ஜனகர்முதலியமுனிவர்களும் கண்டுதரிசித்து பிரமானந்தத்தைஅடைந்தார்கள்.

இங்ஙனம் ஒன்பதுதாம் பரசிவப்பெருமான் அன்பர்கள் பொருட்டு நிர்த்தனஞ்செய்தபடியால் திருக்கைலாசமுதலிய எல்லாக்ஷேத்திரங்களினுஞ்சுவேதாரண்யமேமிகமேலானது என்று சொல்லிப் பின்னும் இம்மதங்காசிரமத்தில் ஒன்பதுவகைப்பட்ட சத்திபேதங்களாகிய நவவிநாயகபீடமும் உள்ளன என்று அவற்றினபெருமைகளையும் விஸ்தாரமாக எடுத்து உபதேசிக்கத்தொடங்கினர்.

## நவவிநாயகபீடம்.

பீடசத்தமென்பதே கணபதிக்கும் சத்திக்குந்தான்முக்கியமானது சமுத்திரத்திலிருந்து தினந்தோறும் உதிக்கும் சூரியனுக்கு சமுத்திரக்கரையில் இரத்தினசாயாவனமென்ற க்ஷேத்திரத்தில் இந்திரனால் சௌரபீடம்ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவ்க்ஷேத்திரங்களுள்சத்திக்கு ஆதிக்கியமான க்ஷேத்திரங்களில் சத்திபீடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. நவசத்திசொரூபமானகணேசபீடங்கள் பாரசவனமாகிய இந்தக்ஷேத்திரத்தில் ஒன்பது பீடங்கள் கர்ணபதமானவைகள் சித்தபிலத்தில்நவசத்திமயமான கணேசபீடம், மயூராஎன்று வைநாயகிமாவையுஞ்சுட்பெயர். அம்

மாயாமயமான பாலமாயிரக்ஷேத்திரத்தில் முக்கியமானசுலானந்த மென்ற கணேசபீடம் முந்தினயுகத்தில் சிவன், சத்தி, சூரியன், விஷ்ணு. பிரமா என்ற ஐந்து தேவர்களாலும் ஸ்தாபிக்கப்பட்டது சர்வாபீஷ்டபிரதமான அப்பீடத்தில் சித்திபுத்தியுடன் பாலமாயிரநாதர் சாந்நித்தியம் செய்கின்றார், நாகநாதருடைய சந்நிதியில் எண்பத்து எண்ணாயிரம் முனிவர்களாலும், புஷ்டி பீடம்ஸ்தாபிக்கப்பட்டு, அதில்புஷ்டிவிநாயகர் சாந்நித்தியராகி பக்தாபீஷ்டங்களை பூர்த்திசெய்கின்றார். அந்த க்ஷேத்திரத்திலே ஷட்சத்திபீடம் ஸ்தாபனஞ்செய்யப்பட்டு அதில்கஜசாதர் முதலிய கணேசமூர்த்திகள் வசிக்கின்றார்கள்.

காவிரிப்பூம்பட்டினத்தில் தர்ம்தீர்த்தக்கரையில்பாண்டவர்களால் தர்மபீடம் ஸ்தாபிக்கப்பட்டு அதில் தர்மவிநாயகர் சாந்நித்தியம் செய்கின்றார், இம்மூர்த்தியக்ஷயரூபியான தர்மதேவதையால்ஸ்தாபிக்கப்பட்டது. காவிரிசாகரசங்கமத்தில் காவிரிசகிதரான சமுத்திரராஜனுல் நாராயணபீடமும், அதில்தீர்த்தவிநாயகரும ஸ்தாபிக்கப்பட்டார்கள். வேதபுரத்தில் பிரணவத்தால் ஓங்காரபீடமும் அதில் பரமேசராகிய சிவனுல் பரமேசவிநாயகரும் ஸ்தாபிக்கப்பட்டார்கள். கௌதமாசிரமத்தில் கற்காசரஸின் தீர்த்தத்தில், காமதாயினிபீடம், அதில் கற்காரவிநாயகரும் தேவேந்திரனுல் ஸ்தாபிக்கப்பட்டது. மதங்காசிரமத்தில் மதங்கமுனிவரால் புருஷார்த்தமயமான பீடம், ஸ்தாபிக்கப்பட்டதுஇப்பீடம் சிவன், சத்திகளாலும் ஸ்தாபிக்கப்பட்டது, விஷ்ணு, பிரமா முதலிய தேவர்களால் மோக்ஷபீடம் ஸ்தாபிக்கப்பட்டு அதில் அமிர்தவிநாயகர் விஷ்ணுவால் பிரதிஷ்டை செய்யப்பட்டு விளங்குகின்றார். நம்புவார்க்கன்பருக்குக்கிழக்கே இராமரால் தர்மபீடம் ஸ்தாபிக்கப்பட்டு நாலாயிரத்தில் ஒருவர் விளங்குகின்றார், மதங்கருக்குசமீபத்தில், ஆதிசத்தியால் காமபீடமும், அதில் மதங்கரால் மதங்கவிநாயகரும் மதங்கேசருக்கு மேற்கே சிவனுல், அர்த்தபீடம். அதில்சக்கிரவிநாயகரும், பிரமாசிரமத்தில் பிரமதேவரால் சிருஷ்டிபீடமும். பிரமவிநாயகரும் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்விநாயகர்பக்தர்களுக்கு சர்வாபீஷ்டங்களையும் அளித்தருளுகின்றார்.

## அமிர்தவிநாயகமகாத்மியம்

முன்சாக்ஷிமன்வந்தரத்தில் தேவாசுரர்கள் சேர்ந்து மும்மூர்த்திகளின் உதவியால் அமிர்தத்தின் பொருட்டு பாற்கடலைக் கடைந்தார்கள் தேவபோக்கியமானபதார்த்தங்களையும் அமிர்தகடத்தையும் பெற்றார்கள், விநாயகருக்கர்ப்பணஞ் செய்யாமல் புசிக்கஆரம்பிக்கையில் விக்கினேசுரர் கோபங்கொண்டு அமிர்தகடத்தைமறைத்துவிட தேவாசுரர்கள் அதனைக்காணாது துக்கித்துவருந்தினார்கள், இந்திராதி தேவர்கள் விஷ்ணுவைசரணமடைந்து, அமிர்தகடங்காணாமற்போனதைத்தெரிவிக்க, விஷ்ணுவும் இவ்வமிர்தம்வெகு சிரமப்பட்டு விநாயகர் கிருபையாற்கிடைத்தது, நீங்கள் அவருக்கு அர்ப்பணஞ்செய்யாமற் புசிக்க ஆரம்பித்தபடியால் விக்கினஞ்செய்து விட்டார். நீங்கள் அமிர்தரூபியான விநாயகரைப்பூசியுங்கள், உங்களுக்காக நானும் தியானிக்கிறேன் என்று சொல்லி, கணநாதரின் ஷடாணமந்திரத்தை அவர்களுக்கு உபதேசித்து அவர்களுடன் தாமும் மதங்காசிரமஞ்சென்று பன்னிரண்டு வருஷம் ஷடாணமந்திரத்தை அப்பியாசித்துத்தவஞ்செய்து வந்தார், அமிர்தமயமானசரீரமுடைய அமிர்தவிநாயகர் கஜமுகம், முக்கண் சந்திரகலையுடையவராய், வெள்ளைவஸ்திரமும், பத்மம், அங்குசம், அமிர்தகடந் தரித்தவராய் அவர்களுக்கு முன் ஆவிர்ப்பவித்து மூஷிகவாகனர், விஷ்ணுவைப்பார்த்துவேண்டியவரங்களைக்கேளும் என, விஷ்ணுவும்இந்தஸ்தலத்தில் அமிர்தவிநாயகர்என்றபெயருடன் எப்பொழுதும் பக்தானுக்கிரகம் செய்யவேண்டும் எனவும் அமிர்தகடத்தை அளிக்கவேண்டும் எனவுங்கேட்க, அவ்விதமே வரமளித்து சித்திபுத்திவிநாயகர் மறைந்தார், அமிர்தகடம்பெற்றவிஷ்ணு அமிர்தகணபதியைப்பிரதிஷ்டை செய்து பூசித்து அவர்சந்நிதியிலேயே தேவர்களுக்கு அமிர்தம்பரிமாற, தேவர்கள் அமிர்தபானஞ்செய்தார்கள். அதனால் தேவர்கள் ஜராமரணமற்று, நித்தியயௌவனராய், யுத்தத்தில் அசுரரைவென்று அமிர்தவிநாயகரைப்பூசித்து, அமிர்தம்பரிமாறிய விஷ்ணுவைஇருஷிகேசபீடத்தில் அமைத்துப்பூசித்துத்தமதிடஞ்சென்றார்கள். இவ்விதமாக இந்தஸ்தலத்தில் அமிர்தவிநாயகர் விஷ்ணுவால் பிரதிஷ்டைசெய்யப்பட்டு, சகலதேவர்களாலும் பூசிக்கப்பட்டு, பக்தானுக்கிரகம் செய்து கொண்டுஇப்பொழுதும்எழுந்தருளியிருக்கின்றார்.

## சக்ரகணேச மகாத்மியம்

மாயையின் புத்திரனுன தாரகாசுரன் மனிதர் தேவர் முதலியோரால் மரணமின்மையும் பிரம்மாண்டராஜ்யசம்பத்தும் பிரம்மாவின் வரத்தால்பெற்று, இந்திரனைஜெயித்து, தான்தேவேந்திரபதவியையடைந்தான். இந்திரன் முதலிய தேவர்களால் பிரார்த்திக்கப்பட்டவிஷ்ணுதன்மித்திரனுகிய நாரனுடன் சென்று தாரகனுடன்யுத்தஞ்செய்து அவனைக்கொல்லுதற்கு சக்ராயுதத்தைப்பிரயோகிக்க அவன் அச்சக்கரத்தை மார்பில் தாங்கிக்கொண்டான். அதுகோடிசூரியப்பிரகாசமாய் மார்பிற்கு அலங்காரமாயிற்று. சக்கரமிழந்த பதரிநாராயிணர் மதங்காசிரம்மடைந்து இருபத்தெட்டு எழுத்துக்களையுடையமந்திரத்தைசெபித்து விநாயகரை உபாசித்து பன்னிரண்டு வருஷந்தவஞ்செய்துவந்தார், பிறகு விநாயகர் அவர்க்குமுன் செம்பரத்தம் பூவர்ணமும், நீண்ட துதிக்கையும் முக்கண், சந்திரகலை, பெருவயிறு, பத்து திருக்கரங்களும், மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சூலம், சக்கரம், பாசம், முத்பலம், நெற்கதிர் தமாகம் கொம்பு இரத்தினம் கலம் இவைகளைத் தரித்து சித்தலெக்ஷமி என்ற சத்தியுடன் கூடித்தரிசனம் அளிக்க விஷ்ணுநமஸ்கரித்து வேதத்தால் துதித்து விநாயகரே நீர் கற்பம் வரையில் வீற்றிருந்துபக்தாநுக்கிரகம் செய்யவேண்டும் என்னுடைய சக்ரம் தாரகனல் அபகரிக்கப்பட்டபடியால் உம்முடைய சக்ரத்தை அளிக்கவேண்டும், உம்முடையதிருவடியில் மிகுந்த பத்தியை அளிக்கவேண்டும், எனப்பிரார்த்திக்க விநாயகர் அவ்விதமேஅருளி சக்ரத்தைக்கொடுத்து இனிநூறுயுகஞ்சென்று தாரகன் குமாரக்கடவுளால் மரணமடைவான் அப்பொழுது உன் சக்ரம் உன்னிடம் வந்துசேரும் பின்நமதுசக்ரம் நம்மிடம்வந்து சேரும் என்று வரமளித்து மறைந்தார். பிறகு நாராயணர் கணபதிமூர்த்தியைப்பிரதிஷ்டை செய்து சக்ரகணபதியென்று பெயரிட்டு பூசித்து, தமக்கு அநுக்கிரகம் செய்தசிராவணகிருஷ்ண பக்ஷசதுர்த்தியன்று விசேஷ உற்சவஞ்செய்துதமது இருப்பிடஞ்சென்ருர்,

## நாலாயிரத்திலொருவர்மகாத்மியம்

ஜம்புவார்க்கன்பருக்குச் சேழ்புரத்தில் இராமன் சீதையுடன் விஸ்தாரமாய் அஸ்வமேதயாகத்தை ஆரம்பித்து துவக்கத்தில் விக்

கினேசுரபூசையை மறந்தபடியால் முனிவர்கள்பிரயோகமார்க்கத்தைமறந்துவிழிக்க காரதரால் காரணமறிந்து விதிப்படி விநாயகரைப்பூசிக்க, அவர் அவர்களிலொருவராய், நாலாயிரத்திலொருவரென்றபெயருடன் வசிஷ்டருக்கு பிரயோகமார்க்கங்களை உபதேசித்தார். அவரையேகணபதியென்று வசிஷ்டர் முதலியோர் அறிந்து கொண்டார்கள் இராமன் அவரைப்பூசித்து தன்குற்றத்தை மன்னித்து இவ்விடத்திலே எழுந்தருளி பக்தபாலனஞ்செய்ய வேண்டுமென்றும், எனக்கு உமதுபக்தியை அளிக்கவேண்டுமென்றும் பிரார்த்திக்க அவ்விதமேவரமளித்து மறைந்தார், இராமர் அவ்விடத்தில் மூர்த்திபிரதிஷ்டை செய்து விநாயகரைப்பூசித்து அவர்சந்நிதியில் பத்து அஸ்வமேதயாகங்களைச்செய்து, அவ்விடத்தில் தசாஸ்வமேத தீர்த்தமென்றபுஷ்காணி ஏற்படுத்தினர், இராமர் தன்யாகத்திற்குத்திரவியம் வேண்டுமென்று பிரார்த்திக்க விநாயகர் தமது துவாரத்தில் சங்கநிதி பதுமநிதிகளை வசிக்கும்படிகட்டளையிட்டு வேண்டியதிரவியங்களை அளித்துவந்தார், இராமர்இவ்விதம் பத்து அஸ்வமேதயாகஞ்செய்து முனிவர், மனிதர்யாவருக்கும் திரவியங்கொடுத்துசந்தோஷிப்பித்து தமதுநாடு சென்னர். நாலாயிரத்திலொருவரென்ற விநாயகர், தெற்குமுகமாய் இப்பொழுதும் வீற்றிருக்கின்றார், சந்நிதியில் தசாஸ்வமேத தீர்த்தம் இருக்கின்றது. இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வோர் அஸ்வமேதயாகஞ்செய்தபலனை அடைவார்கள், இதன்மகிமை பலகிரந்தங்களில் விஸ்தாரமாய்க்கூறப்படுகின்றது.

மதங்காசிரமத்தில் கணேசருக்கு அநேகமூர்த்தங்களிருந்தாலும் மதங்கேசருக்குசமீபமாயுள்ளநான்குமூர்த்தங்களே விசேஷமாகஇக்கிரந்தத்தில் கூறப்பட்டுள்ளது. இக்கணேசமான்மியத்தைப்படிப்பவரும் கேட்பவரும் புருஷார்த்தங்களை அடைவார்கள்

## நந்திதேவர்பூசித்த வரலாறு.

மார்த்தாண்டபிரஜாபதியானவர் பிரம்மதேவருடையமானஸபுத்திரியாகியசுரபியை மணந்துதருமசொரூபமான ஒருபுத்திரனைப்பெற்றூர் அப்புத்திரர்நாமம் ரிஷபதேவர் என்பதாம் இப்புத்திராகியரிஷபதேவர் இம்மதங்காசிரமத்தையடைந்து பரமேஸ்வானைக்குறித்துத்தவஞ்செய்து எல்லாக்ஷேத்திரங்களிலும் எங்

காலத்தும் அச்சிவசந்நிதானத்தில்இருக்கும்படியாகவரம்பெற்றார் இதனை உணர்ந்தநாராயணரும் தாமும் ரிஷபமாகிய ஈஸ்வரனைத் தாங்கக்கருதிமதங்கேசர்சந்நிதியிற்பல்லாண்டு தவம்புரிந்துகொண்டிருக்கப்பரமேஸ்வரன் வெளிப்பட்டு நீயும் ரிஷபமாகி எனக்கு வாகனமாயிரு உன்மேல் அரோகணித்து துஷ்டசம்ஹாரம் செய்கிறேன். நீ எனக்குப்பீடரூபியாயும், பாணமாயும், போகசத்தியாயும், இருப்பதோடுஎனது சந்நிதியிலும் எனது சிவகெங்கை மத்தியிலும்,தருமரிஷபருக்குப்பின்புறம்வசிப்பாயாக என்றுவரமளிக்க, அப்படியே இப்பொழுதும் இருந்துவருகிறார்.

## மருத்துவன் வரலாறு.

ஜலந்தரனென்ற பலவானான அசுரன் பிரமதேவருடைய வரத்தால், விஷ்ணுமுதலியதேவர்களை ஜெயித்து, அவர்கள் பதவியைவிட்டு விலக்கி, அந்தந்தபதவியில் அசுரர்களைஸ்தாபித்து வந்தான். தேவர்கள்கைலாசஞ்சென்று நடந்தவாலாற்றினைத்தெரிவித்து சிவபெருமானைவணங்கி அசுரர்களை சம்ஹாரம் செய்யவேண்டுமென்று வேண்ட. பரமபதியானவர் தேவர்களைக்கைலாசத்தில் வசிக்கச்செய்து அவனைசம்கரிக்கஅங்கீகரித்தார், அதன பிறகு தேவர்கள் கைலாசத்தில்வசிப்பதைஜலந்திரன் அறிந்து அவர்களை வதஞ்செய்யும்படிசேனைகளுடன்கைலாசஞ்சென்றான். அதையறிந்தபரமன் பிராமண உருவத்துடன் அவன்முன்தோன்றி, எங்கே போகிறாய் என்றுகேட்க, சிவனுடன்யுத்தஞ்செய்யக் கைலாசமலைக்குப்போகிறேன் என்றான், சிவனைஜெயிக்கமுடியாது என்று சொல்லி, தன்கால்கட்டைவிரலால் சிவரூபமாய் ஒருசக்கரங்கீறி, நீ இந்தசக்கரத்தைத்தூக்கினால் சிவனை ஜெயிப்பாய். என்று சொல்ல, அவன் அதைப்பெயர்த்து கழுத்தினளவாகத்தூக்க, அப்படியே அவன்கழுத்தை அறுத்துவிட்டது தேவர்களும் தங்கள் பதவியைஅடைந்தார்சலந்தரனுடையமரணத்தால் துக்கமடைந்தஅசுரர்கள்தங்கள் குலகுருவாகியசுக்கிரபகவானை சரணமடைந்து அவர் அநுக்கிரஹித்தபடி சலந்தரனுடைய சவத்தைக்கடைய, அதில் தோன்றிய மருத்துவன் சுக்கிரனிடம் உபதேசம் பெற்று, ஆயிரம் வருஷம் தவஞ்செய்து பரமனைதரிசித்து, சகலதேவர்களாலும், மனிதர்களாலும் மரணமின்மையும், பிரமாண்டராஜ்ய

சம்பத்தும் வேண்ட, அப்படியேவரமளித்து மறைந்தருளினார். அப்பால் மருத்துவன் சுக்கிரபகவானிடம் சுபதினம் பார்த்து திக்குவிஜயம் செய்யப்புறப்பட்டு, தன்சேனைகளுடன், பூவுலமுழுமையும் வென்று. சொர்க்கலோகஞ்சென்று, அதனையும் ஜெயித்தான். மருத்துவனிடந்தோற்ற தேவர்கள் விஷ்ணுவைச்சரணமடைய சுவர்க்கலோகஞ்சூனியமாயிருப்பதையறிந்து, அசுரர்களை தேவபதவியில் ஸ்தாபித்துமருத்துவன் இந்திரசிம்மாசனபதவியிலிருந்து தேவேந்திரபோகத்தையடைந்தான் தேவர்கள் வேண்டியபடி விஷ்ணுவானவர் மருத்துவனிடம் மூன்றுநாள் யுத்தஞ்செய்து. தன்னால் முடியாமல் கைலாசபதியிடம் முறையிட்டு நடந்ததைத் தெரிவிக்க, ஈஸ்வரனும், விஷ்ணுவே! மருத்துவனுடையதபோபலனான புண்யபலன் இது, இப்பலனை அநுபவித்தபின்மரணமடைவான், சிலகாலம் எதிர்பார்த்திருக்கவேண்டும். பரவாசுதேவரான நீரும் உன்அம்சபூதராகிய துவாதசநாமத்துடனும் தேவரும், முனிவரும், சுவேதாரண்யத்தில் கடுமையானதவஞ்செய்யுங்கள். உங்களுடையதபோவலிமையால் க்ஷீணபுண்ணியனான தானவனைக்கொன்று உங்கள் பதவியைப்பெற்று சுகமடைவீர்களென்று அருளினார்; அதனைகேட்டு விஷ்ணுபிரமாதிதேவரும், முனிவரும் சுவேதாரண்யத்தில் கடுமையாகத்தவம் செய்துவந்தார்கள், நாரதமுனிவர் மருத்துவனிடஞ்சென்று, உன்நாசத்தின்பொருட்டு, விஷ்ணுவாதி தேவரும் முனிவரும் சுவேதாரண்யத்தில் கடுமையாகத்தவஞ்செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களை நாசஞ்செய்து க்ஷேமமடைக என்று மறைந்தார், அதைக்கேட்டமருத்துவன் கோபங்கொண்டு, சதுரங்கசேனைகளுடன் தண்டகவனஞ்சென்று, மத்தியார்ச்சுனத்திற்கு சமீபத்தில், பாளையமிறங்கி, சுவேதாரண்யத்தில் வசிக்குந்தேவமுனிவரை வதஞ்செய்ய உத்திரவளித்தான், மருத்துவன்வரவைத்தெரிந்துகொண்ட தேவரும் முனிவரும் சுவேதநாதரைத்துதித்து சுவேதவனரக்ஷணத்தின் பொருட்டு, நந்தி, பிருங்கி, சாஸ்தா, மகாகாளர், வீரபத்திரர், விருஷபர், ஸ்கந்தர், பைரவர், என்ற எட்டுபெயர்களையும், எட்டுத் திக்கிலும் ஸ்தாபிக்கஅவர்கள் மதங்கேசர்சந்நிதியிலிருக்கும் விஷ்ணுவான விருஷபனை, ஆலிங்கனஞ்செய்துமித்திரனே நீ இவ்விடம் இருந்து, இங்குள்ளவரைப்பாதுகாத்துக்கொள் என்று சொ

ல்லிவிட்டு சுவேதநாதரைவணங்கி மேற்கெல்லையையடைந்தார்கள். தேவர்கள் மருத்துவனிடமுள்ள அச்சத்தால் மதங்கேசருக்குக்கீழ்ப்புறமுள்ள மூலஸ்தானமான காளஞ்சரத்தில் வசித்துவந்தார்கள், விஷ்ணுவான ரிஷபேசர் அவர்களை இரக்ஷிப்பதற்காக, கிழக்கு முகமாய் கர்ஜித்துக்கொண்டு நின்றார். மகாபலாக்கிரமரானரிஷபேசர் மாயூரஞ்சென்று, அசுரசைனியங்களை நாசஞ் செய்து, மருத்துவனைக் காலால் உதைத்தும், வாலால் அடித்துக் கொம்பால் முட்டியும் சமுத்திரத்தில் வீசி எறிந்துவிட்டார். அவன் மூர்ச்சையடைய அவனைமூர்ச்சை தெளியச்செய்தவுடன் அசுரர்களைப்பார்த்து, நான் எத்தனை தேவரிடம் யுத்தஞ்செய்தும் தோல்வியடையாதநான் இன்று ஒரு காளைமாட்டிற்குத் தோற்று மூர்ச்சையடைந்த தானால் இனிநான் பிராணஹானி செய்துகொள்வதே உத்தமமென, அதைக்கேட்ட கஜாசுரன். இந்தக்காளை மாடு சிவனுடைய வரப்பிரசாதத்தால் உன்னை ஜெயித்துவிட்டது, நீயும் அவரைக்குறித்து பூசைசெய்தால்அதைஜெயிக்கலாம்என்று சொல்ல. அப்படியே மருத்துவன் பஞ்சாக்ஷரத்தை ஜெபஞ்செய்து கடுமையாகத் தவஞ்செய்ய ஈஸ்வரன் பிரசன்னமாகி உன் தவத்திற்கு மகிழ்ந்தோம். வேண்டியவரங்களைக் கேள். என, என்னைக் கடலில் தள்ளிய ரிஷபதேவரை நான்கொல்லும்படி அருள்செய்ய வேண்டுமென கடவுள். அதுதர்மரிஷபமாகையால் உன்னால் கொல்லமுடியாது. இந்தசூலத்தால் ஜெயிப்பாய் என்று ஒரு சூலத்தைக் கொடுத்து மறைந்தருளினார். மருத்துவன் கோபங்கொண்டு இறந்தசேனைகள் போக எஞ்சியசேனைகளுடன் ரிஷபதேவரிடம் யுத்தஞ்செய்ய அவ் அசுரசைனியங்கள் அலைந்தும் மடிந்தன. அதனால் மருத்துவன் மிகுந்தகோபங்கொண்டு பரமனிடம் தான்பெற்ற சூலப்படையை அபிமந்திரித்துவிட அதுரிஷபதேவரைக் குத்திப்பிளந்தது. அதனால் ரிஷபம் சுவேதநாதர் சந்நிதியில் விழுந்துவிட்டது. மறுபடியும் மருத்துவன் சுவேதவனத்திலுள்ள தேவமுனிவர்களைக்கட்டிவரும்படி கிங்கரர்கள் அனுப்ப மதங்காசிரமத்திலுள்ள விஷ்ணு அம்சமான ரிஷபம் அநேகரை நாசஞ் செய்தது, சில பலவான்களாகிய அசுரர்கள் அகஸ்தியமுனிவரைப்பிடிக்கச்செல்ல அவருடைய தேசசால் தாங்களே ஒருவரைஒருவர் கட்டிக்கொண்டு மருத்துவனிடஞ்செல்ல அவன்

கோபங்கொண்டு சிவசூலத்தைஎடுத்துத்தேவர்களைத்துரத்த அவர்கள் சுவேதநாதரிடம் அடைக்கலம்புகுந்தார், உடனே பரமனுடைய கோபாக்கினியால் அகோராஸ்திரதேவர் உண்டானார் அவரைப்பார்த்துசிவபெருமான் நீசென்றுமருத்துவசம்ஹாரம் செய்க என உத்தரவளிக்க, அப்படியே அகோரமூர்த்தி மருத்துவனிடஞ் சென்றுயுத்தஞ்செய்யும்போது மருத்துவன் அநேக அஸ்திரங்களைப்பிரயோகிக்க, அவைகள் அகோரமூர்த்தியைச்சரணமடைந்து நின்றுவிட்டன, பின்விக்கினாஸ்திரம் விட அது விக்கினேஸ்வரர் தவிர, மற்றயை தேவமுனிவர்களைத்தகிக்க ஆரம்பித்து, அப்பொழுது விநாயகரைநமஸ்கரித்து, நீர்சேஷ்டரானபடியால் விக்கினாஸ்திரத்தை நிவாரணஞ்செய்ய உபாயஞ்சொல்லவேண்டுமென்று கேட்க, விநாயகர் தேவமுனிவர்கள் தகிக்கப்பட்டுக்கிடப்பதையும் கந்தர்வர்கள் மூர்ச்சியடைந்து கிடப்பதையும்பார்த்து கருணையுடன் அகோரமூர்த்தியைபார்த்து, நமதுசகோதரரான அகோரரே கேளும், சித்திபுத்திபதியாகிய துரியாதீதநிலையிலிருக்கும் சுவானந்தேசராகியபிரமமேவிக்கினம், அவ்விக்கினம் என்றஇரண்டுக்குங் காரணம், அவரைஸ்மரிப்பதாலேயே விக்கினநாசமடையும்என்று சொல்லி மூலமந்திரமான ஏகாக்ஷரத்தைஉபதேசித்தார், அப்படி உபதேசித்த இடமேகுருமூர்த்திபுரம் குருவானவிநாயகரைப்பூசித்து சுவானந்தேசரை ஸ்மரித்து விக்கினாஸ்திரத்தைவிட உடனே ஸ்கந்தர்முதலிய எல்லாதேவர்களும் அகோரரைத்துதித்தார்கள், மருத்துவன் கோபங்கொண்டு மல்யுத்தஞ்செய்ய அகோரரிடந் தொடங்கினான் சுவானந்தபிரமதேசஸ்விளங்கும் அகோரரைமருத்துவன் தூரத்தில் பார்த்துஅவ்விடமே மரணமடைந்தான் தேவமுனிவர்கள் மகிழ்ச்சியொடு புஷ்பமாரிபெய்து தங்களுடைய பதவிகளைப்பெற்றார்கள் அகோரபரமேஸ்வரர் தேவமுனிவர்களுடன் சுவேதநாதர் ஆலயஞ்சென்று, தர்மரூபரிஷபவிஷ்ணுவை ஆலிங்கனஞ்செய்தார், சுவேதநாதர் எல்லோருக்கும் முந்தி, ஆவிர்ப்பவித்து தர்மரிஷபத்திலேறிக்கொண்டு அகோரரைப்பார்த்து, நமது அம்சமாய் உண்டான அகோரதேவரே! உனக்கு இஷ்டமான வரங்களைக்கேளும் என: அகோரரும் சைவர்களுக்கு இஷ்டதேவதையாயும், காணமதஸ்தர்களுக்குக்குருவாகவும் நான் இருக்கவேண்டும் சைவமந்திரங்களுக்குள் எனதுமந்திரம் சிரேஷ்டமாயும்

மகாபாதகநாச மாயும், கைலாசத்திலும் இந்தஸ்தலத்திலும், எனக்குவாசமும் அளிக்கவேண்டும் என்றார் அப்படியே இன்னும் அநேகவரங்களை அளித்து, ரிஷபரைப்பார்த்து உன் அநுமதியின் றிஎன் சேவையாருக்கும் பயன்தராது, எவ்விடத்தும் பிரதோஷ காலத்தில் உன்னைப்பூசிக்கவேண்டியது உன்பக்தர்கள் நமது பத் தர்கள் மதங்கேசமான எனது க்ஷேத்திரத்தில் மாகசுக்கிலசஷ்டி முதல் தசமிவரையில் ரிஷபோற்சவமும், அதில் சஷ்டியில் ரிஷப ர்தவமும், தசமியில் மதங்கேசர்வரதானமும், அஷ்டமியில் ரிஷப மருத்துவயுத்தமும், நவமியில்மருத்துவனுல்ரிஷபபீடனமும்,சுவே தநாதர் சரணமும், தசமியில் மருத்துவவதமும் ரிஷபோற்சவத் தில் விஷ்ணுரூபத்துடன் செய்க என்று வரங்கொடுத்து விஷ்ணு முதலியதேவர்களைப்பார்த்து நீங்கள் அகோரமந்திரத்தை ஜெபித் துக்கொண்டு உங்கள்ஸ்தானஞ்சென்று அவரவர்பதவியை அடை யுங்களென்று, அகோரமந்திரத்தை உபதேசித்து மறைந்தார்.

## சத்திமகாத்மியம்

பிரம்மசிருஷ்டிக்கு முன்பிரமபுத்திரரான மதங்கமுனிவர் பரமேசுவரனைப்பூசிக்க. அவர் அம்பிகையுடன் காட்சிகொடுத்தார் ஆதலால் அவர்களுக்கு மதங்கேசர் என்றும். மதங்கேசி என்றும் பெயர். அம்மதங்கேசி மணித்தூபமென்றதுரியநிலையில் வசிக்கின் ருளென்று வேதசாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. பிரமா ண்டத்துள் அச்சிவசத்தியே மூன்றுருவாய் விளங்குகின்ருள். போககாலத்தில் பார்வதியென்றும், கோபகாலத்தில் சத்தி யென் றும், யுத்தகாலத்தில் துர்க்கை என்றும் அச்சிவசத்திக்குப்பெயர், அச்சத்தியே குணபேதத்தால் மகாகாளி என்றும், மகாலெக்ஷுமி என்றும், மகாசரஸ்வதி என்றும், மூன்றுவிதமாய் விவரிக்கப்ப டுகின்ருள் அப்பராசத்தியே பண்டாசுரவதத்திற்காக சிதைக்கி னியிலிருந்துலலிதை என்றபெயருடன் ஆவிர்ப்பவித்தாள், காமே சுரன் என்ற பரமேஸ்வரனைப்பதியாக வரித்தாள். லலிதையின் வைபவங்களை அறிந்த மதங்கமுனிவர் அவளைத்தான் புத்திரியாக அடையமதங்கேசியின் சந்நிதியில் நிராகாரராயும்,சிதேந்திரியரா யும் இருந்துகொண்டு, பஞ்சதசி என்றமந்திரத்தில் அக்ஷரலெ க்ஷம் தியானத்துடன் ஜெபித்தார். அப்பொழுது மதங்கேசி பிம்

பத்திலிருந்து லளிதை அவருக்குமுன் ஆவிர்ப்பவிக்க, சிகிதங்களால் நமஸ்கரித்து, அதர்வசிருஷத்தால் துதிசெய்தார். அப்பொழுது அம்பிகைஉனக்கு இஷ்டமான வரங்களைக்கேள் என்று சொல்லமுனிவர். நீ எனக்குப்புத்திரியாய் அவதரித்து உன்பால கேளிகைகளால் என்னை மகிழ்வித்து கைலாசபதியை எனது ஆசிரமத்தில்விவாகஞ்செய்துகொள்ள வேண்டும் என்று பிரார்த்திக்க, அதற்கு அம்பிகை ஓ முனிவரே! சிற்கலையென்றும், அஸ்தசுவானந்தபிரமரூபிணி என்றும் கூறப்படும் நான், மூர்த்தா மூர்த்தாதிஸ்நாதநியான சம்மிதரூபிணி மகாயாகத்தால் சந்தோஷமடைந்து சுயேச்சையாய்மூர்த்தியைத்தரித்து சிதைக்கினிகுண்டத்திலிருந்து ஆவிர்ப்பவித்தேன். இப்பேர்ப்பட்டநான் உனக்குப்புத்திரியாகமாட்டேன். யோகமாயையான எனது மந்திரிணி தேவி உனக்குப்புத்திரியாக அவதரிப்பாள். அவளைமரமேஸ்வரன் விவாகம் செய்துக்கொள்வார் உன்பிள்ளைக்கும் பெண்ணாக அவதரிப்பாள் அவளைசுவேதநாதர் விவாகம்செய்துகொள்வார் என்று வரமளித்து மறைந்தாள். மதங்கமுனிவர் சியாமளையைத்தியானித்துபஞ்சதசியைச்செபஞ்செய்து வந்தார். ஆடிமீ வெள்ளிக்கிழமைபிராதகாலத்தில் மதங்கதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யச்சென்றவர். அதில் நீலோற்பலமலரில் மரகதபச்சைவர்ணமும், மைதீண்டப்பட்டிருக்கும் நீண்டகண்ணும், வீணைகிளிகள் பொருந்திய இருகைகளும் உடைய ஒருபெண்குழந்தையைகண்டு எடுத்து ஆசிரமஞ்சென்றார். அம்பிகைதனது சிசுருஷைக்காக எட்டு கோடிசத்திகணங்களை சிருஷ்டித்தாள். அக்கன்னிகைகளுக்கு மாதங்ககன்னிகைகள் என்று பெயர் மைதீண்டப்பட்ட விசாலமானகண்களோடு விளங்கினபடியால் அஞ்சனாக்ஷிஎன்றும், மதங்கபுத்திரியாகையால், மாதங்கி என்றும் கிளியைக்கையில் உடையவளாதலால் சுகஅஸ்தைஎன்றும் பெயர். அஞ்சனாக்ஷியானமாதங்கிதன்னுடையபால கேளிக்கைகளால் சாந்திசீலையானதாயாரையும், மதங்கரான பிதாவையும் சந்தோஷிப்பித்தாள். மதங்கர் தன்புதல்விக்கு மகாசியாமைஎன்றும் மாதங்கபுத்திரிக்கு லகுசியாமை என்றும் லோகவேதப்பிரசித்தமாகிவிட்டது. உச்சிஷ்டனென்ற அசுரன் வரத்தால் மூவுலகத்தையுஞ்ஜெயித்து, தேவர்களைகாராகிருகத்தில்அடைத்துவிட்டபடியால் தேவஸ்திரீகள் துக்கமடைந்து பிரமாவின் உத்தர

வின் பேரில் மதங்காசிரமஞ்சென்று மாதங்கியை நமஸ்கரித்து· துதிசெய்து தோத்திரஞ்செய்தார்கள். தேவஸ்திரீகளைப்பார்த்து உங்களுக்கு இஷ்டமானவரங்களைக்கேளுங்கள் என, அசுரனுடையவிருத்தாந்தத்தைச்சொல்லி, தேவர்களை விடுவிக்க வேண்டும்மென்று பிரார்த்தித்தார்கள், அப்பொழுது அம்பிகை கோரரூபினியாள உச்சிஷ்ட சாண்டாளியை சிருஷ்டித்து, நீ உச்சிஷ்டனென்ற அசுரனைக்கொன்றுவா என ஆக்கினைசெய்தாள். அவளும் அவ்வாறே வதைத்துத்தேவர்களைவிடுவித்து, தேவியின் சமிபமாய்ச்சென்று தூரத்தில் நின்று. அம்பிகையை நமஸ்கரித்தாள் அம்பாள் அவளைபார்த்து ஏ உச்சிஷ்டசாண்டாளி? எனக்குதூரமான விடத்தில் விளங்குங்கிரஹத்தில் வசித்துகொண்டிரு. எனது பத்தர்கள் பூசையிலும், யாகத்திலும், உனக்குப்பலிகொடுக்கட்டும் அவ்விதங்கொடாதவர்களின்பலனை நீசாப்பிட்டுவிடு என்று அவளுக்குவரம் அளித்தாள். தேவஸ்திரிகள் சியாமளையை நமஸ்கரித்து· பூசித்து விடைபெற்றுத்தங்களிடத்தை அடைந்தார்கள், மாதங்கியானவள் சுவர்ணரத்தினமயமான அரண்மனையில் மாதாபிதாக்களும், தனது கணங்களுடனும் வசித்து வந்தாள். மாதங்கியின் ஏழாவது ஆண்டில் மதங்கமுனிவர் அம்மாதங்கியுடன் சென்று மதங்கேசனைவழிபட்டு தேவரீர் சர்வதேவமுனிவர்சந்நிதியில் இப்பெண்ணைக்கிரகித்துக்கொள்ள வேண்டுமென்றுபிரார்த்திக்க, பரமனும் அதற்கிசைந்து சைத்திரசுக்கிலபக்ஷசப்தமியில் உனது புத்திரியை விவாகம் செய்துகொள்ளுகிறேன் என்று அருள் செய்ய மதங்கமுனிவர் ஆசிரமமடைந்து தன்புத்திரியைப்பார்த்து உனதுவிவாகத்தின் பொருட்டு நகரத்தைநானாவிதவைபவங்களுடன சிருஷ்டிசெய்க என்றுகூற அவள் விஸ்வகர்மாவை ஸ்மரிக்க, உடனே அவன்வந்து அம்பிகையின் உத்தரவின்படி சுவர்ணரத்தின மயமானபட்டணத்தையும், சிந்தாமணிமயமான கல்யாணமண்டபத்தையும், சிருஷ்டித்தான். அப்பட்டணமானது, மாதங்கியின்யந்திரரூபமானது. அதன்மத்தியில் உள்ள மூலஸ்தானத்தில் மாதங்கி பிதா மாதாமுதலியவர்களுடன் வசித்துவந்தாள். சப்தாவரணங்களிலும். அந்தந்தஸ்தானத்திற்குரிய அதிதேவதைகள் வசித்து வந்தார்கள். அப்பட்டினத்திற்குமாதங்கிபுரம் என்று

பெயர் இப்பட்டினத்தை நிர்மாணஞ்செய்து விஃவகர்மாதமது இருப்பிடஞ்சென்றுன். மதங்கர் தன்புத்திரியின் விவாகமகோற்சவவிளம்பரத்தைசகல தேவமுனிவர்மனிதர்களுக்கு அனுப்பினுர் சித்திரைமீ சுக்கிலபக்ஷசஷ்டிதினம் பிரமஇந்திராதிதேவர்களும் முனிவர்களும் வந்துகூடினுர் அன்று சாயுங்காலம் பரமேஸ்வரன் கைலாயத்தில் கல்யாணசுந்தரரூபியாப் நந்திதேவர்ஜனகாதி முனிவர் முதலானவர்களுடன் புறப்பட்டு மதங்காசிரமம் வந்து, மதங்கேசாலயத்தில் தங்கினுர்கள். வாத்தியகோஷங்களுடன் பரமேஸ்வரனை மாதங்கிபுரத்திற்கு அழைத்துவந்து பூசைசெய்தார்கள் தெக்ஷிணுவரத்தில் சர்வாலங்காரபூஷணியாயதனது புத்திரியை கிரமப்படிவிவாகஞ்செய்து கொடுத்தார். அப்பொழுது வேதகோஷ்டம். வாத்தியகோஷ்டங்கள் பிரம்மாண்டம் செவிடுபட ஒலிக்க அப்சரஸ்திரீகள் நிர்த்தனஞ்செய்தார்கள் அக்கினிகாரியத்தை. சிவாக்கினியால் பிரமாசெய்ய மதங்கேசர் மதங்கபுத்திரியைத் தமது இடதுதொடையில் தூக்கிவைத்துக்கொண்டுதுலங்கினுர். அப்பொழுதுநந்திகேசர் எழுந்து பிரபுவின்சந்நிதியில் நின்று, இவர்சம்ஹாரகர்த்தாவானகர்லாக்கினிருத்திரர், இவர் இரக்ஷகரான விஷ்ணு, இவர் சிருஷ்டிகர்த்தாவானபிரம்மா, இவர்கள் தங்களுடைய குணங்களிலிருந்து உண்டான அதிகாரபுருஷர்கள் மற்றதேவரிஷிகள் மனிதர்கள்யாவரையும் நந்திகேசர் பிரம்பால் தொட்டுக்காட்டபரமன் அவரவருக்குத்தக்கபடி வாக்கினுலும் சிரக்கம்பத்தாலும், புன்முறுவலாலும், மரியாதைசெய்தார். அவ்விதமேமாதங்கியும் செய்தனள். மதங்கரைபார்த்து பரமன் உமதிஷ்டங்களைக்கேளும் என்று சொல்ல. இக்கலியாண கோலத்துடன் எப்பொழுதும் இவ்விதமேதரிசனங்கொடுக்கவேண்டுமென்றும், என்னுடையபிராரத்தவமுடிவில் யோகசாந்தியால் அடையக்கூடிய பூமாபினேக்கியத்தைக்கொடுக்கவேண்டுமென்றும் என்புத்திரியாகியமாதங்கியின், உபாஸ்தி ஆதிசத்தி உபாஸ்தியைப்போல் வேதாதிகளில் பிரசித்தமாகவேண்டுமென்றும், இந்தக்ஷேத்திரத்தில் பிரதிவருஷமும். இத்தினத்தில் உமதுகல்யாணுேற்சவத்தை ஜனங்கள் நடத்திவரவேண்டுமென்றும், அவ்விதம் நடத்துகிறவர்களுக்கு புத்திமுத்தியளிக்கவேண்டுமென்று பிரார்த்திக்க பரமனுர் அவ்விதமே வரமளித்தார். இவ்விதம் ஐந்துதினம்விவாகம்

நடந்ததுயாவர்களும் மிகுந்த ஆனந்தமடைந்துவிடைபெற்று தங்களிருப்பிடஞ்சென்றுர்கள். பரமனும் மதங்கேசாலயஞ்சென்று பரிவாரத்துடன் லிங்கமத்தியில் மறைந்தார். மாதங்கியுடன் அந்த க்ஷேத்திரத்தில் வசித்து வருகின்றுர் மதங்கமுனிவரும் இக்கலியாணகோலத்துடன் இருதயத்தில் தியானித்துக்கொண்டு இப்பொழுதும் வசித்துவருகின்றுர். இக்கலியாணவைபவத்தைப்படிப்பவருங்கேட்பவரும் தங்களுக்கிஷ்டமான ஸ்திரியையடைந்து சுகித்திருப்பார்கள். இதைப்படித்தேவிஷ்னுபிரமாதிதேவர்களும் தங்கள் தங்கள் ஸ்திரியை அடைந்தார்கள்.

பாண்டுபுத்திரனை அர்ச்சுனன்பாசுபதம் பெற்று சுவர்க்கலோகஞ் சென்று தேவேந்திரனல் அஸ்திரவித்தைகளை அப்பியாசித்து வந்தான். இந்திரன் நிவாதகவசர்களை வதஞ்செய்ய அர்ச்சுனனை அனுப்பதேவகுரு அவளைப்பார்த்து நான் மாதங்கியின்கவசமந்திரத்தை உனக்கு உபதேசிக்கின்றேன். நீ இதைதண்டகவனத்தில் மதங்காசிரமஞ்சென்று மாதங்கியைப்பூசித்து சந்நிதியில் பத்துதாஞ்செபித்து யுத்தத்தின்மேற் செல்க. கவசவைபவத்தால் அவர்களை ஜெயிப்பாய் தேவ அசுரர்களாலும் உன்கவசம் பேதிக்கப்படாது உனக்கு விசயன் என்று பெயர் ஏற்படும் என்றுவாமளித்தார். அவ்விதம் சென்று செபித்து அம்பிகையிடம் வரம் பெற்று நிவர்தகவசர்களை வதைத்து, காலகேயரைக்கொன்று, அமராவதிசென்று இந்திராசனத்திற் பாதிபெற்று தமையனையடைந்து கௌரவரை அழித்துத்தருமபுத்திருக்கு இராஜியம் அளித்தான் மாதங்கிகவசமகிமையால் புரார்த்தன் மூவுலகும் விசயன் என்று பிரசித்திபெற்றுன்.

## மதங்கபுத்திரராகியமாதங்கருக்கு அம்பிகைபுத்திரியாகப் பிறந்தது.

உலகப்பிரசித்தரான மதங்கமுனிவரின் புத்திராகிய மாதங்கர் இந்தக்ஷேத்திரத்தின் மேல்புறத்தில் உள்ள சித்தபிலத்தில் வசிக்கும் ஏரண்டயோகியைக்குருவாக அடைந்து, நாகநாதத்தில் நாகலிங்க விருக்ஷவனத்தில் ஆசிரமம் ஒற்படுத்திக்கொண்டு தவஞ் செய்து வருகையில் தமது குருவாகிய ஏரண்டரை நமஸ்கரித்து, குருநாதரே! முந்தி மதங்கேசியம்மன், என்தகப்பனருக்குப்

பெண்ணுய்ப் பிறந்து, தனது பாலகேளிகைபளால் சகோதரனுன என்னையும், பெற்றோர்களையும் சந்தோஷிப்பாள். என் பிதாவுக்கு யோகசாந்தியையும் அளித்தாள் இப்பொழுது எனக்கு பிரமவித்தை சித்திக்கும் பொருட்டு நான் அவளைப் பெண்ணுக அடைய விரும்புகிறேன்; அதற்கு உபாயஞ்சொல்ல வேண்டுமென்று கேட்க.

எரண்டர் சொல்லுகின்ருர். உன்னுடைய பிதா சைவமார்க்கத்தை யடைந்தவர், அவர்க்கு இஷ்டதேவதை அம்பிகை என்னுடைய சிஷ்யனுன நீ காணபதமதஸ்தன். நீயும் சக்தியை இஷ்டதேவதையாக அடைய உனக்கு சக்தியின் ஸ்தவராஜத்தை உபதேசிக்கின்றேன். நீவிக்கினசாந்தியின்பொருட்டு கணேச மந்திரத்தை பாலமாயிரக்ஷேத்திரத்தில் ஜெபித்து விட்டு, நீமாதங்கிஆலயஞ்சென்று அஞ்சனுக்ஷியின் சந்நிதியிலிருந்து சிதேந்திரியனுய் ஸ்தவராஜத்தை நூறுதரஞ்செபஞ் செய்ய, அவள் உனக்கு பிரசன்னையாகி உன் இஷ்டத்தை பூர்த்தி செய்வாள் என்று சொல்லி, மாதங்கியின் ஸ்தவராஜத்தை உபதேசிக்க, அவ்விதமே மாதங்கர் பாலமாயிரகுணேசர் எகாக்ஷரத்தை செபித்துவிட்டு, மாதங்கி ஆலயஞ்சென்று அம்பிகையின, ஸ்தவராஜத்தை நூறுதரஞ் செபஞ்செய்ய, அஞ்சனுக்ஷிபிரசன்னையாகி தரிசனம் அளிக்க மாதங்கரும் நமஸ்கரித்து, ஸ்தவரஜத்தால் துதித்தாள் அம்பாள் கிருபையுடன் உனக்கு இஷ்டமான வரங்களைக் கேள் என, மாதங்கரும் நீ எனக்குப் புத்திரியாகப் பிறந்து பாலகேளிகைகளால் என்னை சந்தோஷிப்பித்து, எனக்குப் பிரமவித்தையை அநுக்கிரகித்து, மாதங்கபுத்திரி யென்று பிரசித்திபடைய வேண்டுமென்று பிரார்த்திக்க, அம்பிகையும் நான் பிரமவித்தையென்ற பெயருடன் உனக்குப் பெண்ணுய்ப் பிறந்து, சுவேதவனநாதரைப் பதியாக அடைந்து. இந்த ஸ்தலத்திலேயே சாநகித்தியமாக இருக்கிறேன் என்று வரமளித்து மறைந்தாள். அவரும் மகிழ்ந்து தனது ஆசிரமஞ் சென்ருர். ஒருநாள் பாலமாயிரநாதரை சேவித்து மத்தியானக் கிரியை செய்ய கணேச தீர்த்தத்தில் ஸ்தானம் செய்கையில், அதில் நீலோற்பலமலர் நடுவில் வீணை, புஸ்தகம், முத்தபலம், சுகங்களைத் தரித்து விளங்கும் சர்வாலங்கார பூஷிதையாய் சியாமள

வர்ணமாய், முக்கண், சந்திரகலையுடன் விளங்கும் பெண்குழந்தையைக் கண்டெடுத்து வந்து தன்பாரியையான சிற்கலையிடம் கொடுக்க அவளும் பிரியத்துடன் வாங்கி தன்னிடம் கொடுத்து வளர்த்து வர, முனிவர்கள் பிரமவித்தை என்று பெயரிட்டார்கள் அப்பிரமவித்தையும் சுவேதநாதரை தவத்தால் சந்தோஷிப்பிக்க, சுவேதநாதரும் கணங்களுடன் வந்து மாதங்கரால் கொடுக்கப்பெற்று, சுவேதாரண்யஞ் சென்றூர். இப்பொழுது பிரம்மவித்யா நாயகி என்ற பெருடன் வெண்காட்டிலும், அஞ்சனாக்ஷி என்ற பெயருடன் மதங்கேசத்திலும் வசித்து பக்தாநுக்கிரகம் செய்து வருகின்றூர்கள். ஸ்தவராஜத்தின் மகிமையால் மாதங்கர் மாதங்கியைப் புத்திரியாய் அடைந்து பிரம்மவித்யா சித்தியைப் பெற்றூர். இப்பேர்ப்பட்ட மாதங்கி ஸ்தவராஜத்தின் மகிமை ஸ்தல புராணத்தில் விரிவாகக் கூறப்படுகின்றது.

பன்னிரண்டு விஷ்ணு மூர்த்தங்களின் மகிமையைச் சொல்லவேண்டு மென்று சூதர் கேட்க அகஸ்தியர் சொல்லத் தொடங்குவாராயினூர். அண்ணன் கோவிலில் வசிக்கப்பட்ட கேசவர் என்ற அண்ணன் பெருமாள் பக்தாக்களுடைய காமத்தை அளிப்பவர் மதுசூதனர் வீரியத்தைக் கொடுப்பவர். மாதவர் சௌபாக்கியத்தைக் கொடுப்பவர். பார்த்தசாரதியான கிருஷ்ணன் ஜெயத்தை அளிப்பவர். திருமேனியழகர் சரீரத்திற்கு அழகை அளிப்பவர். நாராயணர் புத்தி, முத்தி, இரண்டையும் அளிப்பவர். குடமாடு கூத்தர் வசியத்தை யளிப்பவர். செம்பொன்னரெங்கர் தனத்தை யளிப்பவர். வைகுண்டநாதர் தருமத்தை அளிப்பவர். பள்ளிகொண்ட பெருமாள் கீர்த்தியைக் கொடுப்பவர். புருஷோத்தமர் புத்தி யளிப்பவர். லெக்ஷிமிநாராயணர் புத்திர பவுத்திரவமிச விருத்தியை யளிப்பவர். இந்த ஸ்தலத்தில் பகவான் ஒவ்வொரு மூர்த்தியாக ஒவ்வொரு இஷ்டத்தையும் அளிக்கின்றூர். இவர்களுடைய மகிமையைச் சுருக்கமாகச் சொல்லுகின்றேன். தருமகாமனென்றும் அர்த்தகாமனென்றும் மோக்ஷகாமனென்றும் காமம் மூன்று விதம். தருமகாமன் விஷ்ணுமூர்த்தியாய் விஷ்ணுலோகத்திலும் அர்த்தகாமன் சக்திபுத்திரனைப் சக்திலோகத்திலும் மோக்ஷகாமன் சிந்தாமணியைத் துவிபீஜத்திலும் வசிக்கின்றூர்கள். மூன்று வித

காம ரூபியாய் விளங்கும் மன்மதன் விஷ்ணுவின் குமாரன் மூக் காமத்தையும் விளைவிப்பர்.

## அண்ணன் பெருமாள் மகாத்மியம்.

மகாவிஷ்ணுவாகிய கேசவர் மகா பெலசாலியான மருத்துவனெ ன்ற ஓரரசன் தருமகாமனுப்த் தருமசித்தியடைய யாகஞ் செய்ய விசேடதனத்தையடைய தண்டகாவனத்தில் மதங்காச்சிரமத்தி லுள்ள அண்ணன் கோவில் சென்று கேசவரை அவருடைய மந் திரத்தை ஸ்ரீபீஜபுடிதமாக ஜெபித்தான். ஒரு மாதத்தில் அண்ண ன் பெருமாள் தரிசனமளித்து அரசனே நீ இமயமலை சென்று யாகஞ் செய். அம்மலை சிகரம் வரையில் நிதிகள் உனக்கு நமதா க்கினையால் தனத்தை வருஷிக்கும் அதைக் கொண்டு யாகஞ் செய் நமதாக்கினையால் ஸம்வர்த்தகரென்ற யோகி உனக்கு யாகத்தைச் செய்து வைப்பார் என்று வரமளித்தார். அவ்விதமே மருத்துவன் யாகத்தைச் செய்து தனதிகளால் பிராம்மணதிகளைச் சந்தோஷிப் பித்தான். பிறகு அவரிடமிருந்தே தியானயோக மடைந்து ஜீவன் முத்தனுகவானுன். பிரதிஷ்டா நகரத்தரசனுன புரூரச் சக்ரவர் த்தி இந்திரச்த்துருவான அசுரனை ஜெயித்து இந்திர பிரசாதத்தா ல் ஊர்வசியை ஸ்திரீயாக அடைந்தான். அவன் கொஞ்சகாலஞ் சென்ற பிறகு கந்த்ருவனுடன் அவளை வஞ்சித்தே மாத்தி சுவர் க்கஞ் சென்முன். பிறகு அவ்வரசன் துக்கித்து இந்த க்ஷேத்திரம் வந்து கேசவரைச் சந்தோஷிப்பிக்கப் பகவானுடைய ஆக்கினை யால் புரூரவன் பூமியிலும் சுவர்க்கத்திலும் வசிக்கமளவும் அவனு க்கு ஸ்திரீயாக விருக்கும்படி ஊர்வசிக்கு இந்திரன் கட்டளை விட் டான். பிறகு பூமியிலும் சுவர்க்கத்திலும் புரூரவன் ஊர்வசி சுகத் தை யடைந்தான. எந்தெந்தக் காமத்தையுத்தேசித்து அண்ணன் பெருமாளைப் பூசிக்கின்முனே அந்தந்தகாமத்தைப் பக்தனடைவா ன்.க, என்ற பிர்மாவை நாபியிலிருந்தும் ஈசனென்ற ருத்திரனை, நெற்றியிலிருந்தும் படைத்தபடியால் கேசவரென்றுரைக்கப்படு கின்முர்கள்.

## நாருயணப் பெருமாள் வைபவம்

நாரமென்ற ஜலத்தில் சயனித்திருப்பதால் நாராயணரென்று ரைக்கப்படுகின்முர். அவர் ஒன்பது விதம் இந்த க்ஷேத்திரத்தில் மதங்கருக்குக் குருவாக யோகத்தையுபதேசித்தும் தங்களுக்கு சமீசத்திலேயே நாராயணர் வசித்து வருகின்முர். தினகஸ்பத்தி

ல் பிர்ம்மாவால் சிருஷ்டிக்கப்பட்ட பிர்மபுத்திரர்களாகிய மரீசி, அத்திரி, அக்கிரஸ், ப்ருகு, புலஸ்தியர், தக்ஷகன், நாரதர், முதலியோரைச் சிருஷ்டி செய்யப் ர்மாகட்டளை இட்டார். நாரதர் மாத்திரம் பிரமவிர்த்தி மார்க்கத்திற் செல்லமாட்டேனென்று சொல்ல ப்ர்மா கோபங்கொண்டு கந்தர்வனும் சூத்திரனும் ஜெனிக்கும்படி ஜபித்தார். அவரும் நீர் அபூஜியாகக்கடவதென்று பிர்மாவை ஜபித்தார் அதன் பேரில் நாரதர் மதங்காசிரமம் வந்து நூறு வருஷம் நாராயணரைக் குறித்துத் தவஞ்செய்ய நாராயணர் பிரசன்னராகி பிர்மசாப நிவாரணம் பண்ண வேண்டுமென்று நாரதர் வேண்ட நாராயணர் பிதுர்சாபம் பொய்யாகாதென்றும் கந்தர்வ ஜாதியில் ஜனித்து ஸ்திரீகளுடனிருந்தாலும் மாயையுன்னை வாதிக்காதென்றும் சூத்திர ஜன்மாவில் வைஷ்ணவ மார்க்கபரனுயாவாயென்றும் பிறகு நாரதராக ஆய் விடுவாயென்றும் எப்பொழுதும் கானந்தால் நம்மைப்பஜனை செய்வாயென்றும் வரமளித்து மறைந்தார், நாரதரும் நாராயணர் சந்நிதியில் சாபவிமோசனம் என்ற தீர்த்தம் ஏற்படுத்தினர், நாரதர் விஷ்ணு பக்தரில் முதல்வராகவானுர் கெந்தர்வயோனியில் ஜனித்தபோதும் இந்த நாராயணமூர்த்தியை இவ்விடத்தில் பஜத்துஞானம்பெற்றுத்திவ்யபோகங்களையநுபவித்தார் சூத்திரயோனியில் ஜனித்தபோது இம்மூர்த்திசந்நிதியில் சரீரத்தைவிட்டுவிட்டார் பிறகு பிரமபுத்திரராகஜனித்து ஜீவன் முத்தராகஆனுர் நாராயணர் இம்மகிமையுடன் கூடினவர். புத்திமுத்தி இரண்டையும் அளிக்கக்கூடியவர் இம்மகிமையை நாராயணர் உடையவர்.

## கீழச்சாலைமாதவப்பெருமாள்வைபவம்.

மாயென்றலெக்ஷிமியுடன் கூடியவிஷ்ணுமாதவர் எனப்படுவர் இந்தக்ஷேத்திரத்தில் கீழைச்சாலையில் வசிக்கின்றவர் வாமனபுரத்தில் ஓர் அரசன் புத்திரனில்லாமல் பன்னிரண்டுவருஷம் விஷ்ணுவைக்குறித்துத்தவஞ்செய்யவிஷ்ணுபிரசன்னராய் வித்தியாபுத்தியினனுய் பூரணுப்சாய்வேணுமா அல்லது வித்தியாபுத்திரூபமுள்ளபதினறுவயசுள்ளவனுகவேணுமா உன்னபிப்பிராயம் எப்படியென்றுகேட்க வித்தியாபுத்தியுள்ள பதினறுவயசுள்ள

வனாகப்பிரார்த்திக்க அப்படியேவரமளித்து மறைந்தார் அரசன்
விஷ்ணுவர்மாஎன்றபெயருடன் புத்திரனையடைந்தான் அப்பை
யனும் பனிரண்டுவயதுக்குள் சகலவித்தியாபாரங்கனாகவானான்.
சகலஅரசர்களையுஞ்ஜெயித்துக்கப்பங்கட்டும்படிசெய்தான். கீழை
ச்சாலையில் வசியவிருத்தியால் சீவிக்கும் வாசுதேவனென்றக்ஷத்
ரியனுக்கு லெக்ஷிமியென்றோர்புத்திரியிருந்தாள் அப்பெண்குழந்
தைமாதவரைநாமமந்திரத்தால் ஜெபம் செய்துவந்தாள் ஐந்து
வயதுமுதல் எழுவ்பதுவரையில் ஜெபம்செய்துவருகையில் மாத
வர்பிரசன்னராய்அப்பெண் தீர்க்கசுமங்கிலியாயும்லெக்ஷம்ஆயிசும்
பகவத்பக்தியும் கொடுத்துமறைந்தார். விஷ்ணுவர்மாபதினாறுவய
தில் அந்தபுரத்தில் தாய்மடியில் சாப்பிட்டுப்படுத்தவனிறந்து
விட்டான். தாய்தகப்பன் மூர்ச்சையாய்விட்டார்கள் மூர்ச்சைதெ
ளிந்துசகலரும் சவத்தையெடுக்கயெத்தனித்தார்கள் தாய்கூடாது
விதிப்படி கல்யாணம் செய்துதான் ருத்திரகிரியைநடத்தவேணு
மென்றுமறைத்தாள். அவ்விதமே கீழைச்சாலை யிலுள்ள லெக்ஷி
மியை விலைக்குவாங்கிச்சவத்துக்கு விதிப்படிவிவாகம் செய்தார்
கள் பிறகு லெக்ஷிமிக்குத்தெரிவித்துச்சவத்தைமயானத்தில் ஜெ
தையடுக்கியக்கினிப்பிரவேசம் செய்தார்கள். லெக்ஷ்மிஎல்லாரும்
போனபிறகு சவத்தையெடுத்துமடியில்வைத்துக்கொண்டு அவன்
ரூபத்தைப்பார்த்து வியப்புற்றுவிஷ்ணுவைஸ்மரித்துச்சொல்லுகி
ன்றாள். சௌபாக்கியத்தையும் ஆயிசும் அருளினீரே பக்தாவிழந்
தவெனக்குச்சௌபாக்கியமும் லெக்ஷம் ஆயிசும் என்னபிரயோஜ
னம். எனக்குக்கொடுத்தஆயிசில்பாதி ஆய்சும்புருஷனுக்குக்கொ
டுத்துப்பூமியில் ஜீவித்திருககட்டும் அப்பொழுது என்சௌபாக்கி
யம் சித்திக்கும் இல்லாதவரையில் நான் உயிரைவிடப்போகிறேன்
உமது வசம்வியர்த்தமாய்ப்போய்விடும் என்றுகூவிச்சொல்லி மாத
வரைஸ்மரித்தாள் மாதவருடையஸாஸனத்தின் பேரில் விஷ்ணு
தூதர்கள் எமதூதர்களையடித்து விஷ்ணுவர்மாவின் ஜீவனைக்கொ
ண்டு வரச்செய்து சவத்தின்சமீபஞ்சென்றார்கள் எமதூதர்கள்
ஆவர்களின் செய்கையைக்கேட்டவுடனே விஷ்ணுதூதர்களே
விஷ்ணுவர்மாவுக்கு விஷ்ணுகொடுத்த வரம் பதினாறுவயது நீங்
கள் இப்பொழுது அவர்கட்டளையைமீறி நடக்கின்றீர்கள் அச்சி
வனைவிட்டுச்செல்லுங்களென்றுசொன்னான் விஷ்ணுதூதர் அடே

ஷமா நீதான் மூடன் விஷ்ணுவின் ஆக்கினையைமீறி நடக்கிறவன் மூதிரீக்குமாங்கல்யமும் லெக்ஷமாயிசும் பகவான் வாமளித்திருக் கின்றார் விதவைக்குச்சௌபாக்கியமுண்டா அவள் சரீரத்தை விட்டுவிடுவாளே வரதானம் வீணருமே அவள் ஆயிசில்பாதியைப் புருஷனுக்குக்கொடுத்து விட்டாள் மாதவருடையகட்டளையின் பேரில் நாங்கள் வந்தோமேன்றுசொன்னார்கள் அவ்வார்த்தையை த்தருமராஜாகேட்டு ஆச்சரியமடைந்து விஷ்ணுவர்மாஜீவனைச்சரீ ரத்தில் புகவிட்டுத்தன திடம்சென்றார்கள், விஷ்ணுவர்மா. லெக்ஷிமி யின்மடியிலிருந்து எழுந்திருந்து லெக்ஷ்மியையும் ருத்திரபூமியை யும் பார்த்து வியப்புற்றுலெக்ஷ்மியைப்பார்த்துக்கன்னியாரத்தி னமே நீயார்? இங்குவந்தகாரணம் நான் அந்தபுரத்தில்தாய்மடியிற் றலைவைத்துக்கொண்டேன் உனக்குமெனக்குமென்னசம்பந்தம்? உனக்குத்தெரிந்தாற் சொல்லென்றுகேட்க இராஜகுமாரனுக்கு நடந்தவிஷயம் சொன்னாள் இராஜகுமாரன் உன்னால் உயிர் பிழைத்தேன் உன்ஆக்கினைப்படி நடக்கிறேன் அரசகுமாரன் நீ சொன்னவிஷயம்யாவற்றும் சொற்பனமாகவெனக்குத்தோன்றி ற்று அவிடமிருந்தகாவற்காரன் இவர்கள் பேசிக்கொண்டிருந்த தையரண்மனையில் இராஜாவிடந்தெரிவித்தான் உடனேபல்லக்க னுப்பி இவர்களைக்கொண்டுபோய் விதிப்படிவிவாகஞ்செய்துபட் டாபிஷேகஞ்செய்துவைத்தான் அவன் ராஜ்பத்தையாண்டு அந் தியத்தில்பெண்சாதியுடன் வைகுண்டமடைந்தான் .ஆகையால் மாதவர்சவுபாக்கியத்தை அளிப்பவர்

## திருமேனியழகர்வைபவம்.

லோகவாசியான ராதாகிருஷ்ணன் கோவிந்தனென்றும் இந்தஸ்தலத்தில் திருமேனியழகரென்றுங்கூறப்படுவர் கர்நாட தேசத்தாசனுகியவல்லபனென்பவன் ஊமைகுருடுமுடமாயும்தன க்குப் பிறந்த ஒரே புதல்வனைப் பார்த்துத் துக்கித்து அத்துடன் குஷ்டரோகமும் உண்டானதால் வேலைக்காரரிடங் குழந்தையைத் தண்டகாவனத்தில் யெங்கேயாவது வைத்து விட்டு வரும்படி கட்டளையிட மதங்காச்சிரமத்தில் திருமேனியழகர் சந்நிதியில் வைத்துச் சென்றார்கள். கோவில் அர்ச்சகன் வந்து குழந்தையை பார்த்து அபிஷேக தீர்த்தத்தை அதன் பேரில்தெளித்தான், இள

சிதீர்த்தம் உள்ளுக்குக் கொடுத்ததனால் அக்குட்டரோகம் நீங்கிக் கோடி மன்மதாகிருதியாகவானான். குழந்தைக்கு வயசு பன்னிரண்டு மிகுந்த ஞானவித்தையுள்ளவனைப் பகவானை மூன்று மாதம் சேவித்து வந்தான். திருமேனியழகர் தரிசனமளித்து இரதம் வில், அம்பறாத்தூணி, பதினாயிரம் யானை பெலமுமளித்து அவன் தேசம் பெற்றோர் பெயரையுஞ் சொல்லி மறைந்தார். அப்பையனுந் தன்தேசஞ் சென்று பெற்றோர்களைநமஸ்கரித்து நடந்த விஷயங்களைச் சொன்னான். அவர்களும் பேரானந்த மடைந்தார்கள். பிறகு அவன் பூமிமுழுதும் ஜெயித்துப் பெற்றோர்களுடன் பூமியைப் பாலனஞ் செய்து பாரியையுடன் வைகுண்டஞ் சென்றான். திருமேனியழகர் அற்புத ரூபத்தைக் கொடுப்பவர்.

## வைகுண்டநாதர் மகத்துவம்.

வைகுண்டவாசியான விஷ்ணுவே இந்த ஸ்தலத்தில் வைகுண்டநாதரெனப் படுவர் ஹிம்சகனென்ற வேடன் தண்டகாவனத்தில் அநேக ஜனங்களை வதைத்துத் தனாபகாரஞ் செய்து புத்திர தாராதிகளை ரக்ஷித்து வந்தான். நாகேச[illegible]ன்ற பிராமணனைக் கண்டு கொல்ல யத்தனிக்கையில் அப்பிராம்மணன் பயந்தோட அவனும் பின்றொடர்ந்து செல்ல வைகுண்டநாதர் சந்நிதியிலுள்ள தீர்த்தத்தை தாகத்தினால் கொஞ்சம் பருகினான். அதனாலவனுக்கு துற்புத்தி நீங்கி ஹிம்சை திருட்டு இவைகளை விட்டுச் சம்பாதித்திருந்த பொருளையெல்லாம் அவருக்கு உற்சவம் பூஜைகளை நடத்தி வந்தான்

அவன் பொருளும் நீங்கிவிட்டது பாவமும் நசித்து பக்தியைச் செய்து வைகுண்டத்தையும் அடைந்தான். வைகுண்டநாதர் தர்மப்ரதரெனக்கூறப்படுவர். இதைப் பக்தியாய்ப் படிப்பவர் தர்மத்தையடைவார்.

## மதுசூதனர் மகத்துவம்.

கீழ்ச்சாலைக்குக் கீழ்புறமாயுள்ளவர் மதுசூதரெனப்படுவர் மத்திய தேசாதிபதியான சீஷ்ணுவென்றவரசனுடன் கேகயதேசா

தியுத்தஞ்செய்யசிஷ்ணுந்தோல்வியையடைந்துபரிவாரத்துடன்
ராஜ்யத்தைவிட்டுத்தெண்டகாவனத்தில் மதுசூதனாலயஞ்சென்று
ன். அங்கு ஒருமாசந்தபசுசெய்துவர மதுசூதனர்அவன்தியானித்
தபடி நரசிம்மரூபமாய்த்தரிசனமளித்துக்கேகயனை ஜயிக்கப்பல
மும்சக்ராயுதமுமளித்து அவனைநாட்டுக்குப்போய்வரவுந்தாவு
மளித்தார். சிஷ்ணுதன்நாட்டுக்குச்சென்றுகேகயனைஜயித்துத்த
ன்னரசாக்ஷியையடைந்து கேகயதேசஞ்சென்று அங்கும்அவனை
ஜெயித்துக்கப்பங்கட்டும்படியாகச்செய்து ங்கல்அரசர்களையும்வெ
ன்றுசார்பவுமனானான் மதுசூதனர்வீர ஸ்ரீபாதரெனப்படுவர்.

## புருஷோத்தமர் வைபவம்.

புருஷோத்தமரே விராட்ரூபியான திரிவிக்ரமரெனப்படு
வர். சீரங்கத்தில்ரெங்கசர்மாவென்ற வந்தணனுக்கு சுமேதனென
ற புதல்வன் லோகஞானமற்று ஆகாரம், நித்திரை, மைதுனபரனா
யிருந்தான். காவேரிப்பட்டணத்திலுள்ள சங்கமேசனென்றவித்து
வான் புதல்வியைபிதிர் கௌரவத்தால்சுமேதனுக்குவிவாகஞ்
செய்துகொடுத்தான். சுமேதஸ்மாமனார்கிரகம் சிலகாலம் வசித்தி
ருந்தான். சங்கமேசர்கிரகத்தில் ஓர் அதிதிபூஜைசெய்தார் மூல
வல புராணகாலக்ஷேபஞ்செய்யும்பொருட்டு அநேகர்வந்தார்
கள். சங்கமேசரின்மூத்தபுதல்வன்புராணார்த்தஞ்சொன்னான் அப்
பொழுதபதீத்திரர் ரெங்கசர்மாவேதாந்தமயோகசாஸ்திரங்களில்
வழர்ந்தர் முற்கலம்யோகதத்துவமயமானதால் அவர்பிள்ளை
தாற்பரியஞ்சொல்லட்டுமேயென்றார் அதற்குப்பல்லவனென்றமூ
த்தகுமாரன் சுமேதசுக்குமென்றுதெரியுமேதவிர தான் சூவதுதெரி
யாதென்றான் அதைக்கேட்டயாவருஞ்சிரித்தபடியால் சுமேதன்
மகாக்ரோஷத்துடன் கிரித்தான். இராத்திரிபடுக்கையில் அவன்பா
ரியையாகதனை ஆகாரம் நித்திரைமைதுனம் இம்மூன்றுந்தானுமக்
குத்தெரியும் வேறொன்றுமுமக்குத்தெரியாதென்று மூத்தமைத்
துனன் சொன்னான் அதையறியாமல் சனங்களுடன் நீரும் சிரித்
தீர் எனக்கு அப்பொழுதேபிராணன் விடும்படியிருந்தது நீர் என
க்கேயாவது சென்று வித்தையபின்றி வருவீரும் இல்லாதவிடத்தில்
நான்பிராணனைவிட்டுவிடுவேனென்றாள் அவள்வார்த்தையைக்
கேட்டசுமேதஸ்ரோஷத்துடன் காடுசென்றான் தெய்வகதியாய்ப

புருஷோத்தமராலயஞ்சென்று நல்லபுத்தியுண்டாயத்துளசியால் பூஜித்துநாமமந்திரம்ஜெபித்து திரிகாலமும் ப்ரதக்ஷணஞ்செய்துவந்தான். ஒருநாளிரவில் கொஞ்சம் நித்திரைமயக்கமாயிருக்கையில் சொப்பனத்தில் பகவான் பிரசன்னராய்நற்பிரக்ஞைநல்லபுத்தி சகலவித்தைகளையும் அவனுக்கு அனுக்கிரகித்தார். அவன் விழித்துக்கொண்டு பகவானைத்துதித்து காவேரிப்பட்டணஞ்சென்று அரசன்சபை பேரயமது வித்துவான் ஜெயிக்கவந்தேனென்று கெம்பீரமாய்ச் சொல்லவரசன் சங்கமேசர் பல்லவனேசன் முதலியோரைவரவழைத்தான். வித்வான்கள் சுமேதஸ்ஸைப்பார்த்துச்சிரித்தார்கள். சுமேதஸ் அப்பொழுது சகலவித்தைகளிலும் [illegible]ஷத்துடன் பூருவபக்ஷஞ்செய்தான். அவனுடையசாஸ்திரவாக்கியத்தையும்பூருவபக்ஷம் அசைக்கமுடியாததாயுமிருப்பதையவர்கள் பார்த்துப்பிரமைபடைந்தார்கள் உமதுபூர்வபக்ஷத்திற்குச்சித்தாந்தஞ்சொல்ல வெங்களால் முடியாது. நீரேசொல்லுமென்றவித்துவான்கள்சொல்லவேயதையலக்ஷியமாய்க்கண்டித்துச்சித்தாந்தமுஞ்சொன்னான் இந்தப்பாலவித்துவான் குணரூபபுத்தி வித்தைகளால் சிறந்தவன் உங்களையொருநொடியில் ஜெயித்தான். அப்படியிருக்க நீங்கள் வந்தவுடனவனைப்பார்த்துச்சிரித்தீர்களே யக்காரணத்தைச்சொல்லுங்களென்று அரசன்கேட்கவதற்குசுமேதஸ் இவ்வித்வான்கள்மூன்று தானறிவார்கள் சிலர்நான்கையுமறிவார்கள் நான் ஐந்தையுமறிந்தவனாதலால் இவர்கள் சிரித்தார்களென்றான். அவ்வித்வான்களிவ்வாக்கியார்த்தம் புரியாமல் விழிக்கவே அரசன் அதன் கருத்தைக் கேட்கச் சுமேதஸ் சொல்லுகிறான். மாயையென்பது முதலாவது, ஜீவனிரண்டாவது, மூன்றாவதீசன், நான்காவது சாக்ஷி ஐந்தாவதுபிரமம். இவர்களுக்குப் பூரணஞானமில்லாததால் சாக்ஷி யறிவார்கள் சிலர் சாக்ஷியையுமறிவார்கள் நானேதுரியாதீதமான பிரமத்தையுமறிவேன். சங்கமேசரின் புத்திரனாகியபல்லவனேசன் நிச்சயமாய்மூன்றுதானறிவானென்றான். பல்லவனேசன் [illegible] மண்டைநொந்த [illegible] விஷயங்களைச்சொல்லி அவனை நமஸ்கரித்து மன்னிப்புக்கேட்டுக்கொண்டான். அரசன் சுமேதஸுக்கு நானூறுமாங் கனும் அனேகவஸ்திரபூஷணங்களும் வெகுமதிசெய்து [illegible] மாமன்றார் [illegible] விடுசென்றான் அவன் [illegible] [illegible]

திசெய்துசகலபோகங்களையுமநுபவித்துப்பெற்றேர் மனைவாளு டன் [illegible] திவ்யஸ்தானத்தின் அதனால் புருஷோத்தமர் மே தாபிரதம[illegible] வித்தியாப்பிரதமசென்றுங்கூறப்படுவர்.

## [illegible]செம்பொன்னரெங்கர்வைபவம்.

சர்வபிராணிகளின்இருதயவாசியான அக்குஷ்டமாத்திரப் புருஷனை வாசனரென்றும் அவரே இந்தஸ்தலத்தில் செம்பியருள் னரெங்கரென்றுங்கூறப்படுவர். காஞ்சிபுரத்தில் [illegible] வேரசந்தணன்காமாக்ஷியென்னும்மனையாளுடன் கிருகஸ்தாச்ரமத் தை நடத்தி வருகையில் மூன்றுபுத்திரர்களும் ஐந்துபுத்திரிகளும வருக்குண்டானர்கள். அவர்களைப்பாதுகாத்து ரக்ஷித்துவருகை யில் பதினைந்து வயதுள்ள மூத்தகுமாரன் பிதாவின் கிரமத்தையு ணர்ந்து பிதாவைப்பார்த்துத்துர்ப்பிக்ஷத்தாலித்தேசம் பிடிக்கப்ப ட்டதால் நமக்குப்பாதியாகாரங்கூடக்கிடைக்கவில்லை. சுபிக்ஷமரா னகாவேரிதீரஞ்சென்றுசம்பாதித்து மாதமாதம் குடும்பரக்ஷணத் தின் பொருட்டு என்னால் கூடியவரையில் பணமனுப்புகிறேன் விடைகொடுமெனக்கேட்கப்பிதாவுமநுமதி கொடுத்தார். மிகுத்து [illegible] அப்பையன் [illegible]தில் மதங்காச்சிரமஞ் சென்றான். செம்பியன்னரெங்கரின் சந்நிதியையடைந்து அவர் பெய ரைக்கேட்டு [illegible] தேசம் பெற்று [illegible] [illegible] ஜெபித்துத்துதித்தான். துதித்து [illegible] சென்றான் சாயங்காலத்தில் [illegible] [illegible] விதிமுடித்துப்பலாகாரஞ்செய்து இரு [illegible] புலிமுதலியஜந்துக்களின் பயத்தால் [illegible] [illegible] நித்திரைசெய்தான். இவ்வ [illegible] வளிகளாய்த்திவட்டியுடன் [illegible] [illegible] கடியில்வந்து தாங்கள் திருடிக்கொண்டு [illegible] பூமியில் வைத்துவிட்டு ஆலமரத் [illegible] என்றபத்[illegible] [illegible] திருத்தக[illegible] கொடு [illegible] உடனே[illegible] [illegible] வெளியேவந்து [illegible]

கொள்ளென்று சொன்னார்கள் அதைக்கேட்டிருந்த ஆலயத்தின் சந்நிதில் படுத்திருந்தமுகுந்தனென்றபையன் அந்தப்பிரகாரம் நாராயணபூதமேவிலகியிருவென்று ஜெபித்தான். கருங்கற்பாறையானதுவிலகிவிட்டது. அப்போது செம்பொன்னரங்கர் அசரீரியாய் முகுந்தனே உனக்குவேண்டிய இரத்தினாபரணபட்டுபீதாம்பரங்களை யெடுத்துக்கொள்ளென்றுசொன்னார். அப்பொழுது முகுந்தன் வேண்டியவைகளை எடுத்துக்கொண்டு முன்போல் நாராயணபூதமே மூடிக்கொள்ளென்றுசொல்லிவிட்டு அநேகம் பொதிமாட்டில் ஏற்றிக்கொண்டு தன்னூர்சென்றான். சென்று அநேகதானதர்மங்களைச்செய்து அந்தியத்தில் மாதாபிதாவுடன் வைகுண்டத்தையடைந்தான். அதனால் செம்பொன்னரங்கர் சுவர்ணமுதலியவைகளையளிக்கக்கூடியவர்.

---

## லெக்ஷிமிநாராயணர் வைபவம்.

அகஸ்தியர் சொல்லுகின்றார் நளினீபுரத்திலெழுந்தருளியிருக்கும் மிகவும் சோபையுடையவரான லெக்ஷிமிபதியாயிருக்கும் ஹரியானவர் லெட்சுமிநாராயணரென்றழைக்கப்படுகின்றார். எங்கும் வியாபித்திருக்கிற திருவிடைமருதூரில் வீரசோழனென்றோராசனிருந்தான். அவன் பிள்ளையில்லாதவனாய் பிராமணர்களுடைய நியமனத்தினால் காவேரிசமுத்திரசங்கமதட்டத்தில் ஸ்நானம்பண்ணிவிட்டுத்திரும்பி ஊருக்குப்போகும்வழியில் நளினீபுரத்தையடைந்து, பாவங்களையெல்லாம்போக்கும் லெக்ஷிமிநாராயணரை விதிப்படிபக்தியுடன் வம்சம்விளங்கும் படிபிள்ளைவரந்தரவேண்டுமென்று பிரார்த்தித்தான். அப்போது நிச்சயமாய் வார்த்தைப்பட்டது. என் அநுக்ரகத்தாலுண்டாகக்கேட்டுச்சந்தோஷமடைந்து தனது ஊருக்குப்போனான். பிறகு மன்மதன் போலழகுள்ள சயசோழனென்னும்பிள்ளையை அடைந்தான். பிள்ளைக்குப்பதினாறுவயதில் காவேரிபட்டணத்தில் சுவேதகேதுவெனென்பவனுடைய அழகுவாய்ந்தபெண்ணைக்கலியாணஞ்செய்து கொடுத்தான். ஜெயசோழன் தன்மனைவியோடும் மேன்மாடியிற்

படுத்திருந்தான். அப்போது ஆகாயமார்க்கமாய் வந்த ரம்பையானவள் அந்த ஜெயசோழனைப் பார்த்து மோஹித்து அவனைத் தூக்கிக்கொண்டு சந்தோஷத்துடன் தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தாள். இராஜகுமாரி விடிந்ததும் தன் கணவனைக்காணாமல் இதுவிஷயத்தைத் தன் மாமனாருக்குத் தெரிவித்தாள். கெட்டுப்போன இராஜகுமாரன் பதினைந்துதினம் வரையில் வரவில்லை. அரசன் மனவருத்தமுற்று அழகுவாய்ந்த தன் மருமகளை நடத்தை கெடாமற் பாதுகாத்துவந்தான். இராஜகுமாரி ருதுஸ்நானம் செய்ததினத்தில் அவள் உறங்கும்பொழுது மேல்மாடியில் ரம்பையானவள் ஜெயசோழனை யவள்படுக்கையில் கொண்டுவந்துவிட்டாள். அப்போது தன் பத்தினியுடன் செயசோழன் கூடிரமித்தான். இரவின்முடிவில் முன்போல ரம்பையானவள் செயசோழனை எடுத்துச்சென்றாள். அரசனுடையமருமகளான சுந்தரி கர்ப்பந்தரித்தாள். இதைக்கேட்ட அரசன் தன் மருமகள் சோரபுருஷனால் கர்ப்பந்தரித்தாளென்றெண்ணி தன் மருமகளுடைய இரண்டு கண்களையும் கட்டிக் காட்டில்கொண்டுபோய் விட்டார்கள். இராஜகுமாரி இங்குமங்கு மலைந்து தெய்வகெதியால் ஓர் தாமரையோடையையடைந்தாள். அங்கிருந்து ஓர் சிவாச்சாரியார்தயவினால் அவர் வீட்டிற்குக்கொண்டுபோய்க்காப்பாற்றினார். இராஜகுமாரி கோடிமன்மதன் போல் ஒருபிள்ளையைப்பெற்றாள் அப்பிள்ளைக்குத்தியாகேசனென்று பெயரிட்டாள். புத்திமானும் ரூபவானுந் திடவானுமாகிபன்னிரெண்டுவயதுக்குள் வில்வித்தை முதலிய வித்தைகளை யெல்லாங்கற்றுக்கொண்டான். வில்வித்தையில் தேர்ச்சிபெற்ற காஞ்சிபுரத்தரசனோடு கமலாலயநாதனான மனுசோழனுக்குப் பயங்கரமானதோர் யுத்தமுண்டாயிற்று. காஞ்சியரசன் மனுசோழனுடைய பட்டணத்தில் பிரவேசித்து அவன் பெண்கமலையென்பவளைப் பிடித்துததன் ரதத்திலேற்றிக் கொண்டு தன்ராஜ்யத்திற்குப் போக ஆரம்பித்தான் அரசகுமாரி கூக்குரலிட்டழுதாள். தியாகேசன் அந்தப் பெண்ணின் அழுதுரலைக்கேட்டு வில்லை யெடுத்துக்கொண்டு அவிடம்போய் அழுகுரலைவிசாரித்தான். அதற்கு அந்தக்கன்னிகை கிழவனா

இந்தக்காஞ்சீபுரத்து அரசன் என்னைத்தரவேணுமென்று என் தகப்பனைக்கேட்டான். என்பிதா அதற்குச்சம்மதிக்கவில்லை அத னால் கோபங்கொண்டு சைன்யங்களுடன் என்தந்தையுடன் சண் டைசெய்து ஜெயித்து அவரைத்தன்னுடைய தேர்த்தட்டில்கட் டிவைத்துவிட்டு என்னையும் அந்தரதத்தில் ஏற்றிக்கொண்டான். அதனால் யான் கூச்சலிட்டேன் தங்களுக்கு எதிரியை ஜயிக்கச தியிருக்கும் பக்ஷத்தில் என்னையும் என்தகப்பனையும் காப்பாற்ற வேணுமென்று அவள்சொல்லக்கேட்டுத்தியாகேசன் காஞ்சியரசனு டன் யுத்தஞ் செய்து ஜெயித்து காஞ்சியரசனையும் இன்னும் சே வகர்கள் முதலியோரையும் பிடித்துத் தேரில்கட்டிவிட்டுக்கமலை யிடம் வந்து அரசனை ஜெயித்து உன்தகப்பனை விடுவித்துக் காஞ் சியரசனைத் தேரில்கட்டிவைத்திருக்கிறேனென்று சொல்லிவிட் டுத் தன்னிருப்பிடம் போய்ச்சேர்ந்தான். இவ்விஷயங்களைத் தன் புத்திரியிடங் கேட்டுத் தியாகராஜனை வரவழைத்து தன் ராஜிபத் தையுங் கொடுத்துப் பெண்ணையுங் கொடுத்தான். தியாகராஜன் பெண்ணுடன் கூடி யாண்மனையில் வெகுசந்தோஷமாயிருக்குங் காலத்தில் தன்னையுந் தன்தாயையுங் காப்பாற்றின பிராமண சிரேஷ்டரை மந்திரியாகநியமித்துக்கொண்டான். தியாகராஜ னின் கீர்த்திதேவலோகத்திலும் பாவியிருந்தது ஆதலால் தேவர் களுக்கும் அசுரர்களுக்கும் நடந்தயுத்தத்தில் இந்திரனுலழைக்கப் பெற்று விஷ்ணுவின் ஆக்ஞையினாலனுப்பிப் போயசுரர்களைக் கொன்று தேவர்களுக்கு வெற்றியுண்டு பண்ணினான். தேவர் களுக்கரசனான தேவேந்திரன் தியாகராஜனுக்கு அர்த்தாசனங் கொடுத்தான். பின்பு தேவர்களிடம் தன் பிதாவான ஜெயசோழ னைப்பற்றி விசாரித்தான். உடனே ரம்பையானவள் பயந்து இந் திரனுக்கு முன்பாக ஜெயசோழனைக் கொண்டு வந்துவிட்டு நடந் தசெய்தியைச்சொன்னாள். அதற்கு தேவேந்திரன் தியாகசோ ழனைநோக்கியான் ரம்பைசெய்த அபராதத்திற்கு அவளைசிக்ஷை செய்கிறேனென்று சொன்னான். அதற்கு தியாகேசன் இந்தரம் பை லக்ஷவருஷம் பூலோகத்தில்வந்து என்தகப்பனுடன் மாசம் ஒருதரம் போகித்துப் பின்பு இவ்விடம் வரும்படிசெய்யுமென்று கேட்டுக்கொண்டான் அந்தப்படிரம் பைக்குஇந்திரன் சாபங் கொடுத்துவிட்டுத்தனது மேனகை என்பவளுக்குப் பிறந்த மஞ்சு

கோஷை என்னும்பெண்ணைத் தியாகேசனுக்குக் கொடுத்தான். இன்னும் பற்பல வஸ்திராபரணங்களையுங் கொடுத்தான். தியாகசோழனானவன் தன்னுடைய புத்திரனென்று கேட்டஜெயசோழன் மிகவும் சந்தோஷப்பட்டான், தியாகசோழன் தன்தகப்பன் பம்பை மஞ்சுகோஷைமுதலிய யாவருடனும் தன்னிருப்பிடமாகிய கமலாலயம் வந்துசேர்ந்தார்கள். வந்துசேர்ந்து இராஜியபரிபாலனம் பண்ணிக்கொண்டிருந்து அந்தியகாலத்தில் தாய், தகப்பன், பாரியைகளுடன் வைகுண்டத்தை அடைந்தான். ஆகையால் லெக்ஷிமி நாராயணர் புத்திரபௌத்திர வமிசவிருத்தியை அளிப்பவர்.

### பள்ளிகொண்ட பெருமாள் மகாத்மியம்.

ஒருகாலத்தில் மனுவம்சத்திற் பிறந்தவேனன் என்னுமரசன் கொடுங்கோலரசு புரிபவனாய், ஆசாரஈனனாயிருந்தான் அவனுடைய பாவத்தினால் சகலவளப்பத்தையுங் கொடுக்கும் பூமிதேவியும் தன்னிடத்திலெந்த வித்துப்போட்டாலும் அதன் சக்தி கெட்டுப்போகவும் அதனால் ஆன்மகோடிகட்கு ஜீவாதாரமான தானியமற்றுப்போகவும் நேர்ந்தது, அந்த அபகீர்த்தியுள்ள வேனனென்னுமரசன் ரிஷிகளுடைய பிர்ம்மதேஜசுவினால் சங்கரிக்கப்பட்டான், அவனுடைய புத்திரனாகிய பிருதுவென்பவன் தந்தையாற்கிடைத்த அபகீர்த்தியை மாற்ற எண்ணி இத்தலத்தையடைந்து சேஷசாயானவென்னும்பெயருள்ளவிஷ்ணுவையன்புடன்பூசித்தான், அவ்விஷ்ணுவினுடைய கிருபையால் தேர், வில், அம்பறாத்தூணி இரண்டு, பராக்கிரமம் இவைகளைப்பெற்றுப் பூமியை வளர்ப்பந்தரும்படி பலமுறையும் பிரார்த்தித்தும் மறுத்தமையால் சினங்கொண்டவனாய் வில்லைவளைத்துப் பாணங்களை பிரயோகம்பண்ணத்தொடங்கினான், உடனே பூமிதேவி பசுரூபமாக எதிரில்வந்துநின்று வேண்டியவற்றை தன்னிடமிருக்கும் பால்வழியாகப் பெற்றுக்கொள்ளென்றாள் அவன் உடனே தனக்குவேண்டிய தானியங்களை மனதிற் சங்கரித்துக்கறந்துக் கொண்டான். பின்பு இந்திரன்முதலான தேவர்களும் மனிதர்களும் தங்கள் தங்களுக்குவேண்டியவற்றைப் பசுவடிவமாகிய பூமியினிடத்திற் கறந்துகொண்டார்கள் இவ்வளவு பிரபலமான காரியத்தைச்செய்தபடியால் அந்தப்பிருதுவென்னும் அரசன் விசேஷமானகீர்த்தியையடைந்தான், அதனாலத்தலத்திலுள்ள சேஷசாயனர் என்னும்பெருமாள்கீர்த்தியைக்கொடுப்பவர்.

## கிருஷிகேசரென்ற குடமாடகூத்தர் வைபவம்.

முற்காலத்தில் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும், ஒருவராலும் கிட்டவொண்ணாத ஒரு யுத்தமுண்டாயிற்று. சேஷன் என்று பெயர் கொண்ட தேவராஜன் வேண்டுகோளின் பேரில் சுத்தவீரரும் மகாபெலசாலியுமான ஆறுமுகக்கடவுளைச் சேனாதிபதியாகச்செய்தார். எதிர்க்கக்ஷியில் மகிஷன் என்றொருவன் அசுரர்களின் றலைவனாக இருந்தான். அவன் தேவர்களின் சேனை நடுவில் எல்லாரையும் பிரிக்கக்கூடிய ஒரு யந்திரத்தைஸ்தாபித்தான். அந்த யந்திரசக்தியால், தேவர்களெல்லாம் இந்திரனைவிட்டுப்பிரிந்து தங்களிஷ்டப்படி போய்விட்டார்கள். அது கண்டு வருத்தமுற்ற இந்திரன், இந்தக்குடமாடுகூத்தர் எழுந்தருளியிருக்கும் ஸ்தலத்திற்குப்பரிகாரத்தை உத்தேசித்து வந்து குடமாடு கூத்தரைப் பக்தியுடன் பூஜித்தான். அவருடைய கிருபையால் மகிஷனால் ஸ்தாபிக்கப்பெற்ற வித்வேஷணயந்திரத்தை யுத்தபூமியிற்சென்று உடைத்து விட்டார். அதன்பின் கந்தசுவாமியானவர் மகிஷாசுரனைச் சங்கரித்தார். சிதறிச்சென்ற தேவகூட்டத்தினரும் இந்திரனுடன் வந்து சேர்ந்தார்கள். ஆகையால் இந்தஸ்தலத்திலுள்ள குடமாடுகூத்தர் வசியத்தைக் கொடுப்பவராய் விளங்கி வருகிறார்.

## பார்த்தசாரதிபெருமாள் வைபவம்.

இந்தந்தலத்தில் தாமோதரர் என்னும் பார்த்தசாரதியென்னும் பெருடைய பெருமாள் பாண்டவர்களின் மூன்றாவதான பார்த்தன் என்னும் பெயருடைய அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை நிமித்தம் புறப்பட்டு வரும்போது இந்தத்தலம் வந்தான் வந்து தாமோதிரமூர்த்தியை அன்புடன் பூஜிக்க அவர் பூசைக்குமகிழ்ந்து வேண்டிய வரங்களைக்கேள் என அர்ச்சுனன் பாரத யுத்தத்திற்குக்கிருஷ்ணன் வரவேண்டுமென்றும் யுத்தத்தில் ஜெயமும்வேண்டும் எனக்கேட்க அவ்வாறே இரண்டையும் அளித்தார். அதனால் பார்த்தசாரதி என்னும் திருநாமம் பெற்று விளங்குகின்றார். பின்பு பாரதமாகாயுத்தத்தில் அர்ச்சுனனுக்கு கீதையை யுபதேசம்செய்து ஜெயத்தையும் கொடுத்தார். ஆகையால் பார்த்தசாரதிசுவாமியானவர், விஜயனென்றும் கூறப்பெற்று இவ்விதமாக பன்னிரண்டு விஷ்ணுமூர்த்திகளுடைய மகிமையைச்சுருக்கமாக சொன்னோம் இந்ததலத்தில் வசிப்பவர்கள் மிகுந்த பாக்கியசாலிகள் என்பதற்குச் சந்தேகமில்லை.

வஸிஷ்டாதிமுனிகள் அகஸ்திய முனிவரைப்பணிந்து ஓ அகஸ்தியமுனிவரே நாராணர் என்ற பகவான் மதங்கேசராகிய பரமேசுரனை எப்பொழுது எதற்காகப் பூஜித்தாரென்று கேட்க அகஸ்தியமுனிவர் சொல்லுகின்றார்,

நாராயணர் என்ற மகாவிஷ்ணுவானவர் அவ்பக்தம்முதலிய தத்துவங்களுடைய ஸம்யோகத்தாலும் வாஸஸ்தான பேதத்தாலும்ஒன்பது பேதமாய்வேதஸாஸ்திரங்களில் கூறப்படுகின்றார், விசுத்தஸத்துவப் பிரதானமாயையிற்றோன்றிய பிரம்ம பிரதிபிம்ப ரூபியான பூதிநாராயணரே ஆதிநாராயணரென்று கூறப்படுவார் அநேககோடி பிரமாண்டங்களுக்கு ஆதாரபூதரான வைகுண்டத்திலுள்ள பரஞ்சோதிரூபமான திருபாத்விபூதிவைகுண்டத்தில் தமது கணங்களுடன்விளங்கிவருகின்றார். இவரே துரிய மூர்த்திஆதிநாராயணரென்றும்,மகாநாராயணரென்றும்,கூறப்படுகின்றார். முக்குணங்களுக்கும் ஆதாரபூதமான இவர் நான்கு புஜங்களுடன் விளங்குகின்றார். இவரே இரண்டு புஜத்துடன் இராதாகிருஷ்ணன் என்ற பெயரையுடையவராய் கோலோகத்தில் வஸித்துக்கொண்டு இராதாக்கிரீடை செய்கின்றார். இராதாகிருஷ்ணனுக்கு சுந்தர நாராயணரென்று பெயர். இவரும் துரீய மூர்த்தி என்றே கூறப்படுவர். பிரிவினையுடைய முக்குணங்களில் ஸத்துவகுணத்தை ஆசிரயித்துலெக்ஷிமி நாராயணரென்றபெயருடன்லோகரக்ஷகராய்பிரமாண்டத்தில் ஸத்தியலோகத்திற்குஉள்ர்த்துவ பாகத்திலுள்ள வைகுண்டத்தில், விஷ்க்கனர் முதலிய கணங்களுடன் வஸித்து வருகின்றார். இவரேவைகுண்ட நாராயணரென்று கூறப்படுவர். இவரே காரணமூர்த்தியென்று வேதாதிகளில் துதிக்கப்படுகின்றார். இவர்தர்மம் என்றபுருஷார்த்தத்திற்கு அதிதேவதையாய் சக்கிரவாளகிரிபார்சுவத்தில் ஜொதிர்ப் பூமியில் காளமேக நாராயணபுரத்தில் தர்மநாராயணரென்ற பெயருடன் வஸித்து வருகின்றார். சூக்ஷமபூதங்களில் சலத்துவத்தை ஆசரித்து அனந்தநாராயணர் என்றபெயருடன் க்ஷீரஸமுத்

திரத்தில் சுவேத்வீப ஆதிசேஷன் மீது படுத்து நித்திரைசெய்கின்றார்' தாமேயக்ஞரூபியாய் ஸாத்திய நாராயண என்றபெயருடன் மகாமேருவில் தேவகணங்களுடன் வஸிக்கின்றார். உலகத்திற்குவெளிச்சத்தைஉண்டுபண்ணும்பொருட்டுஅக்கினிதத்துவத்தையாசிரித்துத்ரூபநாராயணர் யென்ற பெயருடன்சூரியமண்டலத்தில் வஸிக்கின்றார். இவரே சூரியநாராயணர் என்றும் கூறப்படுவர். உலகத்திற்கு குருசிஷ்யக்கிரமமாய் தபோமார்க்கத்தைவெளியிடும் பொருட்டு தர்மப்பிரஜாபதிக்குப்புத்திரராய் அவதரித்து நரநாராயணர்என்றபெயருடன் பதரிகாச்சிரமத்தில் முனிகணங்களுடன் வஸிக்கின்றார். அதினால்பதரீநாராயணர் என்று கூறப்படுகின்றார். சிவஸக்தி ஸவரூபியான இவர் அடிக்கடி ஸ்திரிரூபத்தைத்தரிப்பவராய் சிவனுடைய வாமபாகத்தைப் பெற்று சங்கரநாராயணர் என்றபெயருடன் கைலாசத்தில் வஸிக்கின்றார். இவ்விதம் ஒன்பது ரூபமாய்க்கூறப்படும். ஒன்பது நாராயணர்களாலும், மதங்கேசரை பூஜிக்கப்பட்டு இவர்களுடைய அகத்தில் இருக்கின்றார். பரமேசுவரர் என்று கூறப்படும். துரீயசிவபெருமானே மதங்கேசர் என்ற பெயருடன் இத்தலத்தில் வீற்றிருக்கின்றார். ஆதிநாராயணர் என்ற பகவான் துரியராயிருந்தாலும் துரிய நிலையில் வியவகாரிக ஈசனென்று கூறப்படுவர். கார்ய காரணபேதமாய் ஜகத்காரணஞன ஈசுவரன் வேதாதிகளில் வர்ணிக்கப்படுகின்றான். பின்னமான முக்குணங்களால் மூர்த்தியைத் தரித்த பிரமவிஷ்ணு ருத்திரர்கள் கார்யேசரென்று கூறப்படுவர். இவர்கள் ஒவ்வொரு பிர்மாண்டத்திலும் வஸித்து முத்தொழிலை நடத்துபவர்கள் விசுத்த ஸத்துவமாயையில் தோன்றிய பிரம்மபிரதிபிம்ப மாயோபகிதன் ஆகிய இம்மூவரின் சமவாயமே காரணேசர் என்றும்குணேசரென்றுங் கூறப்படும். சிவன் சக்தி கணேசர் விஷ்ணு சூரியன் என்ற ஐவரும் காரணேசரின் மூர்த்திகள் கார்யேசரின் மத்தியில் கூறப்பட்ட சிவவிஷ்ணுக்கள். காரணேசரின் மத்தியிலும் கூறப்பட்டிருப்பதால் கேவலம் பிர்மா

மாத்திரமே கார்யேசரென்றுவிசேஷமாய் வேதாதிகளில் வர்ணிக்கப்படுகின்றார். பிரமாவின் தினகல்பம் முப்பது பேதமாய் கூறப்படும். காரணேசரின் தி ன க ல் ப ம் பஞ்சாயதனதேவதைகளின் பெயரால் ஐந்துவிதமாய்க்கூறப்படும். கணேகல்பத்தில் கணேசரும் புவனேசகல்பத்தில் சத்தியும் ஆதித்தியகல்பத்தில் ஸவிதாவும் மகாசம்பு கல்பத்தில் சிவனும் பூதிநாராயணகல்பத்தில் ஆதிநாராயணரும்உலகத்தையும்,பிரம்மவிஷ்ணுருத்திராகளையும்சிருட்டிசெய்து அவர்களுக்கு முத்தொழிலையும் அளிப்பவர்கள். பூதிநாராயணகல்பத்தில் துரீயமூர்த்தியான ஆதிநாராயணர் பிர்மாண்டத்தைச் சிருட்டிசெய்து பரமார்த்தேசராகிய பரமசிவத்தின்பிரம்மஸத்தையையடையும்பொருட்டு பிர்ம்மாண்டத்தில்பிரவேசித்துப் பரமனைத் தியானித்துக்கொண்டு பிர்மாண்டத்தில் சஞ்சரிக்கையில் மதங்காசிரமமென்ற இந்தஸ்தலத்தையும் மதங்கேச லிங்கத்தையும், கண்டு வியப்புற்று அங்கு தபசுசெய்யக்கருதிமதங்கேசலிங்கத்திற்கு மேற்குத்திக்கில் தாம்வசிக்க ஆச்சிரமம் ஏற்படுத்திக்கொண்டு மதங்கேசரைப்பூசித்து பஞ்சாக்ஷரத்தை ஜபித்துக்கொண்டு ஆயிரம் வருஷம் தபசுசெய்து வந்தார். மதங்கேசராகிய துரீயபரமேசுவரன் சந்தோஷமடைந்து, தரிசனமளித்து உலகசிருஷ்டிமுதலிய முத்தொழிலையும் நடத்த பிர்ம்மசத்தையை ஆதிநாராயண மூர்த்திக்கு அளித்தார். அவரும். பிர்ம்மசத்தையை பரமனிடம்பெற்று பிர்ம்மவிஷ்ணுருத்திரர் களைப்படைத்து முத்தொழிலையும், அவர்களுக்கு அளித்து அநேககோடி பிர்மாண்டங்களுக்கும் ஊர்த்துவநிலையிலுள்ள திருப்பாத்விபூதி வைகுண்டமென்ற தமதுலகையடைந்தார். இவ்விதம் ஆதிநாராயணர் என்ற விஷ்ணுவின் துரீயமூர்த்தியானவர் பூதிநாராயணமகாகல்பத்தில் மதங்கேசரைப்பூஜித்து தமது இஷ்டசித்தியையடைந்தார். ஆதிநாராயணரால் பூஜிக்கப்பட்டு அநுக்கிரகம் புரிந்த மதங்கேசமான்மியமான இவ்வத்தியாயத்தைப் படிப்பவர்கள் ஸர்வாபீஷ்டங்களையும், மதங்கேசர் கிருபையால் பெறுவார்.

அகஸ்தியர் ஆதிநாராயணரென்ற பகவானே இரண்டு புஜத்துடன் கோலோகத்தில் ராதையுடன் வஸிப்பவர் ஞுதாசுந் தரிஸகிதரான இவர் சுந்தரநாராயணரென்று வேதாதிகளில் கூறப்படுவர் சதாருண்தயுடன் ரதிக்கிரிடை செய்துவருபவர் ஒருக்கால் விரஜை என்ற சக்தியுடன் ரதிக்கிரிடை செய்வதை ருதைபார்த்து பொருமையுடன் கோபங்கொண்டு தனது கிரகம் சென்ருள். பிறகு கிருஷ்ணன் அவளுடைய கிரகம்செல்ல அவள் கோபத்துடன் கிருஷ்ணனை நிந்தித்துதிக்காரம் செய்தாள் பிறகு தமதுகிரகம் சென்றபேர் ழுதுஸ்ரீதாமாவென்ற கிருஷ்ணபக்தன் கோபத்துடன் இராதையைப்பார்த்து கிருஷ்ணனை நிந்தித்து பாவமூட்டை கட்டிக்கொண்ட நி பூலோகத்தில் பிறந்து கிருஷ்ணனுடைய பிரிவை யடைந்து துக்கமடையக்கடவாய் என்று சபித்தாள். அதைக்கேட்ட இராதைநி அசுரனுகஜனித்துருத்திரனல் மாணமடையக்கடவாய என்று ஸ்ரீதாமாவைச் சபித்தாள். இவ்விதம் சாபத்தைப்பெற்ற இருவரும் கிருஷ்ணனிடம் வந்து நடந்ததைக் கூறினர். அதைக்கேட்ட கிருஷ்ணன் நீ சங்கசூடாசுரனுக சனித்துருத்திரனுல் மரணமடைந்து பிறகு நம்மையடைவாய் என்றனுக்ரெகித்துஇராதையைப் பார்த்து நீதுவாபரயுகாந்தத்தில் பூமியில் கோபாலர்குலத்தில் விருஷபர் வாசுதையாய் ஜனித்து நமது சேர்க்கையைசொல்பகாலமடைந்து பிறகு சத வருஷம் வியோகத்தையும்மடைவாய் அதன்பிறகு உனது பூர்வ நிலையாகிய கோலோகத்தையடைவாய் என்று புகன்றார். அதை கேட்ட ராதை ஸ்ரீதாமா இடமுள்ள அன்பு தன்னிடமில்லை என்று கோமுற்று நீரும் என்னுடைய ஜனனகாலத்தில் பூமியில் ஜனித்து நூற்றெட்டு வருஷம் வசிக்கக் கடவீர் என்று சபித்தாள். இவ் விதம்ராதையால் சபிக்கப்பட்ட சுந்தர நாராயணர் துக்கமுற்று மதங்காசிரமமடைந்து ஆதிநாராயணரால் கற்பிக்கப்பட்ட ஆச்சிரமத்தில் வசித்துக்கொண்டு மதங்கேசரைப்பூசித்து தபசுசெய்துவந்தார். அநேக ஆயிரவருஷஞ் சென்றபிறகு மதங்கேசர் தரி

சனமளித்து சுந்தரநாராயணரைப்பார்த்து நீ இராதையின் சாபத்தை அநுசரித்து துவாபரயுகாந்தத்தில் வசுதேவருக்குப் புதல்வராய் அவதரிக்கப் போகின்ற பதரீநாராயணரின் சரீரத்தில் பிரவேசித்து நாநாவிதமான லீலைகளைச்செய்து பக்தஜனங்களை அநுக்கிரகித்துப் பூபார நிவிர்த்திசெய்து விட்டு இராதையுடன் உனது ஸ்தலத்தை அடைவாய் என்று அநுக்கிரகித்து மறைந்தார். இவ்விதம் கோலோக வாசியான சுந்தரநாராயணரும் மதங்கேசுரைப்பூசித்துத் தமது இஷ்டசித்தியைப் பெற்றார். வைகுண்டவாசியான லக்ஷ்மிநாராயணரால் பூசிக்கப்பட்ட சரித்திரத்தைச் சொல்லுகிறேன்.

பிருந்தையென்று பிரசித்திப்பெற்ற அசுர ராஜகன்னிகை புஷ்டி விநாயகரின் சாபத்தால் ஜலந்தரன் என்ற அசுரனைப் பதியாக அடைந்து, பதிவிரத்தியதருமத்தால் கியாதியைப் பெற்றாள். ஜலந்தராசுரன் பிரமாவின் வரத்தால் இந்திரன் முதலிய தேவர்களைவென்று தனக்கு வேலைக்காரர்களாகக் கொண்டு தான் மூவுலகையும் ஆண்டுவந்தான். இவ்விதம் வெகுகாலம் சென்றபிறகு தேவர்கள் அசுரனை ஏமாற்றி கைலாசம் சென்று பரமனைச் சரணமடைந்து பரமனாலாதரிக்கப் பட்டு அங்கேயே வசித்து வந்தார்கள்.

இதைக்கேள்வியுற்ற அசுரேந்திரன் கோபங்கொண்டு பரமனோடு யுத்தஞ் செய்து தேவதைகளை வதைக்கக் கருதி தமது சைன்யங்களுடன் கைலாசஞ் சென்றான். பிருந்தையின்பதிவிரத்தியத்தைக் கெடுத்தாலன்றி சலந்தரனை வதஞ்செய்ய முடியாதென்று பரமன் கருதி விஷ்ணுவையனுப்ப அவருஞ் சலந்தரரூபத்துடன் சென்று தமது மாயையால் அவளை மோகிக்கச்செய்து அவளுடன் சுரதலீலைசெய்து பதிவிரத்தியபங்கஞ்செய்தார். சலந்தரனும் பரமனுடன் யுத்தஞ்செய்து மரணமடைந்தான். சலந்தரன்மரண மடைந்தானென்றும், தன்னுடன் சுரதலீலை செய்தவர் விஷ்ணுவென்றும் கேள்வியுற்றுத்தெரிந்து கொண்ட

பிருந்தை அக்கினியிற் சரீரத்தை விட்டு விட்டாள். காமனால் வசிகரணஞ் செய்யப்பட்ட மாதவர்மோகத்தையடைந்து, பிருந்தையின் சுாதலீலையை நினைத்துக்கொண்டு அவளுடைய சாம்பலில் விழுந்து புரண்டு அழுதார். பிரமாவால் போதிக்கப்பட்டு மறுபடியும் அவளை யெழுப்பி ஸ்திரீயாக அடையக்கருதி மதங்காச்சிரம மடைந்து நாராயணாச்சிரமத்திலேயே வசித்துக்கொண்டு மதங்கேசரைப்பூசித்துத்தபசு செய்து வந்தார்.

தேவவருஷத்தால் ஆயிரம் வருஷஞ்சென்ற பிறகு மதங்கேசர் தரிசனமளித்துவிஷ்ணுவைப்பார்த்து இஷ்டமான வரத்தைக்கேளென்று சொல்ல. விஷ்ணுவஞ்சலிசெய்து கொண்டு பிரார்த்திக்கின்றார், பிருந்தையின் காதலீலையால் நான்மிகுந்த மோகத்தையடைந்து விட்டேன் அவளைமறுபடியும் பிழைக்கச் செய்துஎனக்கு ஸ்திரீயாக வளிக்கவேண்டுமென்றார். விஷ்ணுவின் பிரார்த்தனையைக்கேட்ட மதங்கேசர் ஓர்விதையையவர்கையிற் கொடுத்துஇவ்விதையைப் பிருந்தையின் சாம்பலிற்போட்டு ஜலஞ்சைவிட்டு அதிலிருந்துதுளசியென்ற வொருவிருக்ஷமும் அவ்விருக்ஷத்திலிருந்து துளசி யென்றபெயருடன் மாயையான பிருந்தையும் உண்டாவாள் அப்பிருந்தையை விதிபூர்வம் நீபெற்றுக்கொள். துளசி விருக்ஷம், காஷ்டம், மஞ்சரி, பத்திரம் முதலியவைகள் உனக்கு விசேஷபிரியகாமாயாகட்டும் பிருந்தாவனம் உனக்கு வாஸஸ்தானமாகட்டும் என்றுவரமளித்து மதங்கேசர் மறைந்தார். லெக்ஷிமி நாராயணாகிய விஷ்ணுவும் பிருந்தையையடைந்து மதங்கேசருடைய கிருபையால் முன்போல் வைகுண்டத்தில் வசித்து வந்தார். இதைப் படிப்பவர்களும் கேட்பவர்களும் தமதிஷ்ட சித்தியையடைவார்கள்.

அகஸ்தியர் சொல்லுகின்றார். சுவேத்துவிபவாசியான அனந்தநாராயணர் விஷ்ணுவின் காரியமூர்த்தியென்று கூறப்படுவர் இவர் ஆதிசேஷன்மீது பள்ளி கொண்டு யோகநித்திரைசெய்பவர். தினகல்பாதியில் இவர் நித்திரைசெய்து கொண்டிருக்கையில் அவருடைய காது மலத்தில்உண்டான, மது கைடவர் என்ற

இரண்டு அசுரர்கள் மூவுலகையும் நாசஞ்செய்வதைப் பார்த்து, பிரமா அனந்தநாராயணரை சரணமடைய அவரும் அவர்களுடன் யுத்தஞ் செய்து, தோல்வியடைந்து மதங்காச்சிரமஞ் சென்று நாராயணாச்சிரமத்தில் வசித்துக்கொண்டு மதங்கேசரைப்பூசித்து தபசு செய்து வந்தார். பன்னிரண்டுவருஷம் சென்ற பிறகு மதங்கேசர் தரிசனமளித்து தானவர்களை வதஞ்செய்யும் படியான சாமர்த்தியமளித்து மறைந்தார். மதங்கேசரின் வரப்பிரசாதத்தால் அனந்தநாராயணர் மதுகைடவர்களிடம் யுத்தஞ்செய்து அவர்களை சமுகரித்தார். அதனால் பிரமாவும், தேவமுனிவர்களும் மிகுந்த சுகத்தை யடைந்தார்கள்.

தருமநாராயணரென்ற, விஷ்ணு மூர்த்தியானவர் சக்கிரவாளகிரி பாரிசத்தில், சோதிர்ப்பூமியில் காளமேக நாராயணபுரத்தில் தமது கணங்களுடன் வசிக்கப்பட்டவர். திருப்பாத் விபூதி வைகுண்டம் விஷ்ணுவுக்கு முதலாவது ஸ்தலம், இரண்டாவது கோலோகம், மூன்றாவது வைகுண்டம், நான்காவது சுவேதத்வீபம், ஐந்தாவது காளமேக நாராயணபுரம், ஆறாவது மகாமேரு ஏழாவது சூரியமண்டலம், எட்டாவது கைலாசம், ஒன்பதாவது பதரீவனம், சாக்ஷாத்மகாவிஷ்ணுவின் ஒருகலையுடன்கூடினவர்பதரி நாராயணர் அவ்விதமே, சங்கரநாராயணர்ரும் இரண்டுகலையுடன் கூடினவர் சூரியநாராயணர் மேருவில் வசிக்கும் சாத்திய நாராயணர் மூன்று கலையுடையவர் காளமேக நாராயணபுரத்திலுள்ள தரும நாராயணர் நான்கு கலையுடன் கூடியவர் சுவேதத்வீபத்திலுள்ள அனந்தநாராயணர் ஆறுகலையுடன் கூடியவர், வைகுண்டத்தில்வசிக்கும், லெக்ஷிமி நாராயணர் எட்டுகலையுள்ளவர் கோலோகவாசியான ராதாகிருஷ்ணன் பன்னிரணடு கலையுடையவர். திருப்பாத் விபூதிவைகுண்டத்தில் வசிக்கும் ஆதிநாராயணர் சோடசகலையுடன் விளங்கப்பட்டவர் இவருக்கு அவதாரமில்லையாது. கோலோகவாசியின் அவதாரமூர்த்தி கிருஷ்ணன் வைகுண்டவாசியின் அவதாரம் தசரதருமன் சுவேதவாசியின் அவதாரம்

நரசிம்மமூர்த்தி சூரியநாராயணரின் அவதாரம் ஆதிவராக மூர்த்திமேருவாசியான சாத்திய நாராயணரின் அவதாரம் வாமனர், மச்சய கூர்ம முதலிய மூர்த்திகள் பதரி நாராயணரின் அவதாரங்கள் தத்தாத்திரேயர் முதலிய மூர்த்திகள் தருமநாராயணர் அவதாரங்கள் காலநேமியென்ற பலவானை அசுரன் இந்திரன் முதலிய தேவர்களை செயித்து யாகமுதலியவைகளைச் செய்யவொட்டாமல் முனிகளை வதைசெய்து, தேவரிஷிகண்டகனுயாசாண்டு வந்தான்.

தேவரிஷிகள் விஷ்ணுவைசரணமடைய தருமநாராயணர் தோல்வியடைந்து மதங்காச்சிரமஞ் சென்று, மதங்கேசரைப்பூசித்து தபசுசெய்து வந்தார். மதங்கேசர் தரிசனமளித்து மேருவிலுண்டான் சாரங்கமென்றவில்லையும் அக்ஷயஸாயகங்களுடன்கூடிய அம்புப் பெட்டிகளையும் அளித்து அசுரர்களைச்செயிக்கும் சக்தியையுங்கொடுத்து மறைந்தார் மதங்கேசரின் அநுக்கிரகத்தால் தருமநாராயணர் காலநேமி முதலிய தானவர்களை சம்கரித்து உலகத்தில் தருமத்தை ஸ்தாபித்தார்.

சுமாலியென்ற அசுரன் சூரியமண்டலத்திற்குச்சமதியான. காந்தியை யுடையவிமானத்தை சிவனிடம் பெற்றுத் தானும் அவ்விமானத்தில் ஏறிக்கொண்டு சூரியனுக்கு எதிரிடையாய் சூரியாஸ்தமனுதயமன்றி சஞ்சரித்து வந்தான் சூரியமண்டத்திலுள்ள சூரியமண்டலாந்தர வர்த்தியான சூரிய நாராயணருக்கு இதையறிவிக்க, சூரியநாருயணரமதங் காச்சிரமம்மடைந்து மதங்கேசரைப் பூசித்து பஞ்சாக்ஷாத்தைசெபித்து [illegible] செய்து வந்தார், மதங்கேசர் பிரசன்னராய் சங்கு சக்[illegible] மறைந்தார். பின்பு விஷ்ணு மதங்கேசரின் [illegible] அசுரனோடு யுத்தஞ்செய்து அவன்விமானத்தைப[illegible] அவனையுப் சங்கரித்தார்.

மேருவாசியான சாத்திய நாராயணர் அபூர்வமாதநத்தில் மந்தாம் அழிந்தினதால் திக்கமுண்டாகி மதங்காச்சிரமமடைந்து மதங்கேசரைப்பூசித்துதபசுசெய்துவந்தார். மதங்கேசர்

தரிசனமளித்து கூர்மரூபம் தரித்து முதுகில் மலையைத்தாங்கும்படியான சக்தியையும் அளித்தார், அவர்முதுகில் மலையைத்தாங்கியதால் தேவர்கள் அமுர்தத்தை யடைந்தார்கள்.

சிவனுடைய வாமபாக ரூபியான சங்கரநாராயணர் மோகினிரூபந்தரித்து தேவர்களுக்கு அமுர்தத்தையளித்தார் மோகினியைப்பார்த்த அரன் மோகமடைந்து அவளுடன் ரமித்தார். அவளிடத்தில் அரிகர புத்திரனை சாத்தா உற்பத்தியானார் அப்பொழுது கௌரி அவ்விடம் சென்று கோபங்கொண்டு விஷ்ணுவைப்பார்த்து சிவனுடன் உன்னைப்பூசிப்பவர்கள் நரகத்தையடையக்கடவர்கள் உன்புத்திரன் சூத்திராபூச்சியனாக ஆகக்கடவனென்று சபித்து சிவனுடன் கைலாசஞ்சென்றாள். தேவி சாபத்தால் விஷ்ணு துக்கமடைந்து மதங்காசிரமம் சென்று மதங்கேசனைப்பூசித்து பன்னிரண்டு வருஷம் தபசு செய்ய மதங்கேசர் தரிசனமளித்து, அவருடைய பிரார்த்தனையைக்கேட்டுரைக்கின்றார். என்னுடைய சத்திரூபியான வுனக்கு என்னுடைய சரீரத்திலிடது பக்கமளிக்கப்பட்டது உன்னையிடதுபார்சத்தில் உடையவென்னை சைவர்கள் பூசிக்கட்டும் எனனுடைய மூர்த்தியுடன் உன்னுடையமூர்த்தியைத்தனியாகவைத்துப்பூசிப்பவர்கள் பார்வதி சாபக்கிரகஸ்தர்களாகட்டும். உன்னுடையரூபமான என்னுடையசக்தி பீடத்தில் என்னை வைத்துப் பூசிப்பவர் புத்தி முத்தியை யடைவார் உன் புத்திரனே கோளதேசத்தில் பிராமணர் பூசிக்கட்டும் மற்றவிடங்களில் ஆதிசைவர்களும் சூத்திரக்கிராமங்களில் சூத்திரரும் பூசிக்கட்டும்தார்ச்சனர்களுக்கு சிக்ஷகனுப்ப் புரக்கிராமவனங்களில் அரிஹரபுத்திரன் வசிக்கட்டும் கைலாசத்தில் ஸாஸ்வதமானஸ் தானமளித்திருக்கின்றோம் என்றார் இவ்விதஞ்சங்கர நாராயணர் வரம்பெற்றுப் போரனந்தமடைந்தார் இதைப்படிப்பவர் இஷ்டசித்தியடைவார்கள்.

அகஸ்தியர் சொல்லுகிறார் பதரிநாராயணரற் பூஜிக்கப்பட்ட மதங்கேசர் மான்மியத்தைக் கேளுங்கள் விஷ்ணு

ஒருவரே தர்மப் பிரஸாபதிக்கு நான் என்றும் நாராயணனென்றுமிரண்டு ரூபமாய்ப் புத்திரராயவதரித்தார் விஷ்ணுவின் நான்கு வியக்த மூர்த்தியில் இராதா கிருஷ்ணனே வாசுதேவரென்று கூறப்படுவார். மாயையிற்றோன்றிய அவருடைய பிரதிபிம்பமே நாராயணரென்றும் அவித்தையிற்றோன்றிய பிரதிபிம்பமே நரனென்றுங்கூறப்படுவர் இந்நாராயணர்கள் லோகானுக்கிரக நிமித்தம் சிலகற்பங்களில் வைகுண்டவாசியான இலெட்சுமிநாராயணரிடமிருந்தும் சிலகற்பங்களில் சுவேதத்வீபவாசியான அனந்தநாராயணரிடமிருந்தும் சிலகற்பங்களிற்றரும நாராயணருடைய சரீரரோமங்களிலுமிருந்து உண்டானார்கள். அப்பேர்ப்பட்டவிவர்கள் தருமப்பிரசாபதியின் றவசால் அவருக்குப்புத்திராயவதரித்து தபோமார்க்கப்பிரசித்தியின் பொருட்டு குருவிஷியக்கிரமத்தை வெளியிட பதரிகாசிரமத்தில் அனேகரிஷிகளுடன் தபசு செய்துவந்தார்கள் பதரிவனத்தில் வசித்து வந்தபடியால் பதரிநாராயணரென்று நாராயணருக்குப் பெயர் தபோவேஷத்துடனும் வில் அம்பு பெட்டிகளையுடையவர்களாய் பதரிகாசிரமத்தில் இவர்கள் தபசு செய்துவந்தார்கள் சகஸ்திரகவசனென்ற ஓர் அசுரன் பிரமாவின் வரப்பிரசாதத்தால் இந்திரன் முதலிய தேவர்களைஜெயித்து தேவேந்திரசம்பத்துகளையடைந்து. சத்ததீவுகளிலுள்ள அர்சர்களை ஜெயித்து ஜெயயாத்திரையாகப் பதரிவன மார்க்கமாய் தன்னிராஜியஞ்செல்லுகையில் அவ்விடத்தில் வில்லம்புகளைத் தரித்த நாராயணர்களைப் பார்த்து கோபங்கொண்டு அவர்களையுத்தத்திற்கு கூப்பிட்டான். இருவர்களும் அவனுடன் யுத்தஞ்செய்தார்கள். அசுரனை ஜெயிக்கமுடியாதென்று நாராயணர்கருதி நரனை அவனுடன் யுத்தஞ்செய்ய வேற்படுத்திவிட்டு நாராயணர் மதங்காச்சிரமஞ்சென்று மதங்கேசரைப்பூசித்துத் தபசுசெய்து வந்தார் ஆயிரம் வருஷஞ்சென்றபிறகு மதங்கேசர் தரிசனமளித்து நாராயணரைப்பார்த்து அசுரன் ஆயிரம் கவசமுள்ளவன் அவைகள் யாவற்றையும் அறுத்தால் தான் அவன்மரணமடைவான், ஆயிரம் வருஷந்தபசு செய்தவன்

ஒரு கவசத்தை யறுக்கலாம் ஆகைபால் இவ்விதம் தபசுசெய்து அவனை வதஞ்செய்யவேண்டுமென்றுபிர்ம்மாவின் வாக்கியத்தைச் சொல்லிமறைந்தார். இதைக்கேட்டு நாராயணர் பதரீவனஞ் சென்று நானுக்குஉண்மையைத் தெரிவித்துத் தபசுசெய்ய மதங் காச்சிரமம் அனுப்பித் தாம் அவனுடன ஆயிரம் வருஷம் யுத்தஞ் செய்து ஓர் கவசத்தையறுத்தார். அதற்குள் நரன் ஆயிரம் வருஷந்தபசு செய்து அவ்விடம் வந்து யுத்தஞ்செய்ய ஆரம்பித்தார். நாராயணர் மதங்காசிரமஞ் சென்று தபசுசெய்தார். இவ்விதந் தபசும் யுத்தமும் மாறி மாறி நாராயணர்கள் செய்து அசுரனுடைய ஆயிரங்கவசங்களையுமறுத்து நரனே அவனைஸம்காரஞ் செய்தார். இவ்விதம் மதங்கேசர் நராராயணரென்ற பதரிநாராயணராலும் வெகுகாலந் தபசுசெய்து பூசிக்கப்பட்டார், இந்தபதரி நாராயணரே மதங்கருக்கு நாராயணீயமென்ற யோகத்தை யுபதேசித்தார் இவ்விதம் நவநாராயணர்களாலும் மதங்கேசராகிய பரமேசுவரனை பூசிக்கப்பட்டவர் நவ நாராயணர்களும் தபசுசெய்யும் பொழுதுதங்கியதுஒரே இடம் அதுதான் இப்பொழுதும்நாராயணப்பெருமாள் கோவிலாக விளங்குகின்றது இது மதங்கேசரின் ஆலயத்திற்குச்சமீபத்திலுள்ள நவநாராயணர்களும் பூசிக்கப்பட்டமதங்கேசரின் மான்மியத்தைப் படிப்பவர்களும் கேட்டவர்களும் இகத்தில் சகலபோக பாக்கியங்களையும் அனுபவித்து மோக்ஷத்தையுமடைவார்கள்.

## துவாதச சிவ விஷ்ணுக்கள் மகாத்மியம்.

இவ்விதமாக விஷ்ணு மூர்த்திகளுடைய மகிமையைக் கேட்டு மகாரிஷிகள் ஆச்சரியமுற்றவர்களாய் நவநாராயணரென்னும் விஷ்ணுவை மிகுந்த அன்புடன் பூசித்து வேதமந்திரங்களால் தோத்திரஞ்செய்தார்கள் அந்தமகாரிஷிகளுக்கு பூதேவி சிதேவி சமேதராய் மகாவிஷ்ணுபிரத்தியக்ஷமாக தோன்றினார் அச்சமயத்தில் கேசவர்முதலான பதினொருவிஷ்ணுமூர்த்திகளும் நாராயணர் ஆலயக்ஷேத்திரத்திலேயே கெருடவாகனரூடர்களாய் இரண்டு சத்திசமேதராய்த்தோன்றினார்கள் நடுநாயகமாக

நாராயணமூர்த்தியும் நாலுபக்கத்திலும் மற்றைப்பதினொரு மூர்த்திகளும் சூழ்ந்து நின்று அம்மகாரிஷிகளுக்கு காட்சிகொடுத்தார்கள் வசிஷ்டாதிமகாமுனிவர்கள் அங்ஙனந்தோன்றி நிற்கும் துவாதசவிஷ்ணுமூர்த்திகளையுந்தரிசித்து புகழ்ந்தார்கள் இங்ஙனமாக வருஷந்தோறும் உத்திராயண புண்ணியகாலமாகிய மகரமதியில் அமாவாசியிலாவது தக்ஷிணாயன புண்ணியகாலமாகிய ஆடியமாவாசியிலாவது தோன்றிவந்து பக்தகோடிகட்குக்காட்சிகொடுத்து அவ்வவ்வன்பர்களுக்கு வேண்டிய வரங்களை யளித்து அனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் அம்முனிவர்கட்கு அங்ஙனமே வரங்களையளித்துவிட்டு துவாதசவிஷ்ணுமூர்த்திகளும் அந்தரத்தியானமானார்கள் பின்பு முனிகுழாங்கள் இலெட்சுமிநாராயண மூர்த்தியாலயஞ்சென்று அன்புடன் இலெட்சுமியைப்பூசித்து அவ்விடம் விட்டுப்புறப்பட்டு மதங்கேஸ்வரசந்நிதிசென்று அவரைப்பக்தியுடன் அருச்சித்து உருத்திராக்ஷமுதலாகிய வேதமந்திரங்களால் தோத்திரித்தார்கள். அப்பொழுது மதங்கேஸ்வரர் ஆனந்தமடைந்தவராய் அம்பிகைசமேதராய் விநாயகர், சுப்பிரமணியர். மோகினி முதலிய கணங்களுடன் சூழ, தருமவடிவமாகியயிடபவாகனத்தில் எழுந்தருளி காட்சி கொடுத்தார். அச்சமயம் மற்றைப்பதினொருவிஷ்ணுக்களாலும் பூஜிக்கப்பட்ட சிவமூர்த்திகளாகிய விசுவாசகர் பிரியர் முதலான பதினொருமூர்த்திகளுந்தங்கடங்கள் சக்தியுடனும் பரிவாரதேவருடனும் இடபவாகனரூடர்களாய்த்தோன்றி அந்த மதங்கேஸ்வரவாலயத்தில் மதங்கேஸ்வரர் நடுநாயகமாக நிற்கப் பக்கங்களிற்சூழ்ந்து நின்று அம்முனிவர்கட்குத்தெரிசனந்தந்தார்கள் இங்ஙனந்தோன்றியசிவமூர்த்திகளை முனிகுழாங்கள் கண்டு அன்போடு தரிசித்து இவ்வாறு பன்னிருவரும் மாசிமாதத்து அமாவாசியன்று இரவு தோன்றிவரும் அமாவாசியன்றாவது கடகமீ அமாவாசியிரவுதோன்றிவருடந்தோறும் பக்தகோடிகட்குவேண்டிய வரங்களைகொடுத்து அருளவேண்டுமென்று பிரார்த்திக்க அங்ஙனமே கொடுத்தோமென்று அருள் புரிந்து அம்மூர்த்திகள் பன்னிருவரும் மறைந்து விட்டார்கள்.

இவ்வாறு ஐந்துகாண்டங்களும், அவற்றின் உட்பிரிவாகிய நூறு அத்தியாயங்களும், அவற்றில் அடங்கிய நாலாயிரம் ஸ்லோகங்களும் கொண்ட இந்த மதங்ககண்டமானது, வியாசமுனிவரிடம் கேட்டபடி உங்களுக்குச் சொல்லப்பட்டதென்று சூதபுராணிகர் கூறியிருக்கின்றார். இந்தக் கிரந்தமானது சிவன்விஷ்ணுவாகிய இருவர்களுக்கும் பிரீதியை உண்டு பண்ணத்தக்கது; ஆதலால் இதற்கு ஒப்பான நூல்வேறு ஒன்றுமில்லை. இதை அன்புடன் படிப்பவர்களும் கேட்பவர்களும் இஷ்டகாமியார்த்தங்களையும் புருஷார்த்தமாகிய தர்மார்த்த காம மோக்ஷங்களையும் அடைவார்களென்பது நிச்சயம். இதில் சந்தேகமில்லை என்று மூன்றாலும் சத்தியமாகச் சொல்வேனென்று சூதபுராணிகர் கூறி முடித்தார்.

இங்ஙனம் ஸ்காந்தத்தில் ஸனத்குமாரஸம்ஹிதையில் உள்ள மதங்ககண்டமென்னும் நூலானது ஐந்துகாண்டங்களுடன் முடிவுபெற்றதென்று சூதமுனிவர் வசிஷ்டர் முதலிய முனிவர்களுக்கு அன்புடன் கூறிமுடித்தருளினார்.

## பராசவனபுராணம்

## முற்றிற்று.

---

இவ்வாறு சொல்லப்பட்ட நாலாயிரம் கிரந்தம் அடங்கிய பராசவனபுராணம் தமிழ் அறிஞர்களுக்குப் பயன்படும் வண்ணம் சங்கிரகமாகத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிடப்பட்டது.

## சிறப்புப்பாயிரத்தில் 'மாபாலன்' என்னும் செய்யுள் உரை.

மா பாலன்—வலியமழுவனும்,— மனப் பாலன்— அன்பர் உளத்துறைபவனும்,— மகிழ்ப் பாலன்— நித்தியானந்த குணமுடையவனும்,— மதிப் பாலன்— பாதிமதியையுடையவனும்,— மலர்ப்பால் அன்பன் கோபாலன கோ பாலன்— தனது திருவடியில் அன்பனாகிய விஷ்ணு என்னும் இடபத்தைக் காப்பவனு

மாகிய சிவபிரானது,— குணப் பாலன் — ஆனந்த உரிமையுடையவனும்,— குறிப் பாலன் கொடைப் பாலன் — (இரப்போர்) குறிப்பறியுந்தன்மையனும் (அவர் இரத்தற்குமுன்) ஈதற்கண் இன்பமுடையவனும்,— பூ பாலன் — (தனக்குரிய) பூமியைப் பரிபாலிப்பவனும்,— சிவலோகத்திற்கு உரிமை உடையவனும்,— புகழ்ப் பாலன் — "ஒளி, ஒங்குபுகழ்" முதலிய கீர்த்திப் பகுதிகளையுடையவனும்,— பொருட் பாலன் — இரத்தினம் பொன் வெள்ளி முதலிய செல்வங்களை யுடையவனும்,— பரம்பொருளின் அணுக்கத்தொண்டனும்,— பொறைப் பாவன் — அடக்கமுடையவனும்,— பிறர் செய்யுங் குற்றத்தைப்பொறுக்குங் குணமுடையவனும் ஆகிய,— புனித இராசகோபாலன் — பரிசுத்தமுடைய இராசகோபாலசுவாமிகள்,— குறிப்பால் ஆலயப் பாலின் — சிவலிங்கத்திற்குரிய ஆலயப்பகுதிகளின்கண்,— கோது இல் பணி குறித்துச் சூழ்ந்து — குற்றமில்லாத திருப்பணி செய்யக் கருதி யோசித்து என்க.

குறிப் பாலாலயப்பாலிற் கோதில் பணி குறித்துச்சூழ்ந்து என்பதனை, குறிப் பால ஆலயம் பால் இன் கோது இல் பணி எனப் பிரித்து, சிவலிங்கத்திற்குரிய பாலாலயப் பகுதிகளையும், இனிய குற்றமில்லாத திருப்பணிகளையும் எண்ணி ஆலோசித்து எனப் பொருள் கொள்ளுதலும் ஒன்று. பாலாலயம்— (சிவலிங்கத்தைப் பால ஸ்தாபனஞ் செய்தற்குரிய) சிறு கோயில்.

இன்னும் இச்செய்யுளுக்குப் பலபொருள் கூறலாம். விரிப்பிற் பெருகும். ஆதலான், அவற்றையும், இதன்கண் வரும் சொற்பின்வருநிலை, பொருட்பின்வருநிலை, சொற்பொருட்பின்வருநிலை முதலிய அணிகளையும், பிறவற்றையும் அறிஞர் உய்த்துணர்க.